Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.

27° 26°

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 329 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 05, செவ்வாய் 22.10.2013

போரில் உயிர் நீத்தவர்களை அஞ்சலிக்க வாய்ப்பு வேண்டும்

யாழ். தாதியப் பரிபாலகர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 22
போர் காரணமாக உயிரிழந்த பொது மக்கள், போராளிகள், பணியாளர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான சந்தர்ப்பம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். அதற்கான சூழலை இறைவன் ஏற்படுத்த வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.
இவ்வாறு தெரிவித்தார் யாழ். போதனா வைத்தியசாலை பிரதம தாதியப் பரிபாலகர் ரி.சந்திர மௌலீஸ்வரன்.

21

ஆயிரத்து 800 முறைப்பாடுகள் காணாமற்போனோர் தொடர்பில்

யாழ்ப்பாணம், ஒக். 22
காணாமற்போனவர்கள் தொடர்பில் ஆயிரத்து 800 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது. அந்த விவரங்களை விரைவில் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அது கூறியுள்ளது.
காணாமற்போனவர்கள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு விவரங்களை அனுப்புவதற்காக மன்னார் பிரஜைகள் குழு பதிவு நடவடிக்கைகளை முன்னெடுத்தது.
வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் பிரஜைகள் குழுவால் முன்னெடுக்கப்பட்ட பதிவு நடவடிக்கைகளில் ஆயிரத்து 800 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மேலும் முறைப்

21

ஆணைக்குழுவுக்கு 702 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஒக். 22
காணாமற்போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு இதுவரை 702 முறைப்பாடுகளே கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.
1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம்

21

துயிலும் இல்லங்களை அபகரிப்பின் போராட்டம்

தமிழ்க் கூட்டமைப்பும் சிவில் சமூகமும் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 22
"தமிழின விடுதலைக்காகப் போராடி - தம் இன்னுயிர்களை அர்ப்பணித்த தமிழ் உறவுகளான மாவீரர்களின் துயிலும் இல்லங்களில் படையினரின் ஆக்கிரமிப்பு தொடருமானால் தமிழ் மக்கள் கிளர்ந்தெழுந்து போராடுவர். இதை யாராலும் தடுத்துநிறுத்த முடியாது."
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் சிவில் சமூகமும் கடும் கொதிப்புடன் கருத்துத் தெரிவித்துள்ளன.
"மாவீரர் துயிலும் இல்லங்களில் அஞ்சலி செலுத்துவது தமிழ் மக்களின் உரிமை. இதைத் தடுத்துநிறுத்துவது அநாகரிகமானது. இது மிகப் பெரும் மனித உரிமை மீறல்; காட்டு மிராண்டித்தனமான செயல்" என்றும் அவை குமுறியுள்ளன.
கிளிநொச்சி கனகபுரம், முழங்காவில் மற்றும் முல்லைத்தீவு தேராவில் ஆகிய பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் கடந்த சில தினங்களாகப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. துயிலும் இல்லங்களைச் சுற்றி முட்கம்பி வேலி போடப்பட்டு அங்கு படை முகாம்களை அமைக்கும் நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

> மாவீரர் துயிலும் இல்லங்களில் அஞ்சலி செலுத்துவது தமிழ் மக்களின் உரிமை. இதைத் தடுத்து நிறுத்துவது அநாகரிகமானது. இது மிகப்பெரும் மனித உரிமை மீறல்; காட்டு மிராண்டித்தனமான செயல்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் சிவில் சமூகமும் தமது நிலைப்பாடுகளைத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளன.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,
"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வடக்கு மாகாண சபையின் முதலா வது அமர்வு எதிர்வரும்25ஆம்திகதி

21

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு பச்சைக்கொடி

கொழும்பு, ஒக்ரோபர் 22
"வடக்கு - கிழக்கு இணைப்பு உள்ளிட்ட ஏனைய அனைத்து விடயங்கள் குறித்தும் சாதகமாகப் பரிசீலிக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாராகவுள்ளது. இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்துணர்வுடன் செயற்பட முன்வர வேண்டும்."
இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண சபைக் குழுத் தலைவர் ஏ.எம். ஜெமீல் தெரிவித்தார்.
13ஆவது திருத்தச் சட்டத்தை வலுப்படுத்துவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி கிழக்கு மாகாண முஸ்லிம்கள் காட்டியுள்ள சமிக்ஞையைக் கருத்திற் கொண்டு சாதகமாக - பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டிய தார்மீகக் கடமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், வடமாகாண முதல்வர் க.வி.விக்னேஸ்வரனுக்கும் இருக்கின்

21

வடக்கின் கல்வியை சீராக்க வாருங்கள்

மாகாண கல்வி அமைச்சர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22
வடக்கு மாகாணத்தின் கல்வியைச் சீராக, கண்ணியமாக முன்னெடுத்துச் செல்ல அனைவரும் என்னுடன் சேர்ந்து வாருங்கள். கல்வியை உத்தமமாக முன்னெடுத்துச் செல்ல விரும்புகிறேன்.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா.
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் வெளியிடப்படும் 'ஆசிரியான்' என்னும் பத்திரிகை நீண்ட காலங்களுக்குப் பின்னர் நேற்று திங்கட்கிழமை

21

கூட்டமைப்பின் ஆதரவாளர் மீது கடற்படை காட்டுமிராண்டித்தனம்

அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 22
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர் ஒருவர் கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.
ஊர்காவற்றுறைப் பகுதியில் வைத்தே

21

வடக்கு மாகாண கட்டடத்தில் பால் காய்ச்சும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 22
வடக்கு மாகாண சபையின் புதிய கட்டடத்துக்கான பால் காய்ச்சும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபை அலுவலகத்தில்முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
வடக்கு மாகாண சபையின் கன்னியமர்வு எதிர்வரும் 25 ஆம்

21

ஒரே இரவில் 10 வீடுகளில் கொள்ளையர் கைவரிசை

வடமராட்சி கிழக்கில் ஞாயிறு இரவு சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 22
வடமராட்சி கிழக்குப் பகுதியில் ஒரே இரவில் 10 வீடுகளில் பல் லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பணம், பொருள் என்வற்றைச் சூறையாடியது கொள்ளையர் குழு.
வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள மருதங்கேணி வடக்கு, சுனாமிக் குடியிருப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
சுனாமி குடியிருப்புப் பகுதியில் 10 வீடுகளுக்குள் நள்ளிரவு நுழைந்த திருடர்கள் தங்க நகைகள், கைத்தொலைபேசிகள், ரொக்கப்பணம் உட்பட பலவற்றைக் கொள்ளையிட்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம் இரவு பெய்த பலத்த மழையைத் தமக்குச் சாதகமாக பயன்படுத்தி வீடுகளுக்குள் புகுந்த கொள்ளையர்கள் இந்தத் துணிகரக் கொள்ளையை மேற் கொண்டுள்ளனர்.

21

பிரதேச சபைத் தலைவருக்கு 'பாபுள்' விற்றார் வியாபாரி

நெல்லியடியில் கடையை மூடுமாறு உத்தரவு

மாங்குளம், ஒக். 22
பிரதேச சபையின் தலைவருக்கு 'பாபுள்' என்று கூறப்படும் போதை கலந்த பாக்கை விற்பனை செய்ய முயன்றார் பெட்டிக் கடை வியாபாரி.
இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை மாலை நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்றது.
வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசுவுக்கே 'பாபுள்' பாக்கு பொதியை விற்க முயற்சித்தார் வியாபாரி.
இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:
நெல்லியடி - பருத்தித்துறை வீதியில் நெல்லியடிச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள பீடாபாக்கு விற்பனை செய்யும் பெட்டிக்கடையில் போதை கலந்த

21

சகல ஆன்மீகத் தலைவர்களும் கசினோவை எதிர்க்க வேண்டும்

ஐ.தே.க எம்.பி கோரிக்கை

கொழும்பு, ஒக்.22

கசினோ சட்ட வரைவை எதிர்க் கட்சி மட்டும் எதிர்க்காமல் ஆன் மீகத் தலைவர்கள், உட்ட்ப அனைவரும் எதிர்க்க வேண் டும் என ஐக்கிய தேசியக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பி னர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

நேற்றுத் திங்கட்கிழமை நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் பேசும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கட்சிக் குழுக் கூட்டத்தில் கசினோ சட்ட வரைவு தொடர்பாகப் பேசப் பட்டு அதற்கான எதிர்ப்பும் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட் டது. ஐக்கிய தேசிக் கட்சியின் காலத்தில் 'ஜாக் பொட்' சூது இல் லாமல் செய்யப்பட்டது. ஜே.ஆர். ஜெயவர்த்தன சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய் திருந்தாலும் அவரும் இத் தகைய செயல்களுக்கு எதிர்ப் பைத் தெரிவித்திருந்தார்.

இலங்கை வியாபார நிலைய மாக மாறிவரும் நிலையை அவர் அன்று கண்டார். அதுவே இன்று நடைபெறுகின்றது.

என்னதான் கட்டங்கள் வளர்ந்து நின்றாலும் கலாசாரம் தாக்கப் படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் கசினோ முற்றுமுழுதாக நீக்கப்படும். லொறிகளின் முன்னால் "புத் தம் சரணம்" எனப் போட்டுக் கொண்டு உள்ளே தீய பொருள் கள் ஏற்றப்படுவது குறித்து விழிப்பாக இருக்க வேண்டும் - என்றார். (த-10)

பிரதியமைச்சுப் பதவிக்காக அரசிடம் கையேந்தவில்லை

முஸ்லிம் காங்கிரஸ் கூறுகிறது

கொழும்பு, ஒக்.22

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடமோ அல்லது அரசிடமோ நாம் பிரதியமைச்சுப் பதவிகளை யாசகம் கேட்கவில்லை என முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித் துள்ளது.

இது குறித்து கட்சியின் செய லாளர் ஹசன் அலி தெரிவித்த தாவது:

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதியிடம் மூன்று பிரதி அமைச்சுப் பதவி களைக் கோரியதாக வெளியான தகவல் முற்றிலும் வதந்தி. கட்சி மட்டத்தில் அவ்வாறான உத்தியோகபூர்வ பேச்சுக்கள் எவையும் நடைபெறவில்லை. ஆனால் திரைமறைவில் எவ ரேனும் தனிப்பட்ட ரீதியில் தமக்கு பிரதி அமைச்சு பதவி கிடைப்பதற்காகப் பேசினார் களா அல்லது அரசு முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப் பினர்களுடன் பேசியதா என்ற விவரங்கள் எனக்குத் தெரி யாது என்றார். (த-10)

மாகாண சபை உறுப்பினர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்கு வியாழனன்று

யாழ்ப்பாணம், ஒக்.22

வடக்கு மாகாண சபைக்கு முதன் முதலில் தேர்வு செய்யப்பட் டுள்ள உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

மாகாண சபை 1987ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டுள்ள போதும் வடக்கு மாகாண சபைக் கான தேர்தல் முதன் முதலில் இந்த வருடமே இடம்பெற்றது. மாகாண சபையின் ஆட்சியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 30 ஆசனங்களுடன் கைப்பற் றியது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 8 ஆசனங்களைக் கைப்பற்றியது.

இந்த உறுப்பினர்களுக்கான பயிற்சிகள் மாகாண சபை மற் றும் உள்ளூராட்சி அமைச்சி னால் நாளை மறுதினம் வியா ழக்கிழமை காலை 8.30 மணி யிலிருந்து பிற்பகல் 2.30 மணி வரை யாழ்.ரில்கோ விடுதியில் இடம்பெறவுள்ளது. (த-5)

நீரியல் வள திணைக்களத்துக்கு கிளிநொச்சியில் புதிய கட்டடம்

சண்டிலிப்பாய், ஒக்.22

கிளிநொச்சி மாவட்டத்தில் கடற் றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்துக்கு 30 மில் லியன் ரூபா செலவில் சகல வசதிகளையும் கொண்ட புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

கடற்றொழில் வள அமைச்சு வழங்கிய நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தக் கட்டடத்துக்கு முதற்கட்டமாக 60 லட்சம் ரூபா திணைக்களத் துக்கு வழங்கப்பட்டுள்ளது.

155 ஆம் கட்டையில் அமைக் கப்படவுள்ள குறித்த கட்டடத் துக்கான பணிகளை ஆரம்பிப் பதற்கு ஒப்பந்தகாரர்களிடமி ருந்து கேள்வி கோரப்பட்டுள்ளது. இதே வேளை குறித்த திணைக் களம் தற்காலிகமாக அமை மக் கப்பட்டுள்ள கட்டடத்தில் தற்போது இயங்கி வருவதுகுறிப்பிடத்தக்கது.

(வ-15)

பொதுநலவாய மாநாட்டையொட்டி அரச ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இருந்து பொதுநல வாய நாடுகளின் கொடிகளைத் தாங்கிய ஊர்திகள் கொழும்புக்கு புறப்பட்டன. நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் நேற்று இதன் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன.

இதில் வட பகுதி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டீன், யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பௌத்த, இந்து, கிறிஸ்தவ மதத் தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள், ரூபவாகினி கூட்டுத்தாபனத் தலைவர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

ஆர்வம் காட்டாத வாக்காளர்கள்

யாழ்ப்பாணம், ஒக்.22

வாக்காளர் பெயர்ப் பட்டியலி ருந்து நீக்கப்படுபவர்களாக அறி விக்கப்படுபவர்கள் உரிமைக் கோரிக்கைப் படிவத்தின் ஊடாக மீளவும் பதிவு செய்ய ஆர்வம் காட்டாத நிலையிலேயே இருப் பதாகத் தேர்தல்கள் திணைக் களத்தினர் தெரிவிக்கின்றனர்.

2013 ஆம் ஆண்டுக்கான புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின் றன. கிராம சேவையாளர்க ளால் வழங்கப்பட்ட தகவல்க ளின் பிரகாரம் புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியலில் சேர்க்கப்படு பவர்களின் பெயர்கள், நீக்கப் படுபவர்களின் பெயர்கள் என் பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் யாழ்ப்பா ணத் தேர்தல் தொகுதியில் 26 ஆயிரம் பேர் நீக்கப்படுகின்ற னர் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. இவ்வாறு நீக்கப்படுபவர் கள் தம்மை வாக்காளர் பெயர்ப் பட்டியலில் இணைத்துக்கொள்ள விரும்பினால் உரிமைக் கோரிக் கைப் படிவத்தின் ஊடாக விண் ணப்பிக்க முடியும்.

யாழ்.மாவட்டத்தில் இதுவரை யில் 291 பேரே உரிமைக் கோரிக்கைப் படிவத்தினூடாக விண்ணப்பித்துள்ளனர். பெரும் பாலானவர்கள் இந்த விடயத் தில் ஆர்வம் இல்லாமல் இருக் கின்றனர்.

இதன் காரணமாக 20 ஆயி ரத்துக்கும் மேற்பட்டவர்கள் புதிய வாக்காளர் பெயர்ப்பட்டி யல் ஊடாக நீக்கப்படும் நிலை தோன்றியுள்ளது.

இந்த மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் உரிமைக் கோரிக்கை படிவத்தினூடாக விண்ணப் பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள் ளது. (த-5)

கசினோ முதலீட்டாளர் பாக்கருடன் இணைகின்றார் மைக்கல் கிளார்க்

உலகின் கலினோ சூதாட்ட மன்னன் என அழைக்கப்படும் ஆஸ்திரேலியாவின் ஜேம்ஸ் பாக்கர் க்ரவுன் மற்றும் ஆஸ்தி ரேலிய கிரிக்கெட் வீரர் மைக் கல் கிளார்க் ஆகியோருக்கு இடையில்உடன்படிக்கைஒன்று கைச் சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கையில் 400 மில்லி யன் டொலர் செலவில் அமைக் கப்படவுள்ள கலினோ நிலை யத்திற்கு பிரசாரம் செய்யும் வகையில் மைக்கல் கிளார்கு டன், ஜேம்ஸ் பாக்கர் க்ரவுன் உடன்படிக்கை செய்து கொண் டுள்ளார் என ஆஸ்திரேலிய இணையங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

கிரவுன்ஸ் நிறுவனம் முன் மொழிந்துள்ள கல்வி மற்றும் பயிற்சி அம்சங்கள் வெற்றிகர மாக இருந்தால் அதற்கு ஆத ரவு வழங்கப்படும் என கிளார்க் இணக்கம் தெரிவித்துள்ளார்.

கிளார்க், தொழில் வாய்ப்புத் திட்டங்களுக்கு ஆதரவு வழங் குவார் என்றும் கல்வித் தூதுவ ராக இலங்கைக்குப் பயணம் செய்து வேலை தேடுபவர்கள் மற்றும் பயிற்சி பெறுபவர் களுக்கு ஆத ரவு வழங்குவார் எனவும் ஜேம்ஸ் பாக்கர்ஸ் க்ர வுன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 450 அறைக ளைக் கொண்ட சூதாட்ட நிலை யம் ஒன்றை அமைக்க பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது. அது தொடர் பான சட்டமூலம் ஒன்றையும் நாடாளுமன்றில் சமர்பிக்க அரசு நடவடிக்கை எடுத்து வரு கிறது.

இந்த கலினோ திட்டத்திற்கு பிர தான எதிர்க்கட்சி உள்ளிட்ட ஏனைய எதிர்க்கட்சிகள் மற் றும் மத பிரிவுகளும், ஆளும் கட்சியில் உள்ள கூட்டணிக் கட்சிகள் சிலவும் எதிர்ப்புத் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக் கது.

ஆயுதங்கள் மீட்பு

வவுனியா முள்ளியடி பிரதேசத் தில் துப்பாக்கி மற்றும் ஒரு தொகுதி ரவைகள் என்பன பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ரி-56 துப்பாக்கி, 7.62 மி.மீற்றர் ரக துப் பாக்கி ரவை 171, 5.56 மி.மீற் றர் ரவைகள் என்பன கண்டெ டுக்கப்பட்டுள்ளன. இவை தொடர் பான மேலதிக விசாரணைகள் வவுனியா பொலிஸார் மேற் கொண்டுவருகின்றனர். (த-400)



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் "ஆசிரியன்" பத்திரிகை வளியீட்டு விழா நேற்றுக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்றது. இந்த விழாவில் பிரதம விருந்தின ராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா அதனை வெளியிட்டு வைக்க வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வராஜா பெற்றுக் கொள்கிறார். இந்த நிகழ்வில் கல்வியியலாளர்கள் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர். (த-21)

மாபெரும் மலிவு விற்பனை
தீபாவளியை முன்னிட்டு
10% – 20% வரை
சிறார்களுக்கான ஆடைகள் மலிவு விலையில்
★ Home Theatre ★ Water Filter ★ Rice Cooker ★ 5 ஆறுதல் பரிசுகள்
புதிய முறையில் சைக்கிள் (Family Brand), கார் சீற், தொட்டில், வோக்கர், Toller
புதிய மெருகூட்டலுடன்
மாபெரும் மலிவு விற்பனை
ABI BABY MART SHOW ROOM
3000/= இற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களிற்கு
பரிசுகள் காத்திருக்கின்றன.
உங்கள் மழலைகளை மேலைத்தேய நவநாகரிகமான உலகிற்கு ஏற்றவாறு வளர்ப்பதற்கான
சகல பொருள்களையும் பெற்றிட.
267, Brown Road, Jaffna.
ABI BABY MART (Face book)

சாவகச்சேரி சந்தையில் தெற்கு வர்த்தகர்களுக்கு தடை

தீபாவளி வியாபாரத்துக்காக

தென்மராட்சி,ஒக்.22

சாவகச்சேரி பொதுச்சந்தையில் தீபாவளி வியாபாரத்துக்காக தென்னிலங்கை வியாபாரிகள் வருகை தந்து வியாபாரத்தில் ஈடுபடுவது சாவகச்சேரி நகரசபையால் தடை செய்யப்பட்டுள்ளதாக நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். கடந்த வருட தீபாவளி வியாபாரத்துக்காக 200இற்கு மேற்பட்ட வியாபாரிகள் சந்தையில் வியாபாரத்தை மேற்கொண்டதால் நவீன சந்தையில் உள்ள வர்த்தக நிலையங்களில் வியாபாரமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

இந்த நிலையில் வர்த்தகர்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து கடந்த சித்தி ரைப் புத்தாண்டு வியாபாரத்துக்காக வருகை தந்த வியாபாரிகள் சந்தைக்கு வெளியே நகரசபை பொதுவிளையாட்டு மைதானத்தில் கொட்டகைகள் அமைத்து வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

சாவக்சேரி நகர்ப் பகுதி வர்த்தகர்களின் வேண்டுகோளின் பிரகாரம் பொதுச் சந்தையில் தீபாவளி வியாபாரத்துக்கு வெளி வியாபாரிகளை அனுமதிப்பதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தலைவர் மேலும் தெரிவித்தார். (வ-9)

மீள்குடியமர்வுக் கொடுப்பனவு

வலி.தென்மேற்கு, ஒக்.22

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீள்குடியமர்ந்த குடும்பங்களில் அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 20 ஆயிரம் ரூபாவை இது வரை பெறாதவர்களுக்கானகொடுப்பனவு இன்று புதுக்குடியிருப்பு செயலகத்தில் வழங்கப்படவுள்ளது.

கொடுப்பனவைப் பெறத் தகுதியுடையவர்கள் தமது பெயர் மற்றும் விவரங்களைக் கிராம உத்தியோகத்தர்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டு வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த பிரதேசத்தில் மீள்குடிய மர்ந்தவர்களில் அகதிகளுக்கான ஐ.நா.நிறுவனத்தால் வழங்கப்பட்ட உணவல்லாத பொதிகளை இது வரை பெற்றுக் கொள்ளாத வர்களுக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை பிரதேச செயலகத்தில் வழங்கப்படவுள்ளது. (வ-115)

சாவகச்சேரி நகரசபை உத்தியோகத்தருக்கு நாளை மருத்துவப் பரிசோதனை

தென்மராட்சி, ஒக்.22

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் மூன்றாம் நாளான நாளை புதன்கிழமை சுகாதாரம் மற்றும் துப்புரவு ஏற்பாட்டு தினத்தை முன்னிட்டு காலை பொதுச் சந்தையில் சிரமதானமும் பிற்பகல் நகரசபை உத்தியோகத்தர் களுக்கான மருத்துவப் பரிசோதனையும் இடம்பெறுமென நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார்.

பொதுச் சந்தையில் இடம்பெறும் சிரமதானப் பணியில் நகரசபை யின் தலைவர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர் கள் மற்றும் வர்த்தகர்கள், வியாபாரிகள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

இடைநிறுத்தப்பட்ட பல்கலை ஊழியர் நிரந்தர நியமனம் கோரிப் போராட்டம்

உறுதிமொழிகளை அடுத்து அது தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக்.22

யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி நிர்வாகத்தினரால் இடைநிறுத்தப்பட்டுள்ள 17 ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி யாழ்.பல்கலைக்கழகப் பிரதான வாயிலில் நேற்றுக்காலை தொடக்கம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று நடத்திய போராட்டத்தையடுத்து தமக்கு நிரந்தர நியமனம் வழங்குவதாகப் பல்கலைக்கழகப் பதிவாளர் உறுதியளித்துக் கடிதம் வழங்கியதால் தமது போராட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

நேற்று நடைபெற்ற உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு நேரில் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு மென்பானம் கொடுத்து நிறைவுக்குக் கொண்டு வந்தார்.

தமது சார்பில் நான்கு பேரையும் பதிவாளரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்ற கோப்பாய் பொலிஸார் அங்கு இது தொடர்பில் கலந்துரையாடியதையடுத்துப் பதிவாளர் தமது கோரிக்கையை ஏற்பதாகக் கூறினார் என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.

தொழில் இழந்து நிர்க்கதியாகியுள்ள தமக்கு பல்கலைகழகப் பேரவையும், உயர் கல்வி அமைச்சும் உரிய தீர்வைத்தர வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழகப் பராமரிப்பு பகுதியில் ஊழியர் வெற்றிடங்கள் நிலவியதால் அதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் பல்கலைக்கழகத் தொழிற்சங்க விதிமுறைகளுக்கு அமைவாக "ஒய்வு பெற்ற பல்கலைக்கழக ஊழியர்களின் பிள்ளைகள், பல்கலைக்கழக வெற்றிடத்துக்கு உள்வாங்கப்படலாம்" என்ற அடிப்படையில்-

தொழிற்சங்கத்தால் வழங்கப்பட்ட "பெயர்ப்பட்டியலின்" பிரகாரம் ஒப்பந்த ரீதியில் உள்வாங்கப்பட்டு பல்கலை யாப்புக்கு அமைய கடந்த வருடம் தொடக்கம் பணியாற்றி வந்தோம். ஒப்பந்த காலத்துக்கேற்ப நாம் பணியாற்றி ஒப்பந்தத்தின்படி எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நாம் பணிபுரிய முடியும். ஆனால் எம்மை கடந்த 4 ஆம் திகதியே எங்களை இடை நிறுத்தி விட்டனர். பல்கலை "கைவிரல் ரேகை வரவுப் பதிவு" இயந்திரத்திலும், பராமரிப்புப் பகுதி தற்காலிக ஊழியர் வரவுப் பதிவேட்டிலும் கையொப்பமிட்டு வந்தோம். மாதாந்தம் வேலைகள் எந்திர வியலாளரால் உறுதிப்படுத்தப்பட்டு பல்கலைக்கழக நிதிக்கிளை மூலமாக முறைப்படி சம்பளம் வழங்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் கடந்த ஜூலை 19 ஆம் திகதிக்கு முன்பாக நேர்முகத் தேர்வுக்கான சுய விவரக் கோவையை சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளரால் கையொப்பமிடப்பட்டு 17 பேரில் சிலருக்கு மட்டுமே கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் எதுவித முன் அறிவித்தலுமின்றி கடந்த ஜூலை 10 ஆம் திகதி திடீரென நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டுள்ளது. அந்த நேர்முகத் தேர்வுக்கு நாம் புறக்கணிக்கப்பட்டதோடு வெளியிலிருந்து புதிதாகப் பலர் அழைக்கப்பட்டு அவர்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு தெரிவுசெய்தநிலையில்தேர்தலுக்காக ஒத்தி வைக்கப்பட்டே நியமனம்வழங்கப்பட்டுகடந்த 7 ஆம் திகதி தொடக்கம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். இவ்வாறு தெரிவித்தனர். (வ-4-21)

யாழ்.போதனா வைத்தியசாலையில் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவு தினம் நேற்று

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21, 22 ஆகிய திகதிகளில் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர் கள், பொது மக்களுக்கான நினைவுதினம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வைத்திய அதிகாரிகள், உயிரிழந்த வைத்தியர்கள், ஊழியர்கள் ஆகியோரது உறவினர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (வ-21)

சாவகச்சேரியில் துப்புரவு செய்யாத காணிகளுக்கு சிவப்பு அறிவித்தல்

தென்மராட்சி, ஒக்.22

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் துப்புரவு செய்யப்படாத காணிகள் டெங்கு நுளம்பு உற் பத்தி செய்யும் பிரதேசமாகப் பிரகடனப்படுத் தப் பட்டு நேற்று சிவப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டன.

குறித்த அறிவித்தல் ஒட்டப்பட்டு 15 தினங்களுக்குள் துப்புரவு செய்யப்படாது விடின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. நகரசபையின் சுகாதாரக் குழுத் தலைவரால் சபை எல்லைக்குட்பட்ட பற்றைக் காடாகக் காணப்படும் காணிகளைத் துப்புரவு செய்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மூன்று மாதங்களுக்கு முன்னர் காணி உரிமையாளர்கள், பராமரிப்பாளர்கள் ஆகியோருக்கு அறிவித்தல் கொடுத்து இதுவரை துப்புரவு செய்யப்படாத காணிகளுக்கே சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

சட்டவிரோத மின்சாரம் ஐவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஒக்.22

தென்மராட்சி தெற்கு நாவற்குழிப் பகுதியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற ஐவருக்கு நீதிமன்ற அபராதம், மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய கட்டணம் ஆகியவற்றுடன் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல நீதிமன்றால் உத்தரவிடப் பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸார் நாவற்குழிப் பகுதியில் நடத்திய திடீர் பரிசோதனையில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 5 பேருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அனைவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 5 பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் மின்சார சபைக்கு செலுத்து மாறும், மூவருக்கு தலா 5 ஆயிரத்து 900 ரூபாவும் மற்றவர்களுக்கு முறையே 12 ஆயிரத்து 984 ரூபா, 11 ஆயிரத்து 94 ரூபாவும் விதிக்கப்பட்டது.

அத்துடன் 5 பேரும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார். (வ-9)

காக்கைதீவில் விரைவில் பொலிஸ் காவல் நிலையம்

குப்பைகள் கொட்டுவதைத் தடுக்க

நவாலி, ஒக்.22

கல்லுண்டாய், காக்கைதீவு பகுதியில் குப்பைகள் கொட்டுவதைத் தடுப்பதற்காக தற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அந்தப் பகுதியில் வேறு பிரதேசங்களிலிருந்து எடுத்து வரப்படும் குப்பைகள் தகுந்த முறையில் கொட்டப்படாததால் விலங்குகளால் குப்பைகள் கிளறப்பட்டு சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது.

அது மட்டுமல்லாமல் குப்பைகளைத் தீயிட்டுக் கொளுத்துவதால் அதிலிருந்து எழும் புகை மண்டலமும் துர்நாற்றத்துடன் அந்தப் பகுதியை சூழ்ந்து அசுத்தமாக்குகிறது.

இதன் மூலம் பல தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக சண்டிலிப்பாய் சுகாதார வைத்தியஅதிகாரி பிரிவினர் சண்டிலிப்பாய் பிரதேச செயலர், பொது அமைப்புக்கள், கிராம சேவையாளர்கள், மானிப்பாய் பொலிஸாருடன் நடத்திய கலந்துரையாடலில் குறிப்பிட்ட பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு நிலைமொன்றை அமைப்பதென முடிவெடுக்கப்பட்டது. இது தொடர்பில் யாழ்.அரச அதிபருக்கும் மனு சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-100)

உரிமைகளுக்காகவே தேர்தலில் மக்கள் உணர்வோடு வாக்களித்தனர்

மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் கருத்து

யாழ்ப்பாணம்,ஒக்.22

மக்கள் சலுகைகளை எதிர்பார்த்து ஒருபோதும் வாக்களிக்க வில்லை. அவர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்காக தேசிய உணர்வோடு வாக்களித்துள்ளனர். அந்த உணர்வுகளுக்கு நாம் நிச்சயம் மதிப்பளிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.

கோண்டாவில் மேற்கு ஞான வீர.சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பல்வேறுபட்ட துன்பங்களையும், துயரங்களையும் எதிர்கொண்டுள்ளனர். மக்கள் சலுகைகளை எதிர்பார்த்து ஒரு போதும் வாக்களிக்கவில்லை. அடிமை வாழ்விலிருந்து விடுபடுவதற்காகவும் இழந்த உரிமைகளைப் பெறுவதற்காகவும் தேசிய உணர்வோடும் தான் எமக்கு வாக்களித்துள்ளனர். அவர்களின் உணர்வுகளுக்கு நாம் நிச்சயம் மதிப்பளிக்க வேண்டும்.

எமக்குள் கருத்து முரண்பாடுகள் இருக்கக் கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற குடையை விட்டு யார் விலகினாலும் சரி அவர்களை மக்கள் எளிதாகவே தூக்கியெறிந்து விடுவார்கள்.

மக்கள் எமக்குத் தந்த ஆணையை நாம் நிச்சயமாக நிறைவேற்று வோம். அபிவிருத்தியையும், உரிமையையும் இரண்டு கண்களாகக் கருதி இரு கோணங்களில் முதலமைச் சர் செயற்படு கின்றார். அவருக்குப் பக்கத்துணையாகச் செயற்பட வேண்டியது 30 உறுப்பினர்களினதும் கடமை. நாம் நிறைவான மக்கள் சேவை யினூடு அபிவிருத்தியுடன் கூடிய உரிமையைப் பெறுவோம்.- என்றார்.

இந்த நிகழ்வில் வலி.வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் சி.ஹரிகரன், சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் கிஷோர், தமிழரசுக் கட்சியின் இளைஞரணிச் செயலாளர் ப.தர்ஷானந்த் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(வ-5)

மருத்துவத் தேவைகளுக்கு இன்னல்படும் ஜெயபுரம் கிராம மக்கள்

கிளிநொச்சி மாவட்டம் ஜெயபுரம் கிராமத்தில் வசிக்கும் சுமார் 640 குடும்பங்கள் தமது மருத்துவத் தேவைகளை நிறைவு செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

பூநகரி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஜெயபுரம் கிராமத்தில் தற்போது 640 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்தக் குடும்பங்கள் தமக்குரிய மருத்துவத் தேவைகளை நிறைவு செய்வதாயின் முழங்காவில், பூநகரி அல்லது கிளிநொச்சி ஆகிய இடங்களுக்குச் செல்லவேண்டிய நிலையிலுள்ளனர். ஆனால் சீரான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் இந்தக் குடும்பங்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் ஜெயபுரம் கிராமத்துக்கென தனியான தொரு மருத்துவமனை அமைக்கப்படும் என அதிகாரிகளால் உறுதிமொழி வழங்கப்பட்ட போதிலும் இன்று வரை அமைக்கப்படவில்லை. கிளிநொச்சி, பூநகரி பிரதேசஅபிவிருத்திஒருங்கிணைப்புக் குழுக்கூட் டம் இந்த ஆண்டின் ஆரம் பத்தில் இடம்பெற்ற போது அதில் கலந்துகொண்ட கிளி நொச்சி மாவட்ட சுகாதார வைத் திய அதிகாரியான ப.கார்த்தி கேயன் கருத்து தெரிவிக்கும் போது ஜெயபுரம் பகுதியில் புதியதொரு மருத்துவமனை அமைக்கப்படும் எனவும் அதற்கான அனுமதி கிடைத்துள்ள தாகவும் தெரிவித்தார்.

மேலும் ஜெயபுரம் கிராமத்தில் வாராந்தம் நடமாடும் மருத்துவ சேவையொன்று நடத்தப்படுமென்றும் அவர் கூறி யிருந்தார். ஆனால் இன்று வரை இவைநிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(க-6)

உலகதரிசனம் நிறுவனத்தினால் தண்ணீர் பவுசர் கையளிப்பு

அக்கராயன்.ஒக்.22

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் சர்வதேச இயற்கை அழிவு குறைப்புத் தினத்தில் உலக தரிசனம் நிறுவனத்தினால் தண்ணீர் பவுசர் ஒன்று வழங்கப்பட்டது.

கிளிநொச்சி அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட இந்தத் தண்ணீர் பவுசர் கரைச்சிப் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டது.

இதன் மூலமாக கிளிநொச்சி மாவட்டத்தின் வறட்சியான பகுதிகளில் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தட்டுவன்கொட்டி, உமையாள்புரம், கல்லாறு, பூநகரியின் பல கிராமங்கள் மற்றும் கரைச்சி மேற்கு கிராமங்களான அக்கராயன், கெங்காதரன் குடியிருப்பு, கண்ணகைபுரம் உட்படப் பல கிராமங்கள் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 24.02.1983 — மறைவு 22.10.2009

அமரர்

இராசரத்தினம் கசிதரன் (நசீர்)

என்றும் எமை சிரிக்க வைத்த – உன்முகம்
அன்றுமுதல் அழ வைத்தது ஏனோ!
ஆண்டுகள் நான்கு ஆனாலும் – உன்
முகம் நினைக்கா நாளும் வந்து போகுமோ.

ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டிநிற்கும்:

போயிட்டி, நீர்வேலி. குடும்பத்தினர்.

(2343) (10.14)

நிதியிருந்தும் மணல் இல்லை வீட்டுத்திட்டப் பணிகள் கிடப்பில்

மாந்தை கிழக்கு மக்கள் விசனம்

வலி.தென்மேற்கு, ஒக்.22

மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் மூன்றாம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்திய வீட்டுத்திட்டத்தில் இணைக்கப்பட்ட 58 பயனாளிகளுக்கு பணிகளை ஆரம்பிப்பதற்கான நிதி குறித்த அதிகாரிகளால் வழங்கப்பட்ட போதிலும் மணல் கிடைக்காததால் வீட்டு வேலைகளை ஆரம்பிப்பதில் தாமதமும் தடங்கலும் ஏற்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் இந்திய வீட்டுத்திட்டத்தின் 3 ஆம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டுத்திட்டம் 15 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மூன்றாம் கட்ட வீட்டுத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஸ்செல்வபுரம், விநாயகர்புரம், சிவபுரம் ஆகிய மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டு துரிதமாக வேலை கள் நடைபெற்று வருகின்றன.

மூன்றாம் கட்ட வீட்டுத்திட்டத்தின் கீழ் தற்பொழுது அம்பாள்புரம், வன்னி விளாங்குளம் ஆகிய இரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலிருந்து இணைத்துக் கொள்ளப்பட்ட 58 பயனாளிகளுக்கு வீட்டு வேலைகளை ஆரம்பிப்பதற்காக முதற்கட்டமாக வங்கி மூலம் 50 ஆயிரம் ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டது. ஆனால் அவர்கள் மணலுக்காகக் காத்திருக்கின்றனர்.

மணல் கிடைக்காததால் வீட்டு வேலைகளை ஆரம்பிக்க முடியாமல் பயனாளிகள் திண்டாடுகின்றனர்.

வீட்டுத்திட்டத்தைக் குறிப்பிட்ட கால இடைவெளைக்குள் கட்டி முடிக்க வேண்டியிருப்பதால் மணல் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பாதிக் கப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர். (வ-115)

நீரியல் வள திணைக்களத்துக்கு கிளிநொச்சியில் புதிய கட்டடம்

சண்டிலிப்பாய், ஒக்.22

கிளிநொச்சி மாவட்டத்தில் கடற் றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்துக்கு 30 மில் லியன் ரூபா செலவில் சகல வசதிகளையும் கொண்ட புதிய கட்டடம் அமைக்கப்படவுள் ளது. கடற்றொழில் வள அமைச்சு வழங்கிய நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தக் கட்டடத்துக்கு முதற் கட்டமாக 60 லட்சம் ரூபா திணைக் களத் துக்கு வழங்கப்பட்டுள்ளது.

155 ஆம் கட்டையில் அமைக்கப்படவுள்ள குறித்த கட்டடத்துக்கான பணிகளை ஆரம்பிப் பதற்கு ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி கோரப்பட்டுள்ளது. இதேவேளை குறித்த திணைக்களம் தற்காலிகமாக அமைக் கப்பட் டுள்ள கட்டடத்தில் தற்போது இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (வ-115)

வாடகைக்கு

266/A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் கடை வாடகைக்குண்டு.

T.P:- 077 8072805

மரண அறிவித்தல்

திருமதி இராசம்மா (இராசமணி) நடராசா

வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா (இராசமணி) நடராசா நேற்று (21.10.2013) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற Dr. ந.நாகலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற Dr. அ.நடராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான Dr. நா. பரமானந்தம், நா.அழகானந்தம், நா.குலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், N. சிவராஜா (லண்டன்), N. செல்வராசா (நியூசிலாந்து),வசந்தமலர் (லண்டன்), செல்வரஞ்சனி, சுகுணரஞ்சனி (லண்டன்), சாந்தரஞ்சனி (லண்டன்), ஸ்ரீரஞ்சனி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், ஞானேஸ்வரி (லண்டன்), கலாநிதி (நியூசிலாந்து), சிவநடராசா (லண்டன்), சிதம்பரநாதன் (இ.மி.ச), சிவகுமார் (லண்டன்), தவராசா (லண்டன்), சபேசன் (லண்டன்) ஆகியோரின் மாமியும், கெங்கா, கஜன், துர்க்கா, நிர்ஜா, சிவந்தி, நவீதன், சஜீவன், அபிகரன், நிஷாந்தி, சுகந்தி, பிரதீபன், றஜீவன், அஜந்தி, மயூரன், மேனகா, மீரா, கிருத்திகா, அபீஷ்ணா, டானியல், ரீனா, றொனி, பராஷா ஆகியோரின் பேர்த்தியும், செபஸ்தியன் அமிலி, ஆரியன், அக்ஷனா, அபீனா, றோஹான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் விசுவாசிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வதிரி, கரவெட்டி.

தகவல்: க. சிதம்பரநாதன் (மருமகன்)

T.P: 0776184795

(சி/13155) (10.14)

மரண அறிவித்தல்

திருமதி இராசம்மா நடராசா (வேலணை கிழக்கு)

வேலணை கிழக்கு அம்மன் கோயிலடியைச் சேர்ந்த திருமதி இராசம்மா நடராசா நேற்று (21.10.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சண்முகம் முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான கார்த்திகேசு-பொன்னுப்பிள்ளை தம் பதியரின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற திருச்செல்வம் ஜெகநாதன் (ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர், தலைவர்வேலணை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்), குலசிங்கம், சிவராசா (லண்டன்), கலாஜோதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சறோஜினிதேவி, கனகரஞ்சினி, இந்திராணி, காலஞ்சென்ற ஜெயந்தி மற்றும் சுகந்தி, தவராசா, ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம், பொன்னம்மா, பொன்னையா, சபாபதி, கதிராசிப்பிள்ளை, செல்லத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், விஜிதா, சுரேந்தர், பிரசன்னா, வித்தியா, வியாசர், வியாசன், சுகிபன், பிரசாந், கல்பனா, இலஜிதா, சுஜீவன்,பிரியன்சன், சிந்துஜன், கவிசன், சவின்ஜா, தேவராசா, ஜெந்தினி, நிரோஜினி, மயூரதி ஆகி யோரின் அன்புப் பேரத்தியும், துபிபனின் அன்புப் பூட் டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.10.2013) புதன்கிழமை மு.ப. 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை கிழக்கு, வேலணை.

தகவல்: ந. ஜெகநாதன் (மகன்) 077 7110613

பொதுக்கூட்டம்

கொழும்புத்துறை, ஒக்.22 யாழ்.பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கடந்த 13 ஆம் திகதி நடைபெறுவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்னர் பிற்போடப்பட்ட இந்தக் கூட்டத்துக்கு அங்கத்தவர்களைத் தவறாது சமுகம் தருமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (வ-135)

கால்நடை வளர்ப்போர் ச.அலுவலகம் வேறு இடத்துக்கு

கொழும்புத்துறை, ஒக.22 யாழ்.பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அலுவலகம் தற்போது புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. (வ-135)

எரிபொருள் நிரப்புநர் மீது இ.போ.ச. சாரதி தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக்.22 எரிபொருள் நிரப்புவதில் ஏற்பட்ட குழறுபடியால் இ.போ.ச. பஸ் சாரதியால் எரிபொருள் நிரப்புநர் தாக்கப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த 17 ஆம் திகதி பருத்தித்துறை பஸ்சாலையில் இடம்பெற்றது. சேவை முடித்து பஸ்ஸுக்கான எரிபொருளை நிரப்புவதற்கு பஸ்ஸைக் கொண்டு சென்ற சாரதி எரிபொருள் நிரப்புவதில் அளவு வித்தியாசம் காணப்பட்டதால் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

இதன்போது இருவருக்கு மும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து பருத்தித் துறைசாலைக்கு அறிவிக்கப் பட்டதை அடுத்து பஸ் சாரதி சேவையில் இருந்து விசாரணைகள் முடியும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக பருத்தித் துறைசாலை முகாமை யாளர் கே.கந்தசாமியிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

சம்பவம் தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபையின் செயலாற்றுப் பிரிவு தலைமை யகத்துக்கு அறிவிக்கப்பட் டுள்ளது. அவர்களே விசார ணைகளை மேற்கொள்வர். எனினும் விசாரணைகள் முடி யும் வரை சாரதி பஸ் சேவை யில் இருந்து தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளார். -எனத்தெரிவித்தார். (வ-14-422)

நயினாதீவில் நிறுத்தப்படும் படகுகளால் நெடுந்தீவுப் படகு தரிப்பதில் தாமதம்

உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிப்பதால்

யாழ்ப்பாணம், ஒக்.22 தென்பகுதியில் இருந்து வரும் உல்லாசப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக நயினா தீவுக்கான படகுகள் துறை முகப் பாலத்தில் வரிசையாக நிறுத்தப்பட்டுள்ளதால் நெடுந் தீவில் இருந்துவரும் பயணி கள் படகு குறிகாட்டுவான் துறைமுகத்தில் நிறுத்துவ தற்காக நீண்ட நேரம் காத்து நிற்க வேண்டியுள்ளது. இத னால் படகுப் பயணிகள் தாம தித்தேபகிலிருந்துஇறங்கவேண் டியுள்ளதாகப் பயணிகளால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு படகுகள் வரிசை யாகத் தரித்து நிற்பதால் படகு களின் மேலே ஏறியே துறை முகப் பாலத்தில் பயணிகள் இறங்க வேண்டியுள்ளது. இதனால் நோயாளர்கள், முதி யவர்கள், பொருள்களுடன் வருவோர், குழந்தைகள் எனப் பல தரப்பினரும் சிரமங் களை எதிர்கொள்கின்றனர்.

உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் தினங் களில் தீவுப் பகுதிக்குச் செல்வ தற்காக வரும் பயணிகள் பஸ்கள் துறை முகப் பாலப் பகுதிக்குள் செல்ல அனுமதிக் கப்படுவதில்லை.

எனவே தமது பொதிகளுடன் குறிகாட்டுவான் கடைப் பகுதிகளில் இருந்து பாலம் வரை சிரமத்தின் மத்தியில் நடந்தே செல்ல வேண்டியுள் ளது. உல்லாசப் பயணிகள் பாலப் பகுதியில் அதிகரித்துள் ளதால் தீவுப் பகுதிகளுக்குச் செல்லும் ஏனைய மக்கள் பாலத்தின் மருங்கிலேயே நடந்து செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

நெடுந்தீவுக்கான படகுகள் வரும் போது துறைமுகப் பாலத்தின் மேற்குப் பகுதியில் வேறு படகுகள் எவையும் நிறுத்தக் கூடாதெனத் தீர்மானித்த அதி காரிகளே அதனை தகுந்த முறையில்கடைப்பிடிப்பதில்லை. தென்பகுதியில் இருந்து வரும் உல்லாசப் பயணிகளால் அத்தியாவசியப் பொருள் களைப் படகில் ஏற்றுவதற் காகக் கொண்டுவரும் பார ஊர்திகள் பல மணித்தியால யாங்கள் கரத்திருக்க வேண்டி யுள்ளது. நயினாதீவு, நெடுந் தீவு மக்கள் சிரமப்படும் நிலை யைத் தவிர்க்க உரியவர்கள் தகுந்த விதிமுறைகளை கடைப் பிடிக்க வேண்டும் என்று பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ)

ஆசாத் வீதியில் போடப்படும் கற்களால் மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஒக்.22 யாழ்.முஸ்லிம் குடியிருப்பு பகுதியிலுள்ள ஆசாத் வீதி யில் இடம்பெற்றுவரும் புன ரமைப்புப் பணிகளில் முறை யற்ற விதத்தில் வீதியில் கற் கள் போடுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். சில காலமாக நடைபெற்று வரும் புனரமைப்புப் பணி மழை காரணமாக கைவிடப் பட்டுள்ளது.

இதனால் குறித்த வீதியால் போக்குவரத்துச் செய்ய முடி யாத நிலை ஏற்பட்டுள்ளதாக வும் தெரிவித்தனர்.

இதுதவிர வீதியின் இரு மருங்கிலுமுள்ள வாய்க்கால் களில் கற்கள் விழுந்து நீர்த் தேக்கம் ஏற்பட்டுள்ளது. இத னால் டெங்கு ஏற்பட வாய்ப் புள்ளதாகக் கூறும் மக்கள் சீரான போக்குவரத்தை ஏற்படுத்தித் தருமாறு உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-10)

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

கடந்த மாதங்களில் ஒரு லட்சத்து 10 ஆயிரத்தை தாண்டியது

தென்மராட்சி, ஒக்.22 சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை வெளிநோயாளர் பிரி வுக்கு வரும் நோயாளர் களின் எண்ணிக்கை கடந்த மாதங்களில் ஒரு லட்சத்து 10 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. குறித்த வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் காலை யில் ஐந்து மருத்துவர்களும் மாலையில் இரண்டுமருத்துவர் களும்பணியாற்றுவதால்நோயா ளர்கள் குறுகிய நேரத்தில் சிகிச்சை பெற முடிகிறது.

இதனால் தென்மராட்சி பச்சி லைப்பள்ளி, பூநகரி, வட மராட்சி கிழக்கு ஆகிய பிரதே சங்களிலிருந்து தினமும் பெரு மளவானோர் வெளி நோயா ளர் பிரிவுக்குச் சிகிச்சை பெற வருகின்றனர்.

வைத்தியசாலையில் காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை வெளிநோயாளர் பிரிவு இயங்குவதால் தின மும் 400 இற்கும் மேற்பட்

தென்மராட்சி பச்சி லைப்பள்ளி, பூநகரி, வட மராட்சி கிழக்கு ஆகிய பிரதே சங்களிலிருந்து தினமும் பெரு மளவானோர் சிகிச்சை பெற வருகின்றனர்.

டோர் சிகிச்சை பெற வருவதாக வைத்தியசாலை புள்ளி விவரங் கள் மூலம் தெரியவந்துள்ளது. வைத்தியசாலைகளில் நடத் தப்படும் கிளினிக்குகளிலும் பெரும் எண்ணிக்கையா னோர் சிகிச்சை பெற்று வரு வது குறிப்பிடத்தக்கது. (வ-9)

சிறுமியை துஷ்பிரயோகம் செய்தவருக்கு மறியல்

வலி.வடக்கு, ஒக்.22 காதலிப்பதாகக் கூறி சிறு மியை துஷ்பிரயோகம் செய் ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு யாழ்ப்பா ணம் நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

உரும்பிராய் கிழக்கில் உள்ள 15 வயது நிரம்பாத சிறுமி ஒருத்தியைக் காதலிப்பதாகக் கூறி துஷ்பிரயோகம் செய்த தாகச் சிறுமியின் பெற்றோ ரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படை யில் கோப்பாய் பொலிஸார் அதே இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னி லைப்படுத்தினர்.

அதனைத் தொடர்ந்து நீதிமன் றால் குறித்த இளைஞரை விளக்கமறியலில்வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (வ-86)



சாவகச்சேரி நகர சபையின் ஏற்பாட்டில் மருத்துவ முகாம்

தென்மராட்சி,ஒக்.22 சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வு களில் ஒன்றான மருத்துவ முகாம் நேற்று இடம்பெற் றது.

சாவகச்சேரி கோயிற்குடியி ருப்பு கிராம அலுவலர் பிரி வில் உள்ள உதயசூரியன் கிராமத்தில் மருத்துவ முகாமை நகரசபைத் தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளை ஆரம்பித்து வைத்தார்.

உதயசூரியன் சனசமூக நிலை யத்தில் நடைபெற்ற மருத் துவ முகாமில் பொது மருத் துவம், வாய்ப்புற்றுநோய் போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருந்து கள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி ஆதார வைத் தியசாலை பொது மருத்துவ நிபுணர் தலைமையில் வைத் திய அதிகாரிகளாலும், பல் கலைக்கழகமருத்துவபீடமாண வர்களாலும், வைத்திய சாலை உத்தியோகத்தர்க ளாலும் பரிசோதனைகள்அதே மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கா.சற் குணதேவன், சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத் திச் சங்கச் செயலாளர் வை. இராசரத்தினம், பொதுச் சுகா தாரப் பரிசோதகர் பி.தளிர் ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர். (வ-9)

விடுதிகளில் அனுமதிக்கப்படுவோர் பூரண சிகிச்சை பெறத் தயக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.22 வைத்தியசாலை விடுதிகளில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்படுவோர் சுய விருப்பத் தின் பேரில் கையொப்பமிட் டுச் செல்வது அதிகரித்துள் ளது.

இதனை வைத்தியசாலை நிர்வாகமும் அங்கீகரித்து வருகிறது. நோயாளி விடுதி யில் அனுமதிக்க முன்னர் அவர் ஏன் அனுமதிக்கப்படு கிறார் என்பது நோயாளிக்கு தெரிந்த விடயமாக உள்ளது. ஆனால் ஆரம்ப சிகிச்சை யின் போது குணமடைந் ததும் தொடர்சிகிச்சை பெறா மல் சுயவிருப்பத்துடன் கை யொப்பமிட்டுச் செல்கின்ற னர்.

நோயாளி தொடர்ந்து விடுதி யில் தங்கிச் சிகிச்சை பெற விரும்பாததன் காரணம் என்ன என்பதை ஆய்வுகள் மூலம் கண்டறிய சுகாதாரத் தினைக்களத்தினர் முயற் சிக்க வேண்டும்.

வைத்தியசாலையில் ஆரம்ப சிகிச்சை பெற்று மேலதிக சிகிச்சையை தமது குடும்ப மருத்துவர் அல்லது தனியார் வைத்தியசாலையில் பெறு வதும் இது வைத்திய சாலை யில் வழங்கும் சேவைகள் போதாதா அல்லது பிடிக்கா வில்லையா?

நோயாளி விவசாயியாக இருந்தால் பயிர்களின் நிலை குறித்து அவசியம் எனக் கருதிச் செல்லலாம்.

நோயாளி தனக்கு ஏற்பட்

சுய விருப்பத்தின் பேரில் கையொப் பமிட்டுச் செல்பவர் களுக்கும் வைத் தியசாலைமருத்துவ அறிக்கை அட்டை வழங்கப்படுகிறது. அவருக்கு பூரண குணமாகிறதோ இல் லையோ அட்டை வழங்கப் படுகிறது.

டுள்ள நோயின் தன்மை புரி யாமல் குணமாகி விட்டதாக வும் கருதி பல்வேறு கார ணங்களால் சுய விருப்பத் தின் பேரில் வீடு செல்கின்ற னர். இந்த நிலை தவிர்க்கப் படல் வேண்டும்.

விடுதியில் அனும திக்கப் படுவர் பூரண குணம டையும் வரை சிகிச்சை வழங்கி குணமானதும் விடு விக்க வேண்டும். சுய விருப் பத்தின் பேரில் கையொப் பமிட்டுச் செல்பவர்களுக்கும் வைத்தியசாலை மருத்துவ அறிக்கை அட்டை வழங்கப் படுகிறது. அவருக்கு பூரண குணமாகிறதோ இல் லையோ அட்டை வழங்கப் படுகிறது.

விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறுவோர் மேலதிக சிகிச் சைகள் பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்ட போதி லும் வைத்திய அதிகாரி உரிய நடவடிக்கை மேற் கொள்ளாமல் நோயாளியின் விருப்புக்கு உடன்படுவது தகுந்த நிலையல்ல.

வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்படுவோர் பூரண குணமடையும் வரை விடுதி யில் வைத்து அல்லது மேல தீக சிகிச்சை பெற வேறு வைத்தியசாலைக்கு அனுப்ப முயல வேண்டும்.

நோயாளியின் சுய விருப் பத்துக்கு வைத்தியர்கள் அனுமதிக்கக் கூடாது எனப் பலரும் வேண்டுகோள் விடுத் துள்ளனர். (வ-9)

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வங்கக் கடலில் உருவான பைலின் புயல் ஒரிசா மற்றும் ஆந்திர மாநிலங்களைக் கடுமையாகத் தாக்கியது. பாதிக்கப்பட்ட ஒரிசா மாநிலத்தில் மட்டும் 26 இலட்சத்துக்கும் அதிகமான மரங்களைத் தூக்கி வீசியுள்ளது பைலின். தற்போது அவை கணக்கெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் புதிதாக மரங்களை நடுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அந்த மாநில அரசு அறிவித் துள்ளது. (ற)

6,000 கோடி ரூபாவுக்கு புதிய நீர்மூழ்கிக் கப்பல்

ரஷ்யாவிடம் இருந்து பெறுகின்றது இந்தியா

புதுடில்லி, ஒக்.22

ரஷ்யாவிடம் இருந்து அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றைக் குத்தகைக்குப் பெறுவதற்குத் தீர்மானித்துள்ளது இந்தியா. அதற்கு ரூபா 6 ஆயிரம் கோடி செலவாகும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ரஷ்யா சென்றுள்ளநிலையில் அதற்காக ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



இந்திய கடற்படையிடம் இருந்த ஐ.என்.எஸ் சிந்துரக்ஷக் என்ற நீர்மூழ்கிக் கப்பல் அண்மையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி மும்பை துறைமுகத்தில் மூழ்கியது. அதில் 18 கடற்படையினர் உயிரிழந்தனர். அது இந்தியக் கடற்படைக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

சீனா தனது நீர்மூழ்கிக் கப்பல்களின் பலத்தை அதிகரித்து வரும் வேளையில் இந்திய கடற்படையின் நீர்மூழ்கி கப்பல் பிரிவின் பலம் பெருமளவு குறைந்துள்ளது. அதை ஈடு செய்யும் பொருட்டே புதிய நீர்மூழ்கிக் கப்பலை இந்தியக் கடற்படையில் இணைப்பதற்குமுடிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு பிரதமர் தலைமையில் அண்மையில் நடந்த பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கு ரூ.6 ஆயிரம் கோடி செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா ஏற்கனவே ரஷ்யாவிடமிருந்து நெர்பா என்ற அணுசக்தி நீர்மூழ்கி கப்பலை குத்தகைக்கு எடுத்து அதை ஐ.என்.எஸ் சக்ரா என பெயர் மாற்றி தமது கடற்படையில் கடந்தாண்டு இணைத்துள்ளது. (ற)

அணு உலைகளை அமைப்பது உறுதி

போராட்டங்களுக்கு அரசு அஞ்சாது; கூறுகின்றார் அமைச்சர் நாராயணசாமி

புதுடில்லி, ஒக்.22

யாருடைய போராட்டங்களுக்கும் இந்திய மத்திய அரசு அஞ்சாது. அணு உலைகளை அமைப்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது என்று தெரிவித்துள்ளார் மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி.

கூடங்குளத்தில் மேலும் அணு உலைகள் அமைப்பது தொடர்பாக ரஷ்யாவுடன் இந்தியா ஒப்பந்தங்களை மேற்கொள்ளவுள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் தமிழகத்தில் போராட்டங்கள் நடைபெற்று வரும் நிலையிலேயே நாராயணசாமி இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"கூடங்குளம் அணு மின் நிலையத்தில் தற்போது 400 மெகா வோட்ட் மின் உற்பத்தி நடைபெற்று வருகின்றது. அது விரைவில் ஆயிரம் மெகா வோட்ட்சாக அதிகரிக்கும். அங்குள்ள 2 ஆவது அணு உலை எதிர்வரும் மார்ச் மாத இறுதிக்குள் செயற்பட ஆரம்பிக்கும்.

அதேவேளை கூடங்குளத்தில் 3ஆவது மற்றும் 4 ஆவது அணு உலைகள் அமைக்கப்படவுள்ளன. அது தொடர்பான ஒப்பந்தத்தில் ரஷ்யா சென்றுள்ள இந்தியப் பிரதமர் கைச்சாத்திடவுள்ளார். அந்த அணு உலைகள் செயற்பட ஆரம்பிக்க 7 முதல் 8 ஆண்டுகளாகும்.

அணு உலையின் பாதுகாப்புக் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சுற்றுச் சூழல் துறையிடம் அனுமதி பெறவேண்டும். அதனால்தான் புதிய அணு உலைகளின் செயற்பாட்டுக்குநீண்டகாலம்எடுக்கும்.

இந்தியா வளர்ந்து வரும் நாடு. அதன் தொழில் வளர்ச்சி அதிகரிக்கும்போது மின்தேவையும் அதிகரிப்பது தவிர்க்க முடியாத ஒன்று. அதைப் புரிந்து கொள்ளாதவர்களே போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். அவர்களின் போராட்டங்களைக் கண்டு அரசு அஞ்சப் போவதில்லை.திட்டமிட்டபடிஅணு உலைகளை அமைப்பதில் அரசு உறுதியுடன் உள்ளது" என்று தெரிவித்துள்ளார். (ற)

அமைதியாக இருக்க முடியாது இந்தியா

பாக். எல்லை மீறுகின்றது என்கிறார் காஷ்மீர் முதலமைச்சர்

ஸ்ரீநகர், ஒக்.22

எல்லை மீறிச் செயற்படுகின்றது பாகிஸ்தான். இனியும் அமைதி காக்கக் கூடாது இந்தியா என்று ஆவேசமாகத் தெரிவித்துள்ளார் காஷ்மீர் முதலமைச்சர் ஒமர் அப்துல்லா. ஸ்ரீநகரில் நடைபெற்ற பொலிஸ் வீரவணக்க நாள் அணிவகுப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"பாகிஸ்தானின் அத்துமீறல் தொடர்ந்துகொண்டே இருந்தால் அரசு மாற்று வழிகள் குறித்து ஆலோசிக்க வேண்டும். பாகிஸ்தான் இராணுவத்தின் அத்துமீறலை அமைதியாக பார்த்துக்கொண்டிருக்க முடியாது பயங்கரவாத தாக்குதலுக்கு உரிய பதிலடி கொடுக்க வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார் ஒமர் அப்துல்லா. (ற)

பாகிஸ்தானின் அத்துமீறல் தொடர்ந்து கொண்டே இருந்தால் அரசு மாற்று வழிகள் குறித்து ஆலோசிக்க வேண்டும்.

புதுடில்லி மாணவி கொலை வழக்கு; குற்றவாளிகள் நீதிமன்றில் மனு

புதுடில்லி, ஒக்.22

புதுடில்லியில் மருத்துவக் கல்லூரி மாணவி ஓடும் பஸ்ஸில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட வழக்கின் குற்றவாளிகள் இருவர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

தமக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனை விவரம் மற்றும் குற்றப்பத்திரிகை, ஆதாரம் என்பவற்றை ஹிந்தி மொழியில் தமக்கு வழங்குமாறு அவர்கள் மனுவில் கோரியுள்ளனர்.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நான்கு பேரில் முகேஷ், பவன் குப்தா ஆகிய இருவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

மனுதாரர் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி மனுதாரர்கள் மீதான முதல் தகவல் அறிக்கை, சாட்சியங்கள், தீர்ப்பு, தண்டனை விவரம் உள்ளிட்ட ஆங்கிலத்தில் அளிக்கப்பட்டுள்ளன. அவற்றின் ஹிந்தி மொழியாக்கத்தை அவர்களுக்கு வழங்கும்படி கோரினார்.

ஆனால் குறித்த மனுவை தற்போது விசாரிக்க இயலாது எனத் தெரிவித்து விசாரணையை வரும் 28ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர். (ற)

எல்லை அத்துமீறல்கள்: ஆராயச் செல்கிறார் ஷிண்டே

புதுடில்லி, ஒக்.22

எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி தொடர் தாக்குதல் நடத்திவரும் நிலையில் அந்தப் பகுதியில் ஆய்வு நடத்த இந்திய மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே இன்று ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு செல்கின்றார்.

இந்த பயணத்தின்போது எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ள இந்திய பாதுகாப்பு படை மையங்களுக்குச் சென்று அவர் பார்வையிடுவார். அதன் பின்னர் எல்லையில் நடைபெற்று வரும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக ராணுவ உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ளார். (ற)

புதையல் தேடும் அரசை தடுத்து நிறுத்த முடியாது

கைவிரித்தது நீதிமன்றம்

புதுடில்லி, ஒக்.22

உத்தரபிரதேச மாநிலத்தின் 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரண்மனையில் தங்கப் புதையலைத் தேடுவதற்காக தொல்லியல் துறையினர் மேற்கொண்டு வரும் அகழ்வாய்வுப் பணிகளில் குறுக்கிட முடியாது என்று உயர் நீதிமன்றம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது

உத்தரப்பிரதேசத்தில் மறைந்த அரசர் ராவ் ராம் பக்ஸ் சிங்குக்கு சொந்தமான அரண்மனையில் ஆயிரம் தொன் தங்கம் இருக்கின்றது என்று தகவல் வெளியானது.

அதனைத் தொடர்ந்து மத்திய அரசின் அறிவுறுத்தலின் பேரில், இந்திய தொல்லியல் துறையும், மத்திய புவியியல் ஆய்வு மையமும் இணைந்து, கடந்த நான்கு நாள்களாக தங்கப் புதையலை கண்டுபிடிக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளன.

இந்த அகழ்வாய்வுப் பணிகளை உச்ச நீதிமன்றம் கண்காணிக்க வேண்டும் என்று கோரி உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொதுநல வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

மனு மீதான விசாரணைகளின் முடிவில் தொல்லியல் துறையினர் மேற்கொண்டு வரும் அகழ்வாய்வுப் பணிகளில் குறுக்கிட முடியாது என்று நீதிமன்றம் உறுதிபடத் தெரிவித்துள்ளது.

குறித்த அரண்மனையில் ஆயிரம் தொன் தங்கம் புதைத்து வைக்கப்பட்டுள்ளது என்று அந்த அரண்மனையில் மன்னரே தமது கனவில் வந்து கூறினார் என்று ஷோபான் சர்க்கர் என்ற சாமியார் கூறினார். அதை அடுத்தே அந்த மாநில அரசு புதையல் தேடும் பணிகளை ஆரம்பித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

காஷ்மீர் எல்லை விவகாரத்தில் தலையீடுகள் தேவையில்லை

இந்திய வெளியுறவு அமைச்சர் திட்டவட்டம்

புதுடில்லி, ஒக்.22

காஷ்மீர் பிரச்சினை இரு நாடுகள் தொடர்புடையது. அதில் வேறு எந்த நாடும் தலையிட அனுமதிக்க மாட்டோம் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்.

அமெரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் "காஷ்மீர் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு அமெரிக்கா தலையிட வேண்டும்" என்று கருத்துத் தெரிவித்திருந்தார். அதுகுறித்துக் கூறும்போதே சல்மான் குர்ஷித் இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

"காஷ்மீர் பிரச்சினை பரஸ்பரம் இரு நாடுகள் தொடர்புடையது. அதில் வேறு எந்த நாடும் தலையிட அனுமதிக்க மாட்டோம்.

காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. அதுபற்றி கேள்வி எழுப்ப யாருக்கும் உரிமை இல்லை. எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் அந்தப் பிரச்சினை குறித்து கேள்வி எழுப்ப முயற்சிப்பது கூட வீண் வேலை.

இந்தியா-பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட சிம்லா ஒப்பந்தத்தில் வேறு எந்த நாட்டையும் இந்த பிரச்சினையில் தலையிட அனுமதிக்க முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக எல்லைப் பகுதியில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, பாகிஸ்தான் அடிக்கடி தாக்குதலில் ஈடுபட்டு வருவது கவலை அளிக்கிறது. அதேநேரம் இரு நாடுகளுக்கும் இடையே இருந்துவரும் போர் நிறுத்த ஒப்பந்தம் அதனால் முறிந்து போகாது" என்று தெரிவித்துள்ளார் சல்மான் குர்ஷித். (ற)

பதற்றத்தைத் தணிக்கப் பேசுவோம்

இந்தியாவை அழைக்கின்றது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத்.ஒக்.22

எல்லைப் பகுதியில் நிலவும் பதற்றத்தைத் தணிப்பதற்கு பேச்சுக்களை நடத்துவோம் என்று இந்தியாவுக்கு அழைப்பு விடுத்துள்ளது பாகிஸ்தான்.

பாகிஸ்தான் - இந்திய எல்லைப் பகுதியில் ஏற்படும் மோதல்கள் இருநாட்டு உறவுகளும் விரிசலடைந்துள்ள நிலையில் இந்த அழைப்பை விடுத்துள்ளது பாகிஸ்தான்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஜஜாஸ் சௌத்ரி,

"அனைத்து நாடுகளுடனும் நல்லுறவைப் பேணவே பாகிஸ்தான் விரும்புகின்றது. இந்திய - பாகிஸ்தான் எல்லை போர் நிறுத்த உடன்பாட்டை பாகிஸ்தான் மதிக்கிறது. கடைப் பிடித்து வருகின்றது. ஆனால் இந்தியா அந்தப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. ஒரு தரப்பில் மட்டும் குற்றஞ்சாட்டுவதை நிறுத்தி விட்டு இரு தரப்பும் உடன்பாடுகளைக் கடுமையாகப் பின்பற்ற வேண்டும். எல்லைப் பகுதியில் அமைதியை ஏற்படுத்துவதற்கு இந்தியா பேச்சுக்களை நடத்த இணக்கம் தெரிவிக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

பாக். - இந்தியா இடையிலான எல்லைப் பிரச்சினை தொடர்பில் அமெரிக்கா தலையிட வேண்டும் என்ற பாகிஸ்தானின் கோரிக்கையை நிராகரித்துள்ளது அமெரிக்கா.

தாய்வானின் தாய்பேய் நகரில் கலைஞர்களின் நாடகப் பேரணி நடைபெற்றது. அதில் ஏராளமான கலைஞர்கள் தமது கலைத் திறமைகளை வெளிக்காட்டியவாறு பேரணியில் பங்கேற்றனர். அதில் ஒரு பெண் வித்தியாசமான உடையலரங் காரத்துடன் நடனத்தில் ஈடுபடுகின்றார். (ற)

அடங்காத தீயால் பெரும் சொத்து நாசம்

மெல்போர்ன், ஒக்.22

ஆஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயைக் கட்டுப்படுத்துவதற்குத் தீயணைப்பு வீரர்கள் கடுமையாகப் போராடி வரும் நிலையில் காட்டுத்தீ வேகமாகப் பரவுகின்றது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நியூ சவுத் வேல்ஸ் பகுதியில் ஏற்பட்ட தீ தற்போது சுமார் 100 இடங்களுக்குப் பரவியுள்ளது என்று கூறப்படுகின்றது. குறித்த பகுதிகளில் வெப்பமான, வறண்ட காற்றுடன் கூடிய காலநிலை காணப்படுவதால் எதிர்வரும் நாள்களில் காட்டுத்தீ இன்னும் தீவிரமடையக் கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

தீ அபாயம் உள்ள பகுதிகளில் இருந்து பொதுமக்கள் அவசர அவசரமாக வெளியேற்றப் பட்டு வருகின்றனர். பெரும் எண்ணிக்கையான வீடுகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

பிற மாநிலங்களில் இருந்து தீயணைப்பு வீரர்கள் வீரர்கள் வரவழைக்கப்பட்டு தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன என்று குறித்த பகுதி நிர்வாக அதிகாரிகள் கூறுகின்றனர். (ற)

முபாரக் மீது மீண்டும் விசாரணை

கெய்ரோ, ஒக்.22

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் மீதான விசாரணையைக் கெய்ரோ நீதிமன்றம் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

முக்கிய பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் முன்னாள் உளவுத்துறை அதிகாரிகளிடம் நீதிபதிகள் விசாரணை நடத்த உள்ளனர். 2011ஆம் ஆண்டு ஏற்பட்ட அரபு எழுச்சியின் போது சுமார் 800 போராட்டக்காரர்களைக் கொல்வதற்கு உத்தரவிட்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் முபாரக் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது.

முபாரக் மற்றும் முன்னாள் உள்துறை அமைச்சருக்கு வாழ்நாள் சிறைத் தண்டனை வழங்கி 2012ஆம் ஆண்டு எகிப்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனினும் அந்தத் தீர்ப்புக்கு எதிராக முபாரக் மேல் முறையீடு செய்ததைதொடர்ந்து வழக்கு மீண்டும் விசாரிக்கப் படுகிறது. (ற)

ஜன்ஸ்டீனின் கடிதங்கள் வருகின்றன ஏலத்துக்கு

நியூயோர்க், ஒக்.22

அமெரிக்காவின் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு பிரபல இயற்பியல் விஞ்ஞானி ஆல்பர்ட் ஜன்ஸ்டீன் எழுதிய இரு கடிதங்கள் ஏலத்துக்கு வரவுள்ளன. அந்தக் கடிதங்கள் சுமார் 4 லட்சம் டொலர் வரை ஏலமிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

1938ஆம் ஆண்டு கொலம்பியா பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த ஹெர்பர்ட் ஈ சால்ஸர் என்பவர் இயற்பியலில் ஒப்பிணைவு குறித்த ஜன்ஸ்டீனின் கோட்பாட்டில் உள்ள பிழை குறித்து அவருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

அதற்கு பதிலளித்து ஆகஸ்ட் 29ஆம் திகதி ஒரு கடிதத்தையும் செப்ரெம்பர் 13ஆம் திகதி மற்றொரு கடிதத்தையும் ஜன்ஸ்டீன் அனுப்பியிருந்தார்.

இரண்டாவது கடிதத்தில் சால்ஸர் கூறியதுதான் சரி என்றும் தான் தவறு செய்திருந்ததாகவும் பெருந்தன்மையுடன் அவர் ஒப்புக்கொண்டிருந்தார்.

பிற்காலத்தில் கணிதவியல் வல்லுநராகவும், விஞ்ஞானியாகவும் திகழ்ந்த சால்ஸர் 2006ஆம் ஆண்டு காலமானார்.

இந்தநிலையில் அவரிடமிருந்த ஜன்ஸ்டீனின் இரு கடிதங்களும் வரும் நவம்பர் 7ஆம் திகதி நியூயோர்க்கிலுள்ள கர்ன்ஸீ ஏல மையத்தில் ஏலத்துக்கு வரவிருக்கின்றது. (ற)

இந்தியக் கடற்படையின் செயல் முறையற்றது

வொஷிங்டன், ஒக்.22

தமது நிறுவனத்துக்குச் சொந்தமான கப்பலை இந்தியக் கடற்படை சிறைப்பிடித்திருப்பது முறையற்ற செயல் என்று தெரிவித்துள்ளார் அட்வன் போர்டு கப்பல் நிறுவனத் தலைவர் வில்லியம் ஹெச் வொட்சன்.

அனுமதியின்றி இந்திய கடல் பகுதிக்குள் ஆயுதங்களுடன் நுழைந்தது என்று தெரிவித்து அமெரிக்காவின் அட்வன் போர்டு நிறுவனத்துக்குச் சொந்தமான கப்பல் தூத்துக்குடி கடல் பகுதியில் கடந்த 12ஆம் திகதி இந்தியக் கடலோரக் காவல் படையால் கைப்பற்றப் பட்டது. கப்பலில் இருந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப் பட்டதுடன், கப்பலின் தலைவர், மாலுமிகள் மற்றும் பாதுகாப்பு வீரர்கள் உட்பட 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அந்த கப்பல் நிறுவனத்தின் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கப்பலை இந்தியக் கடலோரக் காவல் படை கைப்பற்றியிருப்பது முறையற்ற செயல். இந்தப் பிரச்சினை தொடர்பாக சட்ட ஆலோசனை பெற்று வருகிறோம். ராஜீய மற்றும் சட்ட ரீதியாக அணுகி கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார். கப்பலில் இருந்த அனைவரும் கைது செய்யப்பட்டு தற்போது தமிழகத்தில் உள்ள புழல் சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர் (ற)

சாரதி இன்றிப் பயணித்த அதிவேக ரயிலால் பரபரப்பு

மொஸ்கோ, ஒக்.22

அதிவேக ரயில் ஒன்று சாரதி இன்றிப் பயணித்த சம்பவம் ஒன்று ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் நடந்துள்ளது.

ரஷ்யாவின் தெற்கு மொஸ்கோ நகரின் ரியாசன்ஸ்கி புராஸ்பெக்ட் ரயில் நிலையம் நோக்கி வந்துகொண்டிருந்த ரயிலின் சாரதி, எதிராகத் தன்னைக் கடந்து சென்ற அதிவேக ரயிலைப் பார்த்து அதிர்ந்து போயுள்ளார். அந்த ரயில் சாரதி இன்றித் தன்பாட்டில் வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

உடனடியாகக் கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவித்த அந்தச் சாரதி, ஒரு குகை ரயில் பாதையில் சாரதி ஒருவர் உயிரிழந்து வீழ்ந்து கிடப்பதையும் அவதானித்தார். கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும் தன்னியக்கப் பொறிமுறை மூலம் சாரதி இன்றிப் பயணித்த ரயில் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டது.

ரயில் நிறுத்தப்பட்ட பின்னர் தான் தாம் சாரதி இன்றி நீண்ட தூரம் பணியத்துள்ளோம் என்ற பதுபயணிகளுக்குத்தெரியவந்தது. ரயிலைச் செலுத்திக் கொண்டு இருக்கும் போது கீழே விழும் அளவுக்கு சாரதி கதவைத் திறந்து வைத்துக்கொண்டு அஜாக்கிரதையாக இருந்தது ஏன்? என்பது தொடர்பில் தற்போது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று பொலிஸார் கூறுகின்றனர். (ற)

இளவரசர் உருவத்துடன் முத்திரைகள்

லண்டன், ஒக்.22

பிரிட்டன் இளவரசர் வில்லியம் தம்பதியரின் 3 மாத குட்டி இளவரசரின் உருவத்துடன் கூடிய தபால் தலையை வெளியிட்டு கௌரவித்துள்ளது கனடா.

மிக குறைந்த அளவில் அச்சிடப்பட்ட அந்த தபால் தலைகள் இன்று முதல் கனடாவில் உள்ள தபால் நிலையங்களில் கிடைக்கும் என அந்நாட்டின் தபால்துறை மந்திரி லிசா ரயிட் அறிவித்துள்ளார். (ற)

ஈராக் குண்டுவெடிப்பில் 80 பேர் சாவு

பாக்தாக், ஒக்.22

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 80 பேர் உயிரிழந்துள்ளனர். குண்டுகள் நிரப்பப்பட்டிருந்த காரை ஓட்டி வந்த ஒருவர் அதனை வெடிக்க வைத்துள்ளார் என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை ஓர் உணவு விடுதியில் நிகழ்ந்த மற்றொரு குண்டுவெடிப்பு சம்பவத்தில் 35 பேர் உயிரிழந்துள்ளனர். 45 பேர் காயமடைந்தனர்.

சன்னி பிரிவினரின் எதிர்ப்பு போராட்டத்தில் பாதுகாப்பு படை நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக இந்த தாக்குதல்கள் ஷியா பிரிவினர் அதிகம் உள்ள பகுதிகளில் நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. இருப்பினும் இந்த தாக்குதல்களுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

இந்த மாதத்தில் மட்டும் தாக்குதல் சம்பவங்களில் சுமார் 385 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பக்தாத்தின் பிற இடங்களில் பொலிஸாரைக் குறிவைத்து தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்றும், பாதுகாப்புத் தரப்பினர் போன்று உடையணிந்து வந்து தற்கொலைத் தாக்குதல்களை பயங்கரவாதிகள் நடத்துகின்றனர் என்றும் பொலிஸார் கூறுகின்றனர். (ற)

ஈராக்கில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நாளாந்த செயற்பாடாக மாறியுள்ளன. ஒரு நாள் மட்டும் சராசரியாக 100க்கும் மேற்பட்டவர்கள் தாக்குதல்களில் உயிரிழக்கின்றனர்.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 2012 ஆம்,2013 ஆம் ஆண்டுகளுக்கான தமிழியல் விருது விழா மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த விழாவில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் கலந்து கொண்டு விருது வழங்கினார். (ச)

பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நியமனத்தை வழங்குங்கள்

வழங்காவிட்டால் அரசுக்கு எதிராகப் போராட்டம்

கொழும்பு, ஒக்.22
எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் 10,000 ரூபா சம்பளம் பெறும் பட்டதாரி பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் பட்டதாரி பயிலுநர்கள் அரசுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரி வித்தார்.

பட்டதாரி பயிலுநர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசால் பட்டதாரி பயிலுநர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு ஆறு மாதங்களின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று தெரிவித்தே வேலை வழங்கப்பட்டது.

தற்போது ஒரு வருடமும் மூன்று மாதங்களும் கடந்த நிலையில் இதுவரை அவர்கள் நிரந்தர நியமனம் வழங்கப்படாத நிலையிலேயே உள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2500 இற்கும் மேற்பட்டோர் நிரந்தர நியமனத்தை எதிர்பார்த்துள்ளனர். இதே போன்றே அம்பாறை மாவட்டத்திலும் நிலைமையுள்ளது. இந்தப் பட்டதாரி பயிலுநர்களை இங்குள்ள அமைச்

அரசு எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் பட்டதாரி பயிலுநர்களை நிரந்தர நியமனம் ஆக்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

சர்களும் அரசு சார்பான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இணைப்பாளர்களும் உங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று கூறி பட்டதாரி பயிலுநர்களை தமது அரசியல் நடவடிக் கைக்காக பயன்படுத்தி விட்டு தற்போது கையறு நிலையில் விட்டுள்ளனர்.

இந்தநிலையில் பத்தாயிரம் ரூபாவைப் பெறும் பட்டதாரி பயிலுநர்கள் தற்போதைய வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாது திண்டாடி வருகின்றனர். திருமணம் முடிக்காத பட்டதாரிப்பயிலுநர்கள் திருமணம் செய்து கொள்ள முடியாத நிலையிலும் உள்ளனர்.

இதேவேளை தென் பகுதியிலுள்ள கணிசமானவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே அரசு எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் பட்டதாரிப் பயிலுநர்களை நிரந்தர நியமனம் ஆக்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.-என்றார். (ச)

பொத்துவில் மீனவருக்கு இளைப்பாறும் கட்டடம்

அம்பாறை,பொத்துவில் பகுதியில் நன்னீர் மீனவர்களுக்கான புதிய கட்டடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மீனவர்கள் இளைப்பாறும் கட்டடத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் திறந்து வைத்தார்.

இந்தத் திறப்புவிழா நிகழ்வில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாண அமைச்சர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

117 மீனவர்களுக்கு பிணை கிடைத்தது

கொழும்பு,ஒக்.22
விதிமுறைகளை மீறி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 117 பேரும் நேற்று திங்கட்கிழமை சரீரப் பிணையில் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மீனவர்களைத் திருகோணமலை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போதே நீதிவான் யு.எல் அஸ்ஹர் பிணை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவர்கள் மீதான வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட இலங்கை மீனவர்கள் 6 பேர் கடந்த புதன்கிழமையும், வெள்ளிக் கிழமை 89 பேரும், ஞாயிற்றுக்கிழமை 22 பேரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

கஞ்சாவுடன் ஒருவர் வசமாகச் சிக்கினார்

கொழும்பு,ஒக்.22
கஞ்சாவை வைத்திருந்ததாகக் கூறப்படும் ஒருவரை ஞாயிற்றுக்கிழமை மாலை அக்கரைப்பற்றுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை, அட்டாளைச்சேனை, ஒலுவில் துறைமுகத்துக்கு அருகில் சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச்சம்பவம்தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

மலிவு விற்பனை
எங்குமே கிடைக்காத மலிவு விலையில் Sony Wega - 21" 14500/=, Sony Panasonic 29" 16000/=, DVD 3000/=, Box, அம்பிளிபயர் என்பன.
தொடர்பு: 077 044 0570
செலி ரேடியோ சென்டர் (கொமர்ஷல் வங்கி எதிரே)
56, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். (32853) (7.6)

வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம், அரியாலை கனகரட்ணம் றோட்டில் (A9 வீதிக்கு 500M தூரம்) மாடி வீடு வாடகைக்குண்டு. அலுவலகப் பாவனை/சுற்றுலா விடுதிக்கு உகந்தது.
தொடர்பு: 077 789 7795, 077 706 2005

தவறிவிட்டது
உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் சந்திரபாலன் (650392655V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன உரும்பிராய்க்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன.
தொடர்பு: 077 086 8818 (33198) (6.3.4)

காணி விற்பனைக்கு
கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் இருந்து உருத்திரபுரம் செல்லும் வீதியில் ½ ஏக்கர் தென்னங்காணி விற்பனைக்கு உண்டு. (33131) (6.3.4)
தொடர்பு: 077 845 4559, 077 778 0344, 077 310 1462

வீடும் காணியும் விற்பனைக்கு
இல.37/8, விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடும், 2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: கண்ணன்
(37963)(6.3.4) 077 653 7129

விற்பனைக்கு NSC-200 Pulsar NP-XXXX தொடரிலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு ண்டு.
தொடர்பு: 077 690 6626 (33190)(6.3.4)

கடை வாடகைக்கு யாழ்ப்பாணத்தில் தட்டாதெரு சந்திக்கு அண்மித்ததாக கடை வாடகைக்குண்டு.
தொடர்பு: 075 923 7546 (33197)(6.3.4)

கடை வாடகைக்கு
யாழ்ப்பாணம், கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் பல ஆண்டுகளாகப் பலசரக்கு வியாபாரம் செய்து வரும் இரண்டு கடைகள், சகல பத்திரிகை விநியோகத்துடன் வாடகைக்கு உண்டு. (33190)(6.3.4)
தொடர்பு: 077 906 1027

மலிவு விற்பனை
அவித்த கோதுமை மா 10kg 1000/=
வறுத்த அரிசி மா 10kg 700/=
இடியப்ப மா 10kg 900/=
(சாதாரண நீரில் தயாரிக்கக் கூடியது)
(33195) (7.6.3) தொடர்பு: 071 727 3686

நாய்க்குட்டி விற்பனை
அல்சேசியன் 35 நாள் குட்டிகள் விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு: 077 658 9868 (33169)(6.3.4)

நாய்க்குட்டி விற்பனைக்கு
நல் இன டோபர்மன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 015 8804 (33168)(6.3.4)

யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
கலந்துரையாடல்
சகல அங்கத்தவர்களுக்கும்,
வடமாகாண விவசாயமும், கமநலசேவைகளும், கால்நடை அபிவிருத்தி, சுற்றாடல் அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசன் அவர்கள், சங்கம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அறிந்து அதற்கு உரிய தீர்வுகளைப் பெற்றுத் தருவதற்காக நேரடியாக சங்க இயக்குநர் சபை அங்கத்தவர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.
எனவே இன்று (22.10.2013) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அனைத்து அங்கத்தவர்களையும் சங்க தலைமைக் காரியாலயத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
(8/13151) (7.6.3)
இருபாலை வீதி, கோண்டாவில் நெடுங்குளம், கோண்டாவில்.
தலைவர்
யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்.

பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/யாழ்ற்றன் கல்லூரி சிரேஷ்ட ஆசிரியர்
செல்வி
சுபத்திராதேவி இராஜசிங்கம்
சர்வதேச ஆசிரியதினம் 05.10.2013 அன்று கௌரவ கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் "பிரதீபா பிரபா" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையிட்டும் பாராட்டுவதுடன் அவர் மேன்மேலும் பட்டங்கள் பெற்று சிறப்புறப் பணி செய்து வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.
CONGRATULATIONS!
பாராட்டுவோர்:
அதிபர், ஆசிரியர்கள்
யா/வலந்தலை வடக்கு அ.மி.த.க வித்தியாலயம், காரைநகர்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2013 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆசிரியருக்கான "பிரதீபா பிரபா" எனும் ஜனாதிபதி விருதினை வென்ற திருமதி **சோதிமலர் ஏகாம்பரநாதன்** (சுகாதாரமும் உடற்கல்வியும்) அவர்கள் மேலும் பல விருதுகள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.
குடும்பத்தினர் மற்றும் உறவினர்.
Best Wishes

மழை காலத்தில் அல்லலுறும் இரத்தினபுரம் கிராம மக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.22

தொடர்ந்து கடும் மழை பெய்யுமானால் கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியைச் சேர்ந்த 490 குடும்பங்கள் இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிலையேற்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குக் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக மீள் புனரமைப்பு இல்லாது காணப்படும் இரத்தினபுரம் கிருஸ்ணர் ஆலய வீதியும், அதனோடு இணைந்த வாய்க்காலும் சேதமடைந்தமையே முக்கிய காரணமாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக அங்கு வசிக்கும் தா.லோகேஸ்வரன் என்பவர் தெரிவிக்கையில்:-

மேற்படி வீதி மற்றும் வாய்க்கால் புனரமைப்புப் பணிகள் கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்டவைகளாகும்.

கடந்த காலங்களில் அரச அதிபர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேச சபைச் செயலாளர் எனப் பலருக்கு மனுக்கள், கடிதங்கள் என்பன அனுப்பிய போதிலும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை. பெருமழை பெய்யுமானால் இரத்தினபுரம் பகுதி மக்கள் இடம்பெயரக் கூடிய நிலை உருவாகும்.

வருடா வருடம் 490 குடும்பங்கள் இந்த வகையில் பாதிப்படைந்து வருகின்றன. கிளிநொச்சி கனகாம்பிகைகுளம் நிரம்பியவுடன் இங்குள்ள வீதி நீர் நிறைந்து காட்சியளிக்கும்.

கடந்த காலங்களில் மழைகாலத்தின் போது வெள்ளம் ஏற்படுகின்றபோது இங்கு வசிக்கும் முதியவர்கள், சிறுவர்கள், கர்ப்பிணிகள், பெண்கள் எனப் பலரும் பாதிக்கப்பட்டு வந்துள்ளனர்.

வருடா வருடம் 490 குடும்பங்கள் இந்த வகையில் பாதிப்படைந்து வரு கின்றன. கிளிநொச்சி கனகாம்பிகை குளம் நிரம்பியவுடன் இங்குள்ள வீதி நீர் நிறைந்து காட்சியளிக்கும்.

எனவே இந்த வீதியையும், வாய்க்காலையும் உடனடியாகப் புனரமைப்பதற்கு வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் முன்வருவதுடன் உடனடியாக அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.

(க-50)

மின்சாரம் வழங்கப்படாதமையால் இருளில் மூழ்கும் பனிக்கன்குளம்

கிளிநொச்சி,ஒக்.22

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பனிக் கன்குளம் கிராமத்துக்கு மின் சாரம் வழங்கப்படாததால் அந்தக் கிராமம் இருளில் மூழ்கிக் காணப் படுவதுடன் இங்கு பல்வேறு பிரச் சினைகளும் தலைதூக்கியுள்ளதாகக் கிராம மக்கள் வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங் குளம் பகுதியில் ஏ-9 வீதிக்கு அருகில் "பனிக்கன்குளம்" கிராமம் காணப்படுகின்றது. இந்தக் கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் அடிப்படை வசதிகளற்ற நிலையில் காணப்படுகின்றனர். வீதிகள்கூட சீரான முறையில் புனரமைக்கப்படாத நிலையே இங்கு காணப்படுகின்றது.

மேலும் ஏ-9 வீதிக்கு அருகில் இந்தக் கிராமம் காணப்படுகின்ற போதிலும் இதுவரை மின்சாரம் வழங்கப் படாத நிலையும் இங்கு காணப் படுகின்றது.

இரவு வேளைகளில் இந்த செல் லும்போது தாம் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருவதாக இந்தக் கிராம மக்கள் கூறுகின்றார்கள். குறிப்பாக இரவா கியதும் யானை களின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

கிராமத்தினுள் நுழையும் யானைகள் வீட்டு வளவுகளிலுள்ள பயிர்களையும், வேலிகளையும் சில வேளைகளில் வீடுகளையும் நாசம் செய்து வருவதாகவும் இரவு வேளைகளில் வீதிகளில் செல்வதற்கு அச்சமாக உள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராமத்தில் பாடசாலை செல் லும் மாணவர்கள் அதிகளவில் காணப்படுகின்ற போதிலும் மின் சாரம் இல்லாததால் குப்பி விளக்கு களின் வெளிச்சத்தையே நம்பி யுள்ளனர். மின்சார வசதி கிடைத் தால் இவர்களின் கல்விக்குப் பேருதவியாக இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, தமது கிராமத்துக்கு உடனடியாக மின்சாரத்தை வழங்கித் தமது இன்னல்களைப் போக்குமாறு பனிக்கன்குளம் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-426)

மீள்குடியமர்ந்த மக்களுக்கு சுயதொழில் கடனுதவி

மீள்குடியமர்ந்த மக்களுக்கான சுயதொழில் கடனுதவிகள் கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்தில் இன்று வழங்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கடனுதவியைப் பெறுவதற்குத் தகுதியான 277 பேரின் பெயர்ப்பட்டியலும் செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதனை அலுவலக நேரங்களில் பார்வையிட முடியும். மேலும், பெயர்ப் பட்டியலில் பெயர் உள்ளவர்கள் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்துக்குச் சென்று தமது கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (க)

ஏப்ரல் மாதத்துடன் முடிவுக்கு வரும் மீள்எழுச்சித் திட்டம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழான மீள்எழுச்சித்திட்ட வேலைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்துடன் நிறைவுபெறுமெனக் கிளிநொச்சி மாவட்ட மீள்எழுச்சித்திட்டப் பிரதிப் பணிப்பாளர் அ.விஜயகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது நடைபெறும் வேலைகள் அனைத்தும் நிறைவு செய்யப்படும். ஆனால் புதிய வேலைத்திட்டங்கள் எவையும் இடம்பெறாது. வடமாகாண சபையே அனைத்து வேலைகளையும் முன்னெடுக்கும் என்றார். (க-18)



கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையினால் மாணவத் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நடத்தப்பட்டபோது. (க-18)

வீதியில் குவிக்கப்பட்ட கிரவலால் இடர்களை எதிர்கொள்ளும் மக்கள்

கிளிநொச்சி, ஒக்.22

கிளிநொச்சி பூநகரி தம்பிராய் செல்லும் பிரதான வீதியில் கிரவல் மண் போடப்பட்டு மாதக் கணக்கில் காணப்படுவதால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பூநகரி-மன்னார் வீதியில் இருந்து அத்தாய் ஊடாகத் தம்பிராய் செல்லும் பிரதான வீதியிலேயே கிரவல் மண் குவியலாகப் போடப்பட்டுப் பரவப்படாத நிலையில் காணப் படுகின்றது.

ஐந்து மாதங்களுக்கு முன்னர் போடப்பட்ட கிரவல் மண்ணே இவ்வாறு குவியலாகக் காணப்படுகின்றது.

மேலும் இந்த வீதியைப் புனரமைப்பதற்கான பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஒப்பந்தகாரர் குறித்த வேலையை உரிய காலத்தில் பூர்த்தி செய்யவில்லை.

இதனால் இந்த வீதியைப் பயன் படுத்தும் மக்களே சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

(க-6)

நடந்து செல்லும் மாணவர்களுக்கு சைக்கிள் வழங்குமாறு கோரிக்கை

அக்கராயன்.ஒக்.22

துணுக்காய் கல்வி வலயத்தில் நீண்ட தூரம் நடந்து பாடசாலை செல்லும் வறிய நிலையிலுள்ள மாணவர்களை இனங்கண்டு சைக்கிள்கள் வழங்குவதற்கு உதவி அமைப்புக்கள் முன்வரவேண்டும் என்ற கோரிக்கை பெற்றோர்களால் விடுக்கப்பட்டுள்ளது.

பஸ் வசதி இல்லாத நிலையில் பாடசாலைகளுக்கு மாணவர்கள் நடந்து செல்லும் அவலம் துணுக்காயில் காணப்படுகின்றது. சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்தைப் பல மாணவர்கள் நடந்து சென்று கல்வி கற்று வருகின்றனர்.

இதனால் மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் வீதமும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த நிலையில் உதவி அமைப்புக்கள் இந்த மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்குவதற்கு முன்வர வேண்டும் எனப் பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மடுக்கல்வி வலயம், கிளிநொச்சி மேற்குப் பகுதி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலைகளுக்கு நீண்ட தூரம் நடந்து செல்வதைக் காணமுடிகின்றது.

கண்டாவளையிலும் இவ்வாறான தொரு நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)



பாவனைக்கு உதவாத பஸ்தரிப்பு நிலையம்

மழை, வெய்யிலில் பாதிக்கப்படும் பயணிகள்

மன்னார்.ஒக்.22

மன்னார்-மதவாச்சி பிரதான வீதியில் உயிலங்குளம் நொச்சிக்குளம் சந்தியில் அமைந்துள்ள பயணிகள் தரிப்பிடம் கடந்த பல மாதங்களாகப் பாவனைக்கு உட்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்களும், பாடசாலை மாணவர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

நொச்சிக்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு முன்பாகவே குறித்த பயணிகள் தரிப்பிடம் அமைந்துள்ளது. மன்னார் பிரதேச சபையின் கண்காணிப்பில் குறித்த பயணிகள் தரிப்பிடம் அமைந்துள்ள போதிலும் மன்னார் பிரதேச சபை இது தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனவும் அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த பயணிகள் தரிப்பிடம் கழிவுகள் நிறைந்த நிலையில் காணப்படுகின்றது. மேலும் கறையான் புற்றுக்களும் காணப்படுகின்றன. தரிப்பிடத்தின் ஓடுகளும் உடைந்த நிலையில் காணப்படுகின்றன. இதனால் பயணிகளும்,



பாடசாலை மாணவர்களும் வீதியில் வெய்யில், மழைக்கு மத்தியில் நிற்க வேண்டிய அவலநிலை காணப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் தரிப்பிடத்தில் நிற்காமல் வீதிகளில் நிற்பதனால் விபத்துகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

தற்போது மழைக்காலம் என்பதால் பயணிகள் பஸ்ஸுக்குக் காத்து நிற் பதில் பல சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே, மன்னார் பிரதேச சபை இதில் அக்கறை செலுத்துவதுடன் குறித்த பயணிகள் தரிப்பிடத்தைச் சீர்செய்து தருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-12)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு திருகோணமலை நகரசபை பொது நூலக மண்டபத்தில் மாபெரும் புத்தகக் கண்காட்சி நேற்று திங்கட்கிழமை நடை பெற்றபோது திருகோணமலை நகரசபை தலைவர் க.செல்வராஜா. வலயக் கல்விப் பணிப்பாளர் என்.விஜேந்திரன் உட்பட பலர் புத்தகக் கண்காட்சியை பார்வையிடுகின்றனர். (ச-40)

சம்பூர் மக்களுக்கு தொடர்ந்து அவலம்

மீள்குடியமர்வில் முரணான தகவல்கள் என்கிறார் மாகாண சபை உறுப்பினர்

மூதூர்.ஒக்.22

கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக முகாம்களில் வாழும் சம்பூர் மக்கள் தொடர்ந்து அவலங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். அவர்களது மீள்குடியமர்வு குறித்துப் பல் வேறு முரண்பாடான தக வல்கள் வெளியாகி யுள்ளன. இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் குமார சாமி நாகேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: சம்பூர் மக்கள் விரைவில் மீள்குடியமர்வு செய்யப்பட வேண்டும் என்று உயர் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. அதேவேளை அரச தரப்புக் கள் சம்பூர் மக்களில் அதிகள வானோர் மீள்குடியு மர்த்தப் பட்டுள்ளனர்; சிலரே மீள்குடி யமர்த்தப்பட வேண்டியுள்ள னர்; அவர்களுக்கான இடம் அடையாளம் காணப்பட்டுள் ளது என்று தெரிவித்துள்ளன. அந்தச் சந்தர்ப்பத்தில் மனு தாரர் தரப்புச் சட்டத்தரணிகள் அதனை நிராகரித்து இன் னும் 200 குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்படவில்லை. அவர்களுக்கான தீர்வு வழங்

கப்படவில்லை என்று கூறி யுள்ளனர். இதில் எல்லாமே குழப்பமான தகவல்களா கும். இன்னமும் 888 குடும் பங்கள் முகாம்களில் தங்கி யுள்ளனர்.

சம்பூர் பிரதேசத்தில் இரண்டு கிராம சேவையாளர் பிரிவுக ளிலும் ஒரு வட்டாரம் கூட இன்னமும் முழுமையாக குடியமர்த்தப்படவில்லை. எனவே சிலரே குடியமர்த்த வேண்டியுள்ளவர்கள் என்ற தகவல் தவறானது.

இதேவேளை அனல் மின் நிலையம் அமைப்பதால் சுமார் 200 குடும்பங்களின் நிலங்கள் நிரந்தரமாக இழக்க நேரிடும். ஆனால் அவர்க ளுக்கான மாற்றுத் தீர்வு குறித்துத் தீர்வு காணப்பட வில்லை.

எனவே இந்த விடயங்கள் குறித்து அடுத்த விசாரணை யின்போது நீதிமன்றத்துக்குத் தெளிவுபடுத்தப்பட்டு சம்பூர் மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். துயரத்தை அனு புவிக்கும் சம்பூர் மக்களின் பிரச்சினை கடந்த இரண்டு மாதங்களாக தினமும் பேசப் படுகின்ற விடயமாக மாறி யுள்ளது.-என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச-40)

யானை தாக்கி ஒருவர் காயம்

மட்டக்களப்பு.ஒக்.22

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவிலையாறு பிரதேசத்தில் யானை தாக்கி ஒருவர் படு காயமடைந்துள்ளார்.

அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நபர் நேற்று திங்கட் கிழமை அதிகாலை தனது வீட்டுக்கு அருகில் வந்த யானையை துரத்துவதற்கு முயற்சித்த வேளை அவர் யானையால் தாக்கப்பட்டுள் ளார்.

எரிபொருள் நிலையம் இயங்காததால் சிரமம்



மட்டக்களப்பு, திமிலைதீவு கால்நடை வளர்ப்போர் கூட்டு றவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம் கடந்த இரண்டு வாரங்களாக மூடப்பட்டுள் ளது.

அதனால் எரிபொருள் கொள் வனவுக்காக வரும் மக்கள் ஏமாற்றம் அடைந்து செல்கின் றனர். இந்த எரிபொருள் நிலை யத்தில்டீசல், மண்ணெண் ணெய், பெற்றோல் ஆகியன விநியோகிக்கப்படுகின்றன.

வவுணதீவு பிரதேசத்திலிருந் தும், எனைய பிரதேசங்க ளில் இருந்தும் வாகனங்கள் இங்கு எரிபொருள் நிரப்பு வதற்காக வருகின்றன.

இந்த எரிபொருள் நிலையம் மூடப்பட்டுள்ளதால் தாம் பல் வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது என்று மக்கள் கவலை தெரி விக்கின்றனர்.

எனவே, இந்த எரிபொருள் நிரப்புநிலையத்தைஉடனடியா கத் திறப்பதற்கு சம்பந்தப் பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (ச)

திருமலை கடலில் 24 மீனவர் கைது

திருகோணமலைக் கடற்பரப் பில் தடை செய்யப்பட்ட மீன் பிடி வலைகளைப் பயன்ப டுத்திய 24 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை ரோந்து சேவையில் ஈடுபட்ட கடற்படையினர் குறித்த மீன வர்களைக் கைது செய்துள்ள னர்என்று கடற்படைப் பேச்சா ளர் கொமாண்டர் கோசல வர்ண

குலசூரிய தெரிவித்தார்.

அவர்களுடைய நான்கு படகு களையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் திரு கோணமலை மாவட்டக் கடற் றொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச)

கோட்டக்கல்வி பணிப்பாளராக செல்வநாதன்

மட்டக்களப்பு.ஒக்.22

கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் அம்பாறை, நாவிதன்வெளி புதிய கோட் டக்கல்விப் பணிப்பாளராக நாராயணன் செல்வநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கோட்டக்கல்விப் பணிப்பாள ராகக் கடமையாற்றிய விநா யகம்பிள்ளை ஓய்வுபெற்ற தையடுத்து, அவரின் வெற் றிடத்துக்குச் சம்மாந்துறை கல்விவலயத்தில் கடந்த 15 வருடங்களாகத் தமிழ் மொழிப் பாடத்திட்டத்துக்கான உத விக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய நா. செல்வ நாதன் நியமிக்கப்பட்டுள் ளார். (ச)

கல்முனை மாநகர சபையால் தமிழ் பிரதேசம் புறக்கணிப்பு

கல்முனை.ஒக்.22

கல்முனை மாநகர சபை யால் தமிழ் பிரதேசங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்று மக்கள் குற்றம் சாட்டி யுள்ளனர்.

கல்முனை பிரதான வீதியு டன் இணையும் பிரதான பாதையான அம்மன் கோவில் வீதியில் உள்ள வடிகால் அடைப்பால் நீர் வடிந்தோ டுவது தடைப்பட்டு நீர் தேங்கி உள்ளது.

இதுதொடர்பின் கல்முனை மாநகர சபைக்கு மக்கள் அறிவித்தும் எவ்வித நடவ டிக்கையும் எடுக்கவில்லை. இதுகுறித்து கல்முனை மக் கள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மு.இராஜேஸ் வரனின் கவனத்துக்குக்

கொண்டு செல்லப்பட்டதைய டுத்து அந்த இத்தை மாகாண சபை உறுப்பினர் பார்வை யிட்டார்.

இந்தவிடயம் குறித்து கல் முனை முதல்வரின் கவனத் துக்கு கொண்டு செல்வதாக அவர் கூறியுள்ளார். அத னையடுத்தும் துப்புரவு பணி கள் நடைபெறவில்லையா யின் மாகாண சபையின் கவனத்துக்குக் கொண்டு செல் வதாக மாகாணசபை உறுப் பினர் உறுதியளித்தார்.

இந்த வீதியில் பிரபல பாட சாலை, மூன்று தனியார் கல்லூரிகள் ஆகியன உள் ளன. தமிழர் பிரதேசம் என் பதால் கல்முனை மாநகர சபை பராமுகமாகச் செயற்படு கிறது என்று தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இனபாகுபாடுகள் இன்றி செயற்பட்டவர் மன்சூர்

ஹரிஸ் எம்.பி.புகழாரம்

கல்முனை.ஒக்.22

பதவிக்கால தன் அரசியல் கொள்கை மாறாது இனப் பாகு பாடின்றித் தொழில் வாய்ப்புக் கள், அபிவிருத்திகளை மேற் கொண்டவர் முன்னாள் அமைச் சர் ஏ.ஆர்.மன்சூர். இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எச்.எம். எம்.ஹரிஸ் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூரின் கடந்த கால சேவை களைப் மருதமுனை மக்கள் பாராட்டி கௌரவித்த நிகழ்வு சனிக்கிழமை மருத முனை அல்-மனார் வித்தியாலயத் தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:-

1976 காலப்பகுதிகளில் ஊழல், லஞ்சம் தலைவிரித்தாடிய காலமாகும்.

அன்றைய காலங்களில் படித்த இளைஞர்கள் தொழில் பெறுவதென்றால் பணம் கொடுக்கும் நிலையும் காணப்

> “ ஊழல், லஞ்சம் ஒழிக்கப் பட்டு, படித்த முஸ்லிம், தமிழ் இளை ஞர்களுக்கு தொழில் வாய்ப் புக்களை பெற் றுக் கொடுத்தவர் மன்சூர்.

பட்டது. 1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏ.ஆர்.மன் சூர் பதவிக்கு வந்ததும் ஊழல், லஞ்சம் ஒழிக்கப் பட்டு, படித்த முஸ்லிம், தமிழ் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தார். அதனால் அவர் இரு சமூகங்களாலும் மதிக்கப் படும் ஒரு அரசியல் தலை மையாகக் காணப்படுகின் றார்.- என்றார். (ச)

கட்சியின் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு குழு

அம்பாறை, ஒக்.22

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் அனைவரையும் உள்ளடக்கி குழுவொன்று நிய மிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் அம்பாறை மாவட்ட மத்திய குழுக் கூட்டம் கட்சித் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் அட்டாளைசேனையில் இடம் பெற்றபோதே இவ்வாறான குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் தமது கட்சியைப் பிரதிநிதித்துவப்ப டுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப் பினர்கள், உள்ளூராட்சிமன்ற தலைவர்கள்,உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை ஒன்றிணைத்துக் கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையிலேயே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கவேண்டும் கனடா

முன்னாள் பிரதமர் பிரைன் மல்ரொனி கோரிக்கை

இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் மாநாட்டை கனடா புறக்கணிக்கக் கூடாது என்று கனடாவின் முன்னாள் பிரதமர் பிரைன் மல்ரொனி கோரிக்கை விடுத்துள்ளார்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பிரச்சினைகள் இருக்கலாம். எனினும், அந்தப் பிரச்சினைகளை ஏனைய நாடுகள் இணைந்து பேசுவதன் மூலம் சரி செய்யமுடியும். இந்தநிலையில் கனடாவின் பிரசன்னம் கொழும்பு மாநாட்டில் அவசியம். இல்லையேல் கனடாவின் 146 வருட ஜனநாயக பண்புகளை உள்நாட்டிலும் வெளியில் உள்ள நட்பு நாடுகளுடனும் எவ்வாறு பகிர்ந்து கொள்வது என்றும் பிரைன் மல்ரொனி கேள்வியெழுப்பியுள்ளார்.

53 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட பொதுநலவாய அமைப்பில் கனடா முக்கிய நாடாக உள்ளது. உதாரணமாக 1961ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பங்கேற்ற அன்றைய கனேடியப் பிரதமர் ஜோன் டைபென் பேக்கர் தென்னாபிரிக்காவின் நிறவெறிக்கு எதிராகப் பிரேரணை ஒன்றை முன்வைத்து அதனை நிறை வேற்றியமையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக தென்னாபிரிக்கா பொதுநலவாய நாடுகளில் இருந்து விலகி, 1990 ஆம் ஆண்டு நிறவெறிக் கொள்கை முடிவுக்கு வந்த பின்னரே மீண்டும் பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இணைந்து கொண்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விபத்தில் ஒருவர் சாவு

கடவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு - கண்டி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாதசாரிகள் கடவையினூடாக வீதியைக் கடக்க முற்பட்ட ஒருவரை லொறி மோதியதில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்ற இந்த விபத்தில் காயமடைந்தவர் ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

பேஸ்புக் குறித்த முறைகேடு தொடர்பில் கடும் நடவடிக்கை

பொலிஸ் தலைமையகம் எச்சரிக்கை

பேஸ்புக் உள்ளிட்ட சமூக இணைத் தள முறைகேடுகள் தொடர்பில் அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

குறிப்பாக இலங்கையில் இருந்தவாறு எவரேனும் சமூக இணைத்தள முறைகேடுகளில் ஈடுபடுவாராயின் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை களை மேற்கொள்வதற்கான அதிகாரம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இனந்தெரியாதவர்கள் அனுப்பும் மின் அஞ்சல்களை பார்வையிடும் போது விழிப்புடன் செயற்படுமாறு பொலிஸ் தலைமையகம் இணைத்தள பாவனையாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இனந்தெரியாதவர்களுக்கு இணைத்தளம் ஊடாக தகவல்களை வழங்க வேண்டாம் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

சமூக இணைத்தளங்களுடன் தொடர்புடைய முறைகேடுகள் குறித்து விசாரணைகளை முன்னெடுப்பதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் விசேட பிரிவொன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ரணில் வெளிநாடு பயணம் சஜித்தும் கருவும் விசனம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ அதிகார மாற்றங்கள் தொடர்பாக நியமிக்கப்படவுள்ள உத்தேச கட்சித் தலைமைத்துவ சபை பற்றிய பிரேரணையும் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கட்சியின் தலைமைத்துவ சபை தொடர்பாக கரு ஜயசூரிய, சஜித் பிரேம தாச ஆகியோருடன் ரணில் விக்கிரமசிங்கவே பேச்சு நடத்தவிருந்தார். இருந்தும் ரணில் விக்கிரமசிங்க அதனைத் தவிர்த்து கபீர் ஹாஸிமை அதற்காகப் பெயரிட்டு வெளிநாடு சென்றுள்ளார் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரணில், சஜித், கரு ஆகியோர் சந்திக்க இருந்தாலும் கட்சித் தலைவர் இன்றி கபீர் ஹாஸிமைச் சந்திப்பது தொடர்பாக சஜித்தும், கருவும் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

தேசிய பிக்குமார் முன்னணியின் பிரதம போஷகரான கிராம்பே ஆனந்த தேரர் எதிர்க் கட்சித் தலைவருக்கு வழங்கிய ஏழு பிரேரணைகளை எதிர்க்கட்சித் தலைவர் 19 வரை அதிகரித்துள்ளார். இது தொடர்பாக கட்சித் தலைவர் தலைமைத்துவக் குழு தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கவில்லையானால் ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்கள் பலர் செயற்குழுவிலிருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளனர் எனவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிக்குகளுக்கென தனி நீதிமன்றம்

கண்டியில் பௌத்த மத குருமாருக்கு தனியான நீதிமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. குற்றச்செயல்களில் ஈடுபடும் பௌத்த துறவிகள் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் இந்த நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

இன்று கண்டியில் இந்த நீதிமன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. பௌத்த துறவிகளுடன் தொடர்புடைய சகல வழக்குகளும் இந்த நீதிமன்றில் துரிதகதியில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் ஒரு சில நாட்களுக்குள் வழக்கு விசாரணைகள் பூர்த்தியாகும் எனவும் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மஹிந்த அரசுக்கு எதிராக வேடுவர்கள் போர்க்கொடி



வேடுவர்கள் துடுப்பாட்டம் விளையாடுவது அவர்களின் கலாசாரத்துக்கும் மரபுகளுக்கும் எதிரானது என்று கலாசார விவகார அமைச்சர் ரி.பி. எக்கநாயக்க தெரிவித்த கருத்துக்கு எதிராக வேடுவ சமூகம் போர்க்கொடி தூக்கியுள்ளது.

அமைச்சர் தம் மீது கட்டுப்பாடுகளை விதிக்க முனைகின்றார் எனக் குற்றம் சாட்டியுள்ள, வேடுவர்களின் மொழியியலாளர் உருவாரிகே விமலரத்ன மேலும் தெரிவித்ததாவது,

வேடுவர்கள் துடுப்பாட்டத்தை நீண்டகாலமாகவே ஆடும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். காலனி ஆதிக்கத்தில் இருந்தபோது அறிமுகப்படுத்தப்பட்ட இந்த விளையாட்டை எமது ஆசிரியர்கள் எமக்குக் கற்றுத்தந்துள்ளனர். ஆனால், நாம் இந்த ஆட்டத்தை ஆடும்போது, முழுக் காற்சட்டையையோ, சம்பாத்துகளையோ அணிவதில்லை. வேடுவர் சமூகம் தமது இருப்புக்கு அச்சுறுத்தலான பல விடயங்களை இன்று எதிர் கொள்கிறது.

முன்னைய காலங்களில் எமது முன்னோர்கள் விடியும் போது காட்டுக்குச் சென்று வேட்டையாடி விட்டு மறு நாள் திரும்புவார்கள். ஆனால் இப் போது இரவே திரும்புமாறு கட்டாயப் படுத்தப்பட்டுள்ளோம். எம் மீது புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

நாம் காட்டுக்குள் வேட்டைக்குச் செல்லும்போது, ஒரு தீப் பெட்டியைக் கூட கொண்டு செல்ல அனுமதிப்பதில்லை. கடுமையான சட்டங்களால் தான் வேடுவர்கள் தமது அடையாளத்தை விட்டுக் கொடுக்க நேர்ந்துள்ளது - என்று தெரிவித்துள்ளார்.

பிக்குகள் அரசியல் செய்வதால் பௌத்த சாசனத்துக்குப் பாதிப்பு

அஸ்கிரிய பீடாதிபதி காட்டம்

பௌத்த பிக்குகள் அரசியல் மற்றும் ஏனைய விடயங்களில் தலையீடு செய்வதால் பௌத்த சாசனம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடக் கூடாது என கண்டி அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்தரகித்த தேரர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாணசபை உறுப்பினர் ரஞ்சித் அலுவிஹாரே, அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் அரசியல் செய்யும் தரப் பினர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு தர்ம உபதேசங்களை வழங்கி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டியதே பௌத்த பிக்குகளின் கடமையாகும். பௌத்த மதம் தொடர்பில் உணர்வுடன் செயற்படும் பிக்குகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து செல்கின்றது. சந்திக்கு சந்தி கூச்சலிட்டு போராட்டம் நடத்தி அரசியல் நடத்துவது பௌத்த பிக்குகளுக்கு உரிய கடமையல்ல என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உணவுப் பாதுகாப்பு வாரம் பிரகடனம் சகல உணவகங்களிலும் திடீர் சோதனை

நேற்று முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையான காலப்பகுதி சுகாதார அமைச்சினால் உணவுப் பாதுகாப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. உணவு பாதுகாப்பு வாரத்தையொட்டி நாடளாவிய ரீதியில் உள்ள உணவகங்கள், உணவு உற்பத்தி நிலையங்கள் மற்றும் உணவு விற்பனை நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

மக்கள் கொள்வனவு செய்யும் உணவுப் பொருட்களின் சுகாதாரத் தன்மையை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கம் என அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது. இந்த நடவடிக்கை தொடர்பில் அனைத்து பொது சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் மருந்துப் பொருட்கள் பரிசோதகர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித்த மஹீபால தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நாட்டின் பல பகுதிகளில் பதிவான உணவு விஷமடைந்த சம்பவங்கள், நுகர்விற்குத் தகுதியற்ற உணவுகள் தயாரித்த மற்றும் விற்பனை செய்த இடங்கள் தொடர்பில் அறியக் கிடைத்ததை அடுத்து இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு மக்கள் நுகர்விற்குத் தகுதியற்ற உணவுகளைத் தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பில் 1980 இலக்க 26 பிரிவு உணவு சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

புலம்பெயர் தமிழருடனான பேச்சுகள் வெற்றி அளிக்கின்றன

அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

புலம்பெயர் தமிழர்களுடனான பேச்சு வெற்றியளித்து வருகிறது. விடுதலைப் புலிகளின் முன்னாள் சிரேஷ்ட உறுப்பினர் குமரன் பத்மநாதன் இந்தப் பேச்சுகளை நடத்தி வருகிறார் என அரசு தெரிவித்துள்ளது.

புலம்பெயர் தமிழர்களுடனான பேச்சுகளின்போது இடைத்தரகராக குமரன் பத்மநாதன் செயற்படுகின்றார். எனவே, நீதி மன்ற நடவடிக்கைகளின் போது அரசின் சாட்சியாக குமரன் பத்மநாதனைப் பயன் படுத்துவதில் தவறில்லையென ஊடக அமைச்சர் ஹெக லிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"பிரச்சினைகளுக்கு போர் ரீதியான தீர்வுத் திட்டம் மட்டும் உசிதமானதல்ல. தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் போது பல்வேறு விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். சர்வதேச சமூகத்துடன் நெகிழ்வுத்தன்மையுடன் செயற்பட வேண்டும். குமரன் பத்மநாதனை சர்வதேச பொலிஸார் கைதுசெய்யவில்லை. இலங்கை புலனாய்வுப் பிரிவினரே அவரை கைது செய்தனர்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டிக் கொள்ளாத நிலை தொடரலாமா?

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள, போரில் உயிர்நீத்த மாவீரர்களுக்கு அமைக்கப்பட்ட துயிலும் இல்லங்களைச் சுற்றிவர, முட்கம்பியால் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. 1990, 1996, 1997 ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்ட துயிலும் இல்லங்களுக்குள் எவரும் உட்புகா வண்ணம் முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிட்ட பிரதேசங்களில் மட்டுமன்றி, வன்னி மாவட்டங்கள் முழுவதிலும் பெரும் பதற்றத்தை தோற்றுவித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

மாவீரர் துயிலும் இல்லங்களில் படையினர் தமக்கான தளங்களை அமைப்பதில் ஈடுபட்டிருப்பதும், மாவீரர் நாளுக்கு இன்னமும் சுமார் ஐந்து வாரங்கள் இருக்கும் வேளையில், படையினர் இவ்வாறு செயற்படுவதும் மக்களிடையே பலவித சந்தேகங்களையும் அச்சத்தையும் தோற்றுவிப்பது இயல்பே.

மனித நாகரிகம் செழுமை அடைந்த காலத்தில் இருந்தே, இயற்கை எய்துவோரின் பூதவுடல்களை மண்ணில் புதைத்து நினைவுக்கல் நடுவதும், ஈமம் செய்து நினைவுக்கல் நடுவதும் உலகின் சகல பாகங்களிலும் நடைபெற்று வருகின்றன. அரசர்கள் காலம் தொடக்கம் போர் வீரர்களின் நினைவுக் கற்களுக்கு பல்வேறு வடிவங்களில் மரியாதை செய்யப்படுவது ஒன்றும் புதியது அல்ல.

நோயாளிகள், உயிர்நீத்தவர்கள், சமயத் தலைவர்கள், முதியவர்கள், சிறுவர்கள் போன்றவர்கள் வாழும் போதே அவர்களுக்கு இரக்கம் காட்டுவதும், மரியாதை செய்வதும் மனிதப் பண்புகளில் அடங்கும். அதேபோன்று பேரர் வீரர்களுக்கு நினைவுக் கல் நடுவதும் அவர்களுக்கு மரியாதை செலுத்துவதும் தொன்றுதொட்டு நிலவிவருகிறது.

ஆனால் இலங்கையில், அதன் வடக்கு, கிழக்கில் நடைபெற்ற போரில் தமது உறவுகளை இழந்தோர் அவர்களை நினைவு கூர்வதற்குத் "தடை போடும்" புதிய சகாப்தம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்கான செயல்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டன. யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பாய், கொடிகாமம், தீருவில், சாட்டி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த துயிலும் இல்லங்கள் ஏற்கெனவே சிதைத்து அழிக்கப்பட்டுவிட்டன. அவற்றில் ஒன்றில் ஒரு படைப் பிரிவின் தலைமையகம் அமைக்கப்பட்டு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேபாணியில், வன்னிப் பிரதேசத்தில் உள்ள துயிலும் இல்லங்களைச் சிதைத்து அழித்துவிடும் வேண்டத்தகாத வன்மப் போக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போரில் உயிர் நீத்தவர்கள் விதைக்கப்பட்ட இடங்களை அழித்து நிர்மூலம் செய்துவிடுவதால், அவர்களை அவர்தம் உறவுகளின் இதயங்களில் இருந்து பிடுங்கி எறிந்து விடலாம் என்பது ஒருவகை மழுங்கிய சிந்தனை என்பது தர்க்கத்துக்கு உரியதன்று.

படை நகர்த்துவதிலும், போரில் வெற்றி பெறுவதற்கும் புதிய உத்திகள், தந்திரோபாயங்களை பயன்படுத்தும் தரப்புகள், போரின் மறுபக்கத்தைச் சேர்ந்தவர்கள் உயிர் துறந்தபின்னர்-

அவர்களை மதிக்கும் மாண்பை, நாகரிகத்தை மறந்து போகும் தன்மை மனிதநேயம் உள்ளவர்களிடம் இருக்காது; அது குறித்துச் சிந்திப்பதும் பாவம்.

போரில் உயிர் நீத்தவர்கள், மாண்டு போகவில்லை என்று அவர்களின் உறவுகள் தாம் உயிர் நீக்கும் வரை மனதில் கொண்டிருப்பது, வரலாற்றுக் காலம் தொட்டு அனைத்துலக ரீதியில் இயல்பாகவே எழுந்த மனிதநேயம்.

இந்த நாகரிக உலகத்தில், அது இலங்கையில் மட்டும் மறக்கப்படுவது, மறக்கப்பட்டிருப்பது, மறக்கடிக்கப்படுவது விசித்திரமான வினையாக எழுந்து நிற்பது; கவலைக்கும் கண்டனத்துக்கும் உரியதாகும்.

ஒரு நாட்டின் பிரசைகளுக்கு-மக்களுக்குச்-சேர வேண்டிய அரசியல் உரிமைகள், மனித உரிமைகள் மறுக்கப்படுவது தவிர்க்க முடியாத, தடுக்கமுடியாத அரச இயல்பு என்று அனைத்துலகுக்குப் புதிதாகப் புத்திமதி கூறும் அவாவினாலா இத்தகைய போக்கு கைக்கொள்ளப்படுகின்றது என்ற வினாவும் எழுகிறது.

தமிழ் மக்களை உண்மையாகவே நேசித்து, அவர்களுக்கு உரிய உரிமைகளைத் தொய்வின்றி வழங்குவதற்கு, ஆட்சியில் உள்ள, ஆட்சிக்கு வரும் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் மனங்கொள்ளாதவரை, பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டமுடியாத நிலையே தேறும். அதில் மாற்றம் கொள்ள முனையலாகாதா?

தமிழினப் பகையின் இரட்டை முகங்கள்

வரும் மக்களவைத் தேர்தலில், தமிழினப் பகை ஆற்றலான காங்கிரசை வீழ்த்திட, பாரதிய ஜனதாக் கட்சியை ஆதரித்தால் தவறென்ன இருக்கிறது என்று தமிழின உணர்வாளர்களில் சிலர் கருதுகின்றனர். ஆனால் இரண்டும் ஒன்றென்பதை விளக்குகிறது இந்தக் கட்டுரை.

தமிழ்த் தேசியத் தமிழன்

பாஜக இந்திய ஆட்சியில் இருந்தபோது தமிழ் நாட்டுக்கும், ஈழத்துக்கும் ஆதரவாக என்ன செய்தது?

2000 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் சிங்களப் படையினரு டமிருந்து ஆனையிறவு முகாமை மீட்டனர். அடுத்து, யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகள் மீட்டு விடுவார்கள் என்ற அச்சம் இலங்கை அரசுக்கு ஏற் பட்டது. அதே அச்சம் வாஜ்பாய் அரசுக் கும் ஏற்பட்டது.

அப்போதைய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங் ஓர் எச்சரிக்கை அறிக்கை வெளியிட்டார். விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுக்கக் கூடாது. அவ்வாறு படையெடுத்தால் அங்குள்ள இலங்கைப்படையினருக் கும் புலிகளுக்கும் நடக்கும் போரில் இரத்த ஆறு ஓடும் உயிர் இழப்புகள் ஏராளமாக ஏற்படும் என்றார்.

இலங்கைப் படையினர் தோற்று விடுவர்; படையாள்கள் ஏராளமாகக் கொல்லப்படுவர் என்ற பதற்றத்தில் அவ்வாறு அவர் அறிக்கை வெளியிட்டார். அத்தோடு நில்லாமல், சிங்களப் படைக்கு ஒரு போர்க் கப்பலையும் வாஜ்பாய் அரசு வழங் கியது. யாரைக் கொல்வதற்காக அந்தப் போர்க்கப்பல் வழங்கப்பட்டது? தமிழர்களைக் கொல்வதற்குத் தான்!

2008 - 2009 இல் ராஜபக்ஷ அரசு, தடை செய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டு களையும், கொத்துக் குண்டுகளையும் வீசி ஈழத்தமிழர்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்றது. போர் நிறுத்தம் கோரி தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதியினரும் போராடினர். போர் நிறுத் தம் கோரி முத்துக்குமார் தொடங்கி தமிழர்கள் அடுத்தடுத்து தீக்குள்ளித்து மடிந்தனர். அப்போது பாஜக தலைமை போர் நிறுத்தம் கோராதது ஏன்?

தமிழின அழிப்புக்கு ஆதரவு வழங்கின

அப்போது சிங்களப் படைக்கு மன் மோகன் அரசு ஆயுதம் கொடுத்தது. அவ்வாறு ஆயுதம் கொடுக்கக் கூடாது என்று அவரிடம் மனுக்கொடுத்த வைகோ வுக்கு, எழுத்து வடிவில் அளித்த விடை யில், இந்தியா இலங்கைக்கு ஆயுதம் கொடுக்காவிட்டால் சீனா கொடுக்கும் என்று ஞாபகப்படுத்தினர். மன்மோகன் அரசு இலங்கைக்கு ஆயுதம் கொடுக்கக் கூடாது என்று பா.ஜ.க. கூறியதுண்டா? இல்லை!

எல்லாம் முடிந்து, தமிழினம் அழிக்கப்பட்ட பின், இலங்கை அரசு நடத்தியது இன அழிப்புக் குற்றம் என்று நாடாளுமன் றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண் டும் என்று 2013 மார்ச்சில் தி.மு.க. கோரியது. அவ்வாறு தீர்மானம் நிறை வேற்றுவது பற்றிக் கருத்தறிய மக்கள வைத் தலைவர் மீராகுமார் அனைத் துக் கட்சிக் கூட்டம் நடத்தியபோது அந்த முன்மொழிவை முதலில் எதிர்த்தவர் பாஜக.வின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சுஷ்மா சுவராஜ்.

லண்டன் சனல் 4 தொலைக்காட்சியும் நியூயோர்க் மனித உரிமைக் கண் காணிப் பகமும் ராஜபக்ஷ அரசின் இனப்படு கொலைக் குற்றத்தை அக்கு அக்காக அம்பலப்படுத்தின. ஐ.நா. பொதுச் செய லாளர் பான் கீ மூன் அமைத்த தருஸ் மன் தலைமையிலான மூவர் குழுவும் 2008 -2009 இல் இலங்கைப் படை கள் செய்தது மனித குலத்துக்கு எதி ரான குற்றம் என்றது.

இவ்வளவுக்குப் பின்னும் இன அழிப் புக் குற்றவாளி ராஜபக்ஷவைப் பாஜக. ஆளும் மத்தியப் பிரதேச அரசு சிறப்பு விருந்தாளியாக அழைத்துப் பாராட்டி யது. அந்த விழாவும் சுஷ்மா சுவரா ஜின் சாஞ்சி தொகுதியில் நடந்தது. இலங்கை சென்ற இந்திய நாடாளுமன் றக் குழுவுக்குத் தலைமை தாங்கிய சுஷ்மா சுவராஜ் ராஜபக்ஷவுக்குப் பாராட்டுத் தெரிவித்தார். மறுசீரமைப்பு நடவடிக் கைகள் சிறப்பாக நடக்கின்றன என்று சான்றுரை பகன்றார். இந்திக் காரர்களுக்கு ஏதோ ஒரு நாட்டில் இப்படி இன அழிப்பு நேர்ந்திருந்தால் அந்த நாட்டுத் தலைவ ருடன் - பா.ஜ.க. தலைமை கூடிக் குலாவுமா?

ராஜபக்ஷ கும்பலை விசாரிக்கப் பன் னாட்டுப் புலானாய்வு மன்றம் அமைக்க வேண்டும் என்று தமிழ்நாட்டில் முக் கியக் கட்சிகள் அனைத்தும் கோருகின் றன. அக்கோரிக்கையை இன்று வரை பா.ஜ.க. தலைமை ஆதரிக்க வில்லையே ஏன்? காங்கிரஸுக்கும் பாஜகவுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? காங்கி ரஸ் ஆட்சியில் இருப்பதால் அதன் தமி ழினப் பகைச் செயல்கள் தெரிந்து விடு கின்றன. பாஜகவின் மௌனம், அதன் வஞ்சகத்தை மூடி மறைக்கிறது.

பதினைந்தாம் நூற்றாண்டில் அயோத் தியில் இராமர் கோயிலை இடித்து அந்த இடத்தில் மசூதி கட்டினார் பாபர் என்று கூறி அந்த மசூதியை அத்வானி தலை மையில் இடித்தனர். ஈழத்தில் நூற்றுக் கணக்கான தமிழர் கோயில்களைப் புத்த மத வெறியர்களும் சிங்களப் படைகளும் இடித்தார்கள். இன்றும் இடிக்கிறார்கள். தமிழர் கோயில்களைப் புத்தவிகாரைக ளாக மாற்றுகிறார்கள். இந்த அநீதியை பா.ஜ.க. கண்டிக்காதது மட்டுமல்ல, அதைச் செய்யும் ராஷபக்ஷவுக்கும் சிவப் புக் கம்பளம் விரிக்கிறது.

காங்கிரசும் பாஜகவும் தமிழினப் பகையின் இரட்டை முகங்கள்!

பாரதிய ஜனதாவுக்கென்று ஓர் இன அரசியல் இருக்கிறது; ஒரு மத அரசியல் இருக்கிறது. ஆரிய இனச்சார்பும் பார்ப் பனிய மதச்சார்புந்தான் அது கூறும் இந்துத் துவா இந்தியரும் ஆரியர், சிங் களரும் ஆரியர், இருநாடுகளும் ஒற்று மையாக இருக்க வேண்டும் என்று அண்மையில் அத்வானி கூறினார்.

இந்தியாவின் இனப் பன்மை, பண்பாட் டுப் பன்மை, மொழிப் பன்மை, மதப் பன்மை ஆகிய அனைத்தையும் ஒழித்து, ஒற்றை அடையாளமாக இந்தியன் - இந்துத்துவா என்பதை நிலைநாட்ட வேண்டும் என்பது ஆர்.எஸ்.எஸ், பாஜக ஆகியவற்றின் திட்டம்.

தமிழ்நாட்டில் தமிழ் முகமூடி அணிந்து தமிழர்களை ஈர்க்க வேண்டும் என்பது அவர்களின் உத்தி! அதனால்தான் திருச்சி யில் 26.9.2013 அன்று பேசும் போது, மோடி செந்தமிழ்நாடு என்னும் போது காதில் தேன் வந்து பாயுது என்றும் தமிழன் என்றோர் இன முண்டு தனியே அவற்கோர் குணமுண்டு என்றும் தமிழ் மொழியிலேயே கூறினார். இலட்சக் கணக்கில் ஈழத் தமிழர்கள் இனக்கொலை செய்யப்பட்ட போது இரங்கல் தெரிவிக்க ஒரு சொல் மோடிக்குக் கிடைக்கவில்லை. குசராத்தில் 2002 இல் மோடி ஆட்சியின் துணையோடுதான் இரண்டாயிரம் அப்பாவி இஸ்லாமியர்களைப் படுகொலை செய்தனர். காரில் போகும் போது குறுக்கே ஓடிவரும் நாய்க்குட்டி அடிபட்டுச் செத்துப் போனால் ஏற்படும் வருத்தம்தான் 2002 நிகழ்வுகள் பற்றி எனக்கு ஏற்பட்டது என்று அண்மையில்தான் அயல்நாட்டுச் செய்தி ஊடகத்திடம் கூறினார் மோடி. இப்படிப் பட்ட ஆரிய இந்துத்துவா வெறியன் இந்தி யாவின் பிரதமர் ஆகிவிட்டால் ஆரியத்தின் பெயரால் ஹிட்லர் செய்ததையெல்லாம் இந்தியாவிலும் செய்யலாம் என்பது ஆர். எஸ்.எஸ். திட்டம்.

அண்மைக்காலமாக மோடி பேசும் கூட்டங்களில் இந்திய இராணுவத்தின் பெருமைகளை திறமைகளை ஈகங்களை வானளாவ புகழ்கிறார். முன்னாள் இரா ணுவத் தளபதி வி.கே.சிங். மோடியுடன் சேர்ந்துள்ளார். தனிப் பெரும்பான் மையுடன் நரேந்திர மோடி தலைமையில் பாஜக ஆட்சி அமைத்துவிட்டால், இந்தி யாவில் உள் நாட்டுப் போர்நடக்கும் அல் லது மற்றவர்கள் அனைவரும் ஆரியத் துக்கு அடிமை என்பதை அமைதியாக ஏற்றுக் கொண்டி ருப்பார்கள்.

அரசுக் கட்டிலில் அமர்ந்துவிட்டால் ஆரியம் முதலில் பாய்வது தமிழ்மொழி மீதும் தமிழ் இனத்தின் மீதுமாகத்தான் இருக் கும். மூவாயிரம் ஆண்டுகளாக ஆரிய ஆதிக்கத்தை, வடமொழி ஆதிக்கத்தை எதிர்த்துச் சமர் புரிந்து வருவது தமிழ் இனமும் தமிழ்மொழியும்தான்.

மொழிவழி மாநிலங்கள் நிர்வாக மாநிலங் களாகப் பிரிக்கப்படும். பிரதமர் ஆட்சி முறையைக் குடியரசுத் தலைவர் ஆட்சி முறையாக மாற்றுவார்கள். ஒரே இடத்தில் அதிகாரங்களைக் குவித்துக் கொள்வார் கள். இட ஒதுக்கீட்டை சிதைத்துச் சின்னா பின்னமாக்குவார்கள்! எதிர்ப்புக் கிளம் பினால் இராணுவத்தை அனுப்புவார்கள்! திருச்சியில் தமிழ்ப் பெருமை தமிழ்நாட்

டுப் பெருமை பற்றியெல்லாம் மோடி பேசிய அதே பேச்சின் பிற்பகுதியில் காங்கிரஸ் ஆட்சி மொழி வழி மாநிலங் களை அமைத்து இந்தியாவைப் பிளவு படுத்திவிட்டது என்றார். காங்கிரஸ் ஆட்சி மொழிவழி மாநிலம் அமைக்க மறுத்தது. போராட்டங்கள் வெடித்தன. வேறு வழியில் லாமல் மொழி வழி மாநிலம் அமைத்தது. காங்கிரசும் பாஜகவும் - ஆரியத்தின் - தமிழினப் பகையின் இரட்டை முகங்கள்! இவ் விரண்டும் தமிழ்நாட்டில் வேர் பிடிக்க விட்டால் தமிழினம் தனக்கான சவக் குழியைத் தானே தோண்டிக் கொள்கிறது என்று பொருள்! எச்சரிக்கை.

பொதுநலவாய மாநாட்டால் பெரும் சிக்கலில் இலங்கை

எம்.ஏ. சுமந்திரன்
நாடாளுமன்ற உறுப்பினர்
தமிழ் தேசியக் கூட்டமைப்பு

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கான நாள் நெருங்கி வருகின்றது. அதனால் மாநாடு தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் அதிகரித்த வண்ணமுள்ளன. குறிப்பாக இந்த மாநாட்டில் பங்கேற்க கனடாவின் பிரதமரை அனுப்பாமல் இருக்கும் முடிவை கனடா எடுத்துள்ளமை பெரும் அமளியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக கனேடிய பிரமர் ஸ்டீபன் ஹார்பர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கீழ்காணும் விதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2013 ஆண்டில் பொதுநலவாய நாடுகள் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்ட போது, அந்நாட்டில் மனித உரிமைகள் தொடர்பாக நிலவி வந்த மோசமான நிலையை சீர் செய்வதற்கும், நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கும், பொறுப்புக் கூறல் செயற்பாட்டில் முன்னேற்றம் அடைவதற்கும் இதை ஒரு வாய்ப்பாக இலங்கை அரசு பயன்படுத்திக் கொள்ளும் என கனடா எதிர் பார்த்தது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது அவ்வாறு நடைபெறவில்லை .

கனடா பங்கேற்காது

போரின் போதும், அதன் பின்பும் மோசமான விதத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டும் சர்வதேசம் ஏற்றுள்ள மானுட விழுமியங்கள் மற்றும் பொறுப்புக் கூறலைப் புறக்கணித்தும் வரும் இலங்கையின் போக்கைக் கனடாவால் ஏற்க முடியாது. மேலும் இவ்வாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் பிரதம நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியமையையும் கனடாவால் ஏற்க முடியவில்லை. அத்துடன் அரசியல் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தல், அவர்களைக் கைது செய்தல், சிறுபான்மை இனத்தவரைத் துன்புறுத்தல், காணாமால் போதல்கள் மற்றும் சட்டத்துக்குப் புறம்பாக மேற்கொள்ளப்படும் கொலைகள் போன்றவையும் கனடாவைக் கவலை கொள்ளச் செய்துள்ளது. இவைகள் மூலம் பொதுநலவாய நாடுகளின் அடிப்படையான பெறுமானங்களை நிலை நிறுத்தும் விடயத்தில் இலங்கை தோல்வியையே சந்தித்துள்ளமை தெளிவாகின்றது. இவைகளின் அடிப்படையில் இலங்கையில் கொழும்பு நகரத்தில் நடைபெறவுள்ள 2013 ஆண்டு பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் கனடாவின் பிரதமர் என்ற தோரணையில் பங்கேற்பதை நான் தவிர்த்துக் கொள்கின்றேன் என்று அவர் கூறியுள்ளார். கனடாவின் இந்த நிலைப்பாடு இலங்கை அரசை அதிருப்திக் கொள்ளச் செய்துள்ளதுடன் பொதுநலவாய நாடுகள் மாநாட்டை அரசியல் மயப்படுத்துவதற்கான ஓர் எத்தனிப்பு என இதை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் சாடியுள்ளார் .

புறக்கணிப்பைப் பற்றி சிந்திக்க வேண்டும்

இத்தருணத்தில் இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக சிந்தித்தபடி கனாடாவைச் சாடுவதை விடுத்துக் கனாடாவின் இந்த முடிவில் பொதிந்துள்ள யதார்த்தமான விடயத்தின் பக்கம் தன்னுடைய கவனத்தைச் செலுத்துவது பயன் தரும். இலங்கையர் என்ற அடிப்படையில் நம்முடைய மனோபாவம் நமது நாட்டில் நடத்தப்படும் இது போன்ற சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வை யார் புறக்கணிக்கிறார்கள்? யார் புறக்கணிக்க வில்லை? என்பதாக இருக்கக் கூடாது. மாறாக, இது போன்றதொரு புறக்கணிப்பை பற்றி ஏனையோர் சிந்திக்கும் விதத்தில் நம் நாட்டின் மனித உரிமைகளின் நிலை இருப்பதை பற்றியே நாம் அதிகம் கவலை கொள்ள வேண்டியுள்ளது.

கனடாவின் இந்த முடிவு பற்றிய விமர்சனங்களைச் செய்து கொண்டிருப்பதற்கே இலங்கை அரசு திட்டம் இடுமெனில், அதற்கு முன் நம் நாட்டின் மனித உரிமைகள் உள்ள மோசமான நிலையைப் பற்றி அக்கறை கொள்ளும் ஒரே நாடு கனடா மட்டும் அல்லவென்ற உண்மையை நம் அரசு முதற்கண் உணர வேண்டும்.

பிரிட்டனின் நிலைப்பாடு

மேற்படி மாநாட்டில் பங்கேற்பதற்குப் பிரிட்டன் முடிவு செய்துள்ள போதிலும், அது மிகுந்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் எடுக்கப்பட்டதொரு முடிவு என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும். 2011 ஆம் ஆண்டு நத்தார் தினத்தில் இலங்கையில் மர்மான விதத்தில் படுகொலை செய்யப்பட்ட பிரிட்டிஷ் பிரஜை ஒருவரான குரம் ஷேக்கின் கொலை தொடர்பான விசாரணையில் எந்த முன்னேற்றமும் இல்லாத நிலையைச் சுட்டிக்காட்டி மாநாட்டைப் பிரிட்டன் புறக்கணிக்க வேண்டும் என எலிஸபெத் இராணியார் பலமாக வலியுறுத்தி வருகின்றார். இதே வேளை, இலங்கை விடயத்தில் ஒரு வித கோழைத்தனமான, நிலையற்ற போக்கையே பிரிட்டன் கடைபிடிப்பதாகப் பிரிட்டனின் நாடாளுமன்றக் குழுவொன்று குற்றம் சாட்டியுள்ளது. பொதுநலவாய நாடுகள் மாநாட்டை நடத்துவதற்கு முன், அந்நாட்டில் உள்ள மனித உரிமை தொடர்பான நிலைகளை சீர் செய்வதை ஒரு நிபந்தனையாக இலங்கை அரசு இட்டிருக்க வேண்டும் எனவும், இலங்கையில் அதிகரித்து வரும் மனித உரிமை மீறல்களின் அடிப்படையில் பிரிட்டன் இதை விடச் சிறந்த, கொள்கைப்பிடிப்பு மிக்கதொரு தீர்மானத்தை எடுத்திருக்க வேண்டும் எனவும் அக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. இதேவேளை பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் பிரிட்டன் பங்கேற்பதை இலங்கையின் தற்போதையை நடவடிக்கைகளை பிரிட்டன் அங்கீகரிப்பதாக இலங்கை பொருள் செய்யக் கொள்ளக் கூடாது என பிரிட்டன் அரசு கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

மனித உரிமை விடயங்கள், சட்டத்தின் ஆளுகை, நீதித்துறையின் சுயாதீனம் போன்ற விடயங்கள் தொடர்பான இலங்கை அரசின் போக்குப் பற்றி தான் கவலை கொள்வதாக இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ரன்கின் சில வாரங்களுக்கு முன் மிகத் தெளிவாகக் கூறியிருந்தார். அத்துடன் இம்முறை பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்வதற்குத் தனது நாடு முடிவு செய்ததற்கான காரணம் அது உலகில் எங்கு நடைபெறுகின்றது என்பதை விட பொதுநலவாயக் கட்டமைப்பின் அந்த நிகழ்வுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற பிரிட்டனின் நிலைப்பாடேயாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த மாநாடு காரணமாக மாநாட்டின் போதும் அதன் பின்பும் இலங்கை மீது விழும் சர்வதேச பார்வையானது, பொதுநலவாய நாடுகளின் முக்கியமானதொரு அம்சமான நல்லாட்சியை இலங்கை செயல் வடிவத்தில் காட்டுவதற்கான அழுத்தத்தை இலங்கைக்கு ஏற்படுத்துவதற்கான ஒரு காரணியாக அமையும் என்றும், மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு ஆகியவை தொடர்பாகக் காத்திரமான முன்னேடுப்புக்களை இனியாவது இலங்கை மேற் கொள்ள வேண்டும் என்ற செய்தியுடனேயே பிரிட்டனின் டேவிட் கமரூன் இம்மாநாட்டில் பங்கேற்க வருகின்றார் என்றும் ரன்கின் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் முடிவு இன்னமும் இல்லை

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் பங்கேற்பதா இல்லையா என்ற விடயம் இந்தியாவுக்கும் ஒரு பெரும் பிரச்சினையாகவே இந்த நிமிடம் வரை இருந்து வருகின்றது. மனித உரிமைகள் தொடர்பாக இலங்கையின் போக்கைக் கண்டிக்கும் விதத்தில் மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்ற உள் நாட்டு அழுத்தம் இந்தியாவில் அதிகரித்த வண்ணமே உள்ளது. இறுதியாக கிடைத்த செய்திப் படி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மாநாட்டில் கலந்து கொள்ளமாட்டார் என்றே தெரிகின்றது. உலகின் முக்கிய பல நாடுகளில் ஏற்பட்டு வரும் இந்த குழப்பமான சூழலை அவதானிக்கும் போது இலங்கை யின் மனித உரிமை மீறல்கள் உட்பட்ட ஏனைய விடயங்களான பொதுநலவாய நாடுகள் மாநாட்டுடன் மட்டும் தொடர்பான அல்லது அதனுடன் முடிந்து போகும் ஒரு பிரச்சினை அல்ல என்பது தெளிவாகின்றது.

சில வாரங்களுக்கு முன் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஒரு பிரகடனத்தில், 2014 மார்ச் மாதத்துக்கு முன் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணை ஆகிய விடயங்களில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடையாத பட்சத்தில் சர்வதேச விசாரணை ஒன்றை சந்திக்க அது தயாராக வேண்டி வரும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். இப்பிரகடனமானது, ஐநா சபை இலங்கைக்கு எதிராக இரு தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றை இலங்கை பொருட்படுத்தாமல் அசட்டையாக இருக்கும் பின்னணியிலேயே விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதன் போது ஐ.நா சபை புதிதாக எதையும் இலங்கைக்குக் கூறவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைத்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் வைத்த பரிந்துரைகளைச் செயற்படுத்துமாறே ஐ.நா இலங்கை அரசை வலியுறுத்தியது.

இலங்கைக்கான வாய்ப்பு நய வஞ்சகத்தின் உச்சம்

ஒரு நாடு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இந்தளவு உள்நாட்டு வெளிநாட்டு விமர்சனங்களுக்கு இலக்காகி இருக்கும் போதே பொதுநலவாய நாடுகள் மாநாடு போன்றதொரு முக்கிய நிகழ்வுக்கு தலைமை தாங்கும் வாய்ப்பு அதற்கு வழங்கப்பட்டிருக்கும் அசாதாரண நிலை பற்றி உலக நாடுகள் பொதுவாக துனுக்குற்றுள்ளதோடு மிகுந்த அவதானிப்புடனேயே அதனை கண்காணித்து வருகின்றன.

இலங்கைக்கு இந்த வாய்ப்பை வழங்க வேண்டாம் எனப் பொதுநலவாய நாடுகளின் வெளி நாட்டமைச்சர்களுக்கு மனித உரிமைகள் கண்காணிப்பகம் என்ற சர்வதேச மனித உரிமை அமைப்பு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்தே வருகின்றது. இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அந்த அமைப்பின் பணிப்பாளர் ட்ரேட் டம்ஸ் பெரும் போர் குற்றச்சாட்டுக்கள் தொடுக்கப்பட்டுள்ள ஒரு நாட்டுக்குப் பொதுநலவாய நாடுகள் மாநாட்டின் தலைமைத்துவம் வழங்கப்பட்டுள்ளமை பெரும் முறைகேடான ஒரு நடவடிக்கை மட்டுமன்றி ஜனநாயக கோட்பாடுகளை மதிக்காத, தன்னுடைய குற்றச் செயல்களுக்கு மனம் வருந்தாத ஓர் அரசுக்கு இந்த வாய்ப்பை அளித்திருப்பது நயவஞ்சகத்தின் உச்சமாகும் என்று சாடியுள்ளார்.

மாநாட்டை யார் புறக்கணிப்பார்கள் அல்லது பங்கேற்பார்கள் என்பது இலங்கையரான நமக்கு ஒரு பெரும் பிரச்சினை அல்ல. அது தொடர்பான தீர்மானங்கள் அந்தந்த நாடுகளின் உரிமையாவதோடு அதை நாம் மதிக்க வேண்டும். பிரிட்டனின் கூற்றுப் படி தான் இம்மாநாட்டில் பங்கேற்பதை இலங்கையின் செயற்பாடுகளுக்கான அங்கீகாரமாக இலங்கை அரசு கொள்ளக் கூடாது என்பது தெளிவாகின் றது. மேலும் பிரிட்டன் இதில் பங்கேற்பதன் மூலம் வேறு சில விடயங்களை இலக்கு வைத்திருக்கவும் இடமுண்டு. அதாவது மாநாட்டைப் புறக்கணிக்காமல் அதில் பங்கேற்று, அந்த பங்கேற்பின் உரிமை ஊடாக மனித உரிமை மற்றும் ஏனைய விடயங்களுக்காக அதிக அழுத்தத்தை இலங்கைக்கு கொடுக்க பிரிட்டன் எண்ணியிருக்கலாம்.

இதே வேளை, இலங்கையின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்தில் மாநாட்டைப் புறக்கணிக்கும் கனடாவின் முடிவும் போற்றத் தக்கதே. கனடாவின் இந்த நடவடிக்கையை இலங்கைக்கு எதிராக அந்நாடு மேற் கொள்ளும் ஓர் அரசியல் தாக்குதலாக இலங்கை அர்த்தம் செய்வது விவேகமாகாது. கனடாவின் இந்த நடவடிக்கையானது அந்நாடு உலகில் மனித உரிமைகள் மீறப்படுவதற்கு எதிராக மேற்கொண்டு வரும் பல்வேறு பட்ட நடவடிக்கைகளின் ஓர் அங்கம் மாத்திரமே. கனடாவின் இது போன்ற நடவடிக்கைகளை உலக நாடுகள் என்றும் போற்றியும் பாராட்டியும் வந்துள்ளமை யாவரும் அறிந்ததே.

கனடாவின் நடவடிக்கை பாராட்டுதற்குரியது

உலகில் மனித உரிமையை நிலை நாட்டும் விடயத்தில் கனடாவின் பங்களிப்பு மிகவும் பிரசித்தம் பெற்றதாகும். ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு பிரிவாக இன்று செயற்பட்டு வரும் சர்வதேச சமாதானப் படை கனடாவின் ஒரு முன்மொழிதலேயாகும். அதே போன்று கறுப்பர்களுக்கு வேற்றுமை காட்டும் தென்னாபிரிக்காவின் போக்கை கண்டித்து 1980 ஆண்டில் அந்நாட்டுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்ற யோசனையும் கனடாவே ஐ.நா சபையில் முன் வைத்தது. மேலும் 1996 ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து பர்மாவுக்கு எதிரான மட்டுப்படுத்தப் பட்ட பொருளாதாரத் தடைகளை கொண்டு வரும் விடயத்திலும் கனடாவே முன்னின்று செயற்பட்டது. அதைத் தொடர்ந்து 2007 ஆண்டில் பெலாரஸ்ஸில் பெரும் மனித உரிமை மீறல்கள் நடைபெற்ற போதும், சிரிய அரசு தன்னுடைய சொந்த மக்களுக்கு எதிராகவே கொடுமைகளைக் கட்டவிழ்த்த போதும், ஈரானின் கடந்த பத்தாண்டு கால தெளிவற்ற மனித உரிமைக் கோட்பாடுகளின் போதும் அந்நாடுகளுக்கு எதிராக ஐ.நாவை நடவடிக்கைகள் எடுக்க ஊக்குவிக்கும் விடயத்தில் கனடாவே முன்னின்றது. அது மட்டுமின்றி சர்வதேசக் குற்றச் செயல் நீதிமன்றக் கோட்பாட்டையும் கனடாவே முன் மொழிந்ததோடு அது அமைக்கப்பட்டதன் பின் அதன் முதல் தலைவராகச் சில காலம் பணியாற்றிய நீதியரசர் பிலிபே கர்ஷம் ஒரு கனேடியரே ஆவார்.

இந்தளவு சாவதேச நன்மதிப்பை பெற்றுள்ள கனடா போன்றதொரு ஒப்பற்ற தேசம் நம் நாட்டில் நடைபெற விருக்கும் ஒரு சர்வதேச வைபவத்தில் பங்கேற்க மறுத்துள்ளமையை தான் நம்முடைய வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் அது பொருட்படுத்த வேண்டிய விடயமே அல்ல என்று ஒதுக்கித் தள்ளியுள்ளார். உண்மையில் இது ஒரு விவேகமான, செல்லுபடியாகக் கூடிய ஒரு நிலைப்பாடு அல்ல. மனித உரிமை பாதுகாப்பு தொடர்பாக கனடாவின் அர்ப்பனிப்புகளை இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா உட்பட்ட பல உலக நாடுகள் வானளவு மெச்சும் போது பேராசிரியர் அவர்கள் கனடாவைப் பற்றிக் கருத்துத் தெரிவிப்பதற்கு முன் இரு முறை சிந்தித்துப் பார்த்திருக்கலாம் என்றே தோன்றுகின்றது.

தென்னாபிரிக்காவும் சிந்திக்க வேண்டும்

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது தொடர்பான விடயம் இவ்வாறு சர்ச்சைக்குரியதாக இருக்கும் நிலையில் தென்னாபிரிக்கக் குடியரசும் இது பற்றி நன்றாகச் சிந்தித்து ஒரு முடிவை எடுப்பதே பொருத்தமாகும். தன்னுடைய நாட்டு மக்களில் ஒரு சாராருக்கு அநீதிகளை இழைத்த வண்ணம் தென்னாபிரிக்கா அழிவின் பாதையில் நடை போட்டுக் கொண்டிருந்த போது உரிய தருணத்தில் ஐக்கிய நாடுகள் சபை பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்ததன் பயனாகத் தென்னாபிரிக்கா சுதாரித்துக் கொண்டு தன்னை திருத்திக் கொண்டது. அதன் வெளிப்பாடாக இன்று அந்நாடு நல்லிணக்கம், சமூக ஒற்றுமை, சகவாழ்வு, அபிவிருத்தி போன்ற அம்சங்களில் ஒரு சிறந்த முன்மாதிரியாக உலகில் திகழ்கின்றது. நிலைமை அவ்வாறிருக்க தன்னுடைய கடந்த காலத்தை மறந்து விட்டது பொல தென்னாபிரிக்கா நடந்து கொள்ளாமல் தன்னுடைய கடந்த காலத்துடன் இலங்கையின் நிகழ்காலத்தை ஒப்பிட்ட வண்ணம், பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது தொடர்பாக நல்லதொரு முடிவை அந்நாடு எடுக்க வேண்டும்.

இதேவேளை, இங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேசம் குறை கூறும் போதெல்லாம், குறுகிய அரசியல் இலாபம் கருதி அதை வெளிநாட்டு சதி, அது, இது என்றெல்லாம் கூறியபடி அதற்கு அரசியல் முலாம் பூசுவதற்கு முயற்சிப்பதை நம் அரசும் இனியேனும் விட்டு விட நம் நாட்டுக்கு எதிரான கடந்த கால ஐ.நா தீர்மானங்கள் முதல், தற்போதைய பொதுநலவாய மாநாடு தொடர்பாக இன்று ஏற்பட்டுள்ள சர்ச்சைக்குரிய நிலை வரை பல்வேறுபட்ட விதங்களில் இலங்கைக்கு சர்வதேசம் அழுத்தம் கொடுத்து வந்தாலும் அவை அனைத்திலும் பொதிந்துள்ள செய்தி ஒன்றேயாகும். மேலும் இந்த அழுத்தங்களின் தீவிரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையும் அரசு உணர வேண்டும். காதுகளில் விரல்களை வைப்பதனால் கோசங்கள் குறைந்து விடும், மறைந்து விடும் என எண்ணுவது விவேகமாகாது. மாறாக, அதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வுகளைக் காண்பதன் மூலமே கோசங்களையும் எதிர்ப்புக் களையும் வெற்றி கொள்ள முடியும்.

இலங்கையர் என்ற அடிப்படையில் நம்முடைய மனோபாவம் நமது நாட்டில் நடத்தப்படும் இது போன்ற சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வை யார் புறக்கணிக்கிறார்கள்? யார் புறக்கணிக்க வில்லை? என்பதாக இருக்கக் கூடாது. மாறாக, இது போன்ற தொரு புறக்கணிப்பை பற்றி ஏனையோர் சிந்திக்கும் விதத்தில் நம் நாட்டின் மனித உரிமைகளின் நிலை இருப்பதை பற்றியே நாம் அதிகம் கவலை கொள்ள வேண்டியுள்ளது.

முகாவில் பகுதியில் கட்டடங்கள் திறப்பு

பளை, ஒக்.22

சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினரால் இயக்கச்சி முகாவில் பகுதியில் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சனசமூக நிலையம், முன்பள்ளி, ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றுக்கான கட்டடத் தொகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

கட்டடத் தொகுதிகளை சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனப் பிரதிநிதி, பளைப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பளைப் பிரதேச சபையின் இயக்கச்சி உப அலுவலகப் பொறுப்பதிகாரி ஆகியோர் திறந்து வைத்தனர்.

போரால் அழிவடைந்த முகாவில் பகுதியில் சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினர் குடியிருப்புக்களை அமைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் குறித்த கட்டடங்களை அந்த நிறுவனத்தினரே அமைத்துக் கொடுத்தனர். (வ-9)

காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா புதன்கிழமை கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவனும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் மருத்துவபீடப் பேராசிரியருமான வை.பரமேஸ்வரன், சிறப்பு விருந்தினராகத் தீவக வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். விருந்தினர்கள் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்து வரப்படுகின்றனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-250)

நீரிறைக்கும் இயந்திரத்தை திருடியவர் கைதானார்

வலி வடக்கு ஒக் 22

வவுனியா செட்டிகுளம் பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் இருந்து 95 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரத்தைத் திருடிய சம்பவம் தொடர்பாக மெனிக்பாமைச் சேர்ந்த ஒருவர் செட்டிகுளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



குறித்த தோட்டத்தில் உள்ள கிணற்றில் நீர் இறைப்பதற்காக பொருத்தப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டுப்போன சம்பவம் தொடர்பாக செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணை அடிப்படையில் மெனிக்பாமைச்சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரிடமிருந்து நீர் இறைக்கும் இயந்திரம் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரை வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றினால் கட்டளையிடப்பட்டுள்ளது. (வ-86)

சந்தேக நபருக்கு பிணையில் செல்ல அனுமதி

வலி.வடக்கு, ஒக்.22

வீட்டை உடைத்து 22 ஆயிரத்து 850 ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்ற சந்தேக நபர் ஒருவர் ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையில் மல்லாகம் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.

மானிப்பாய், நவாலி வடக்கில் உள்ள வீட்டை உடைத்து அங்கிருந்த பொருள்களை களவாடிச் சென்றமை தொடர்பாக உரிமையாளரால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்ட புலன் விசாரணைகளின் அடிப்படையில் நவாலியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் இருந்து களவாடப்பட்ட பொருள்களின் ஒரு பகுதியும் மீட்கப்பட்டது.

மானிப்பாய் பொலிஸார் குறித்த சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றில் முன்னிலை செய்ததைத் தொடர்ந்து அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (வ-86)

சுற்றுலா பஸ் மோதி ஒட்டோ சாரதி காயம்

மினிபஸ் சாரதி விளக்கமறியலில்

தென்மராட்சி, ஒக்.22

எதிரே வந்த வாகனத்தைக் கவனிக்காமல் முன்னால் சென்ற வாகனத்தை முந்த முயன்ற சுற்றுலா மினி பஸ் எதிரே வந்த ஒட்டோவுடன் மோதியதில் ஒட்டோ சாரதி படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் கொடிகாமம் ஏ-9 வீதியில் இடம் பெற்றது.

மினிபஸ் மோதியதில் தடம்புரண்ட ஒட்டோச் சாரதியான கொமும்புத்துறையைச் சேர்ந்த பீற்றர் அன்ரனி விமலதாஸ் (வயது-47) என்பவரை அவ்வழியால் வந்த ஹன்டர் வாகனம் ஏற்றிவந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைத்தது.

மிகவும் ஆபத்தான நிலையில் காணப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மினிபஸ் சாரதியான திஸ்ஸ தசநாயக்கா (வயது-55) என்பவரைப் பொலிஸார் கைது செய்ததுடன் சுற்றுலாப் பயணிகளுடன் மினி பஸ்ஸையும் ஒட்டோவையும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

மினிபஸ் சாரதி கொடிகாமம் பொலிஸாரால் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் சாரதியை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-9)

ஞாயிற்றுக்கிழமை சிகை ஒப்பனை நிலையங்கள் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22

தீபாவளியை முன்னிட்டு சகல சிகை ஒப்பனை நிலையங்களையும் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திறக்குமாறு யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியத்தலைவர் கேதித் தினராசா அறிவித்துள்ளார்.

வழமையாக ஞாயிற்றுக்கிழமைகளில் சிகை ஒப்பனை நிலையங்கள் மூடப்படும் நிலையில் தீபாவளியை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சிகை ஒப்பனை நிலையங்களைத் திறக்கலாம். எனினும் தீபாவளித் தினத்தன்று சிகை ஒப்பனை நிலையங்களை மூடுமாறும் அறிவித்துள்ளார். (வ-14)

கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக்.22

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சால் ஆண், பெண் சமத்துவம், தொழில் சட்டங்கள் தொடர்பான கருத்தரங்கு நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இல.165 மானிப் பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்.வணிகர் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ-14)

இன்றைய நாள்

தருவது வித்தியா

உங்களுக்கு எப்படி?

மேடம்: முன்கோபத்தைக் குறையுங்கள். தடைப்பட்ட வேலையை மாறுபட்ட அணுகுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். சிலவற்றுக்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள். திட்டமிட்டுச் செயற்படுவதன் மூலம் வெற்றி பெறுவீர்கள்.

இடபம்: வீதிகளை கவனமாக கடந்துச் செல்லுங்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். நிதானித்து செயற்படுங்கள்.

மிதுனம்: மனதுக்கு இதமான செய்தி வரும். மற்றவர்களுக்காக சில செலவுகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். வேற்றுமதத்தவர்கள் உதவுவார்கள். அரசு காரியங்கள் விரைந்து முடியும். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் குறைகளைச் சுட்டிக் காட்டுவீர்கள்.

கடகம்: உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறைக் காட்டுவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள்.

சிங்கம்: சுறுசுறுப்புடன் செயற்பட்டு தேங்கிக் கிடந்த வேலைகளை முடிப்பீர்கள். பிரபலங்களால் ஆதாயம் உண்டு. வெளி வட்டாரத்தில் புதியவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

கன்னி: உங்களுடைய பலம் எது பலவீனம் எது என்று உணர்ந்துக் கொள்வது நல்லது. இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும்.

நாளை

ஐப்பசி-06 புதன்கிழமை 23.10.2013
திதி: சதுர்த்தி மு.ப.08.56 வரை
நட்சத்திரம்: ரோகிணி மு.ப.08.36 வரை
சுபநேரம்: 04.32 - 06.02 வரை
இராகுகாலம்: 12.02 - 01.32+ வரை

துலாம்: செலவுகளைக் குறைக்கத் திட்டமிடுவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.

விருச்சிகம்: குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

தனுசு: புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலை தீர்ப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பாராட்டப்படுவீர்கள்.

மகரம்: எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். அரச அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். எதிர்பாராத உதவி கிடைக்கும்.

கும்பம்: சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. மனோபலம் அதிகரிக்கும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்குப் பாராட்டு கிடைக்கும்.

மீனம்: இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். கண்டும் காணாமல் சென்றுக் கொண்டிருந்தவர்கள் வலிய வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் புதிய தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களைச் சொல்லித் தருவார்.

சுடோக்கு

எண் விளையாட்டு

7	5			8		2	9	
				1		3	5	
	9	3	2	6	5			
1			6			9		
	6						3	
		9						2
			5	3	6	4	2	
	2	6		7				
	1	5		9				

நேற்றைய சுடோக்கின் விடை

7	6	8	1	4	3	5	2	9
4	5	9	8	2	7	1	6	3
1	3	2	6	5	9	7	8	4
9	7	1	5	3	8	2	4	6
8	2	6	4	9	1	3	7	5
3	4	5	2	7	6	9	1	8
5	8	7	3	6	2	4	9	1
6	9	3	7	1	4	8	5	2
2	1	4	9	8	5	6	3	7

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யனது.

கொழும்பில் நஷனல் PVC இன் மற்றுமொரு விநியோகத்தர்

நீஷனல் PVC குழாய்கள் மற்றும் பொருத்திகள் உற்பத்தி செய்யும் சென்ரல் இன்டஸ்றீஸ் பிஎல்சி நிறுவனம், மத்திய கொழும்பில் தமது விநியோக நடவடிக்கைகளை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் இல. 17 டீ, சென்ரல் வீதி, கொழும்பு 12 எனும் முகவரியில் அமைந்துள்ள வின்கெம் அக்ரிகெயார் (பிரைவேற்) லிமிடெட் நிறுவனத்தை தமது புதிய விநியோகத்தராக நியமித்துள்ளது.

வின்கெம் அக்ரிகெயார் நிறுவனத்தின் பங்காளர்களான கருப்பன்னப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி பிரசன்னா மற்றும் கருப்பையா பாலசுப்ரமணியம் ஆகியோர் இப்பிரதேசத்தில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த வர்த்தகர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்த நிகழ்வில் பெருமளவான நலன் வர்த்தகர்கள் மற்றும் ஹார்ட்வெயார் விநியோகத்தர்கள் போன்றோர் பங்குபற்றியிருந்தனர்.

புதிய விநியோக நிலையம் ஆமர் வீதி, மெசென்ஜர் வீதி, பழைய சோனகத் தெரு, பண்டாரநாயக்க மாவத்தை, குவெரி வீதி, சென்ரல் வீதி மற்றும் புறக்கோட்டை வர்த்தக சந்தை ஆகிய பகுதிகளில் காணப்படும் விநியோகத்தர்களுக்கு விரைவான விநியோக சேவைகளை வழங்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது. (த)

எக்ஸ்போ ஃபிரயிட், எக்ஸ்போலங்கா நிறுவனங்களுக்கு மூன்று விருதுகள்

எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி குழுமத்தின் அங்கத்துவ நிறுவனங்களான எக்ஸ்போ லங்கா ஃபிரயிட் (சிய்ஸி) மற்றும் எக்ஸ் போலங்கா (பிரை வேற்) லிமிடெட் ஆகியவற்றுக்கு அண் மையில் கொழும்பில் இடம்பெற்ற தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்தின் (NCE) 21ஆவது விருதுகள் வழங்கும் வைப வத்தில் இரண்டு தங்கம் மற்றும் ஒரு வெண்கல விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

எக்ஸ்போ லங்கா ஃபிரயிட் (EFL) மிகச்சிறந்த ஏற்றுமதியாளர் - ஏற்றுமதியாளர்களுக்கான சேவை வழங்குநர் பிரிவில் தங்க விருது மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கான சேவை வழங்குநர் 'மிகப்பெரிய பிரிவு' தங்க விருதையும் வென்றிருந்தது. கடந்த ஆண்டு இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வின் போது, இந்த பிரிவுகளில் வெள்ளி விருதையும், அதற்கு முன்னைய ஆண்டில் வெண்கல விருதையும் எக்ஸ்போலங்கா ஃபிரயிட் நிறுவனம் வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. 30 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட எக்ஸ்போலங்கா ஃபிரயிட் (EFL), ஐயுவுயுவின் ஆசியா, ஆபிரிக்கர், அமெரிக்கா மற்றும் மத்திய கீழக்கு நாடுகளுக்கான முன்னணி முகவராக இயங்கி வருகிறது. 16க்கும் மேற்பட்ட நாடுகளில் 45 நகரங்களில் 1200க்கும் அதிகமான ஊழியர்களை தன்னகத்தே கொண்டு இயங்கி வரும் எக்ஸ்போலங்கா ஃபிரயிட் (சிய்ஸி), சரக்கு கையாள்கை மற்றும் போக்குவரத்துதுறையில் உறுதியான தடத்தை பதித்துள்ளது.

ஆகாய மற்றும் கடல் மார்க்கமான சரக்கு போக்குவரத்து கையாளல்களில் நிறுவனம் பின்பற்றும் நெகிழ்ச்சித்தன்மையான தீர்வுகள், கொள்கை ரீதியான சென்றடைவு மற்றும் நிலையாண்மை மற்றும் பன்முக போக்குவரத்துக் கையாளல் மூலங்கள் போன்றன எக்ஸ்போலங்கா ஃபிரயிட் (சிய்ஸி) நிறுவனத்தை பிராந்தியத்தில் உறுதியான மாபெரும் ஆகாய மற்றும் கடல் மார்க்க சேவை வழங்குநராக நிலைநிறுத்தியுள்ளன. 1978ஆம்ஆண்டுதாபிக்கப்பட்டஎக்ஸ்போலங்கா லிமிடெட் நிறுவனம், இலங்கையின் முன்னணி பழங்கள் மற்றும் மரக்கறி வகைகளை ஏற்றுமதி செய்யும் நிறுவனமாகத் திகழ்கிறது. இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் இந்நிறுவனம் பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாய - தெங்கு உற்பத்திகளுக்கான மிகப்பெரிய பிரிவில் வெண்கல விருதைத் தனதாக்கியிருந்தது. மத்திய கீழக்கு, மத்திய தரைக்கடல், ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளில் சிறப்பான பிரசன்னத்தை எக்ஸ்போலங்கா பிரைவேற் லிமிடெட் கொண்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக இந்த உற்பத்திகளின் இலங்கைக்கான மிகப்பெரும் ஏற்றுமதியாளராகவும் திகழ்கிறது.

இந்த விருது குறித்து எக்ஸ்போலங்கா லிமிடெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அன்னாம் கருத்துத் தெரிவிக்கையில், 'இந்த விருதைப் பெற்றுக் கொண்டமையையிட்டு நாம் மிகவும் பெருமையடைகிறோம். உள்நாட்டுத் துறையை மேம்படுத்துவதில் நாம் எப்போதும் அதிகளவு அக்கறை செலுத்தி வருகிறோம். எமது உற்பத்திகளை சர்வதேச நாடுகளுக்குக் கொண்டு செல்வதிலும் அதிக கவனம் செலுத்தி வருகிறோம். இந்த விருது எமது செயற்பாடுகளுக்கு சிறந்த கௌரவிப்பாக அமைந்துள்ளது' என்றார். (த)

புதிய டான்டெக்ஸ் பிளஸ் அறிமுகம்

இலங்கையின் வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருள்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் முன்னணி நிறுவனமான ஹேமாஸ் கன்சியுமர் பிறான்ட்ஸ் நிறுவனத்தின் பொடுகு நிலை கட்டுப்படுத்தும் தயாரிப்பான டான்டெக்ஸ் புதிய மேம்படுத்தப்பட்ட சேர்மானத்துடன் இலங்கை சந்தைகளில் மீள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிமுக நிகழ்வு நுகேகொட பகுதியில் அண்மையில் இடம்பெற்றிருந்தது.

ஆண்களும் பெண்களும் எதிர்கொள்ளும் மிகவும் பொதுவான தலையுடன் தொடர்புடைய பிரச்சனையாக பொடுகுச் சிக்கல் அமைந்துள்ளது. ஆனாலும், இந்த நிலையை முறையான சுகாதார பராமரிப்பு மற்றும் வாழ்க்கை முறை பழக்கவழக்கங்களின் மூலம் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். மனிதர்களின் தலையில் காணப்படும் ஒரு வகையான பங்கஸ் நுண்ணங்கியின் மூலமாக பொடுகு நிலை ஏற்படுகிறது.

ஏனவே சாதாரணமான கூந்தல் பராமரிப்பு தயாரிப்பு பொன்றைப் பயன்படுத்தி கூந்தலை கழுவுவதன் மூலம் கண்களுக்குப் புலப்படும் பொடுகு நிலையிலிருந்து விடுதலை பெற முடியாது.

பொடுகு நிலையை ஏற்படுத்தும் காரணியை ஹேமாஸ் நிறுவனத்தின் ஆய்வு மற்றும் அபிவிருத்தி குழு பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டதன் மூலம் கண்டறிந்திருந்தது.

இந்த ஆய்வுகளின் பெறுபேறுகளைக் கொண்டு டான்டெக்ஸ் தயாரிப்பை மேலும் மெருகேற்றியுள்ளது. இந்தப் புதிய மேம்படுத்தப்பட்ட டான்டெக்ஸ் தயாரிப்புகளில் பொடுகு நிலைகளுக்கு எதிராக கடுமையாக போராடக்கூடிய க்ளிம்பசோல் எனும் சேர்மானம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த க்ளிம்பசோல் சேர்மானம் பொடுகு நிலையை ஏற்படுத்தும் மலஸ்சீசியா எனும் ஃபங்கஸ் நுண்ணங்கிக்கு எதிராக நேரடியாகப் போராடக் கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளது. ஆய்வுப் பெறுபேறுகளுக்கு அமைவாக, 30 வகையான மலஸ்சீசியா பங்கஸ் நுண்ணங்கி நிலைகளுக்கு எதிராக போராடி, பொடுகு நிலையை கட்டுப்படுத்தக்கூடியது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

புதிய மேம்படுத்தப்பட்ட டான்டெக்ஸ் ப்ளஸ் ஷாம்பு மீள் அறிமுகம் செய்யும் நிகழ்வு அண்மையில் நுகேகொட பகுதியில் இடம் பெற்றிருந்த போது, பல்வேறு பொடுகு நிலைகள் குறித்து விளக்கமளிக்கும் வகையிலான விழிப்புணர்வு செயற்பாடுகள் இடம் பெற்றிருந்தன. இந்த அறிமுக நிகழ்வுக்கு முன்னோடியாக, மக்கள் மத்தியில் பொடுகு நிலைகள் பற்றியும், அதனால் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 'தலைக்கு விடுதலை' எனும் தலைப்பில் பிரதான நகரங்களில் நடமாடும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

உள்நாட்டு சந்தையில் பொடுகு கட்டுப்படுத்தும் ஷம்பு வகையாக 1992 ஆம் ஆண்டு டான்டெக்ஸ் ப்ளஸ் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

இதில் இரண்டு வகையான ரகங்கள் காணப்படுகின்றன.

பொடுகு நிலையைக் கட்டுப்படுத்தும் வகையில் க்ளிம்பசோல் சேர்மானம் அடங்கிய டான்டெக்ஸ் ப்ளஸ் மற்றும் ஆரோக்கியமானதும், மென்மையானதும் பளபளப்பான துமான கூந்தலைப் பெற்றுக்கொள்ள உதவும் முட்டைப்புரதம் அடங்கிய டான்டெக்ஸ் ஃபெமிலி ஆகியன இவையாகும்.

அமானா வங்கியின் பயணம்

வட்டியில்லா வங்கித்துறையில் முற்று முழுதாக செயற்பட்டுவரும் இலங்கையின் ஒரேயொரு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியான அமானா வங்கி 2011ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் செயற்படத் தொடங்கியதிலிருந்து இதுவரை வர்த்தக வளர்ச்சியிலும், சந்தை நடவடிக்கைகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

இரண்டு வருடகால வர்த்தகச் செயற்பாட்டின் மூலம் வாடிக்கையாளர் நிதிவசதிகளில் 188 சதவீத வளர்ச்சியையும், வாடிக்கையாளர் பண வைப்புக்களில் 70 சதவீத வளர்ச்சியையும் பதிவுசெய்த அதேவேளை 2013ஆம் ஆண்டில் அதன் வளர்ச்சி வேகம் மேலும் அதிகரித்துள்ளது.

இதன்படி, வாடிக்கையாளர் நிதிவசதிகள் 80 கோடியாலும், வாடிக்கையாளர் பண வைப்புக்கள் 260 கோடியாலும் வளர்ச்சி கண்டுள்ளது. வங்கியின் தனித்துவமான வங்கிச் சேவைமுறை, முன்னேற்றங்கள் மற்றும் வர்த்தக வளர்ச்சியை சந்தையின் அங்கீகாரம் பிரதிபலிக்கின்றது. கடந்தவருடம் அனைத்து வங்கிகள் மீதும் விதிக்கப்பட்ட மத்திய வங்கியின் கடன் உச்ச வரம்பின் தாக்கம் உணரப்பட்டபோதிலும், அமானா வங்கி அதன் உத்வேகத்தை மீண்டும் பெற்று வாடிக்கையாளர் நிதிவசதிகளில் இந்தவருடம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ஏற்கனவே தமது வங்கிச் சேவைமுறையை ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும், இந்த எண்ணிக்கை ஒவ்வொரு மாதமும் துரிதமாக வளர்ச்சி கண்டு வருகின்றது என்றும் அமானா வங்கி குறிப்பிட்டுள்ளது.

வர்த்தக மூலோபாய ரீதியில் 24 இடங்களில் தனது கிளைகளை வியாபித்துள்ள இந்த வங்கி, நாடுபூராகவும் உள்ள 500 இற்கும் மேற்பட்ட ஏ.டீ.எம் (ATM) இயந்திரங்கள் ஊடாக கொடுக்கல் வாங்கலை மேற்கொள்வதற்கு வசதியளித்துள்ளது. தனது கிளை வியாபித்தலுக்கும் அப்பால், அமானா வங்கி தமது வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமான வகையில் பல முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளது.

சனிக்கிழமை வங்கிச் சேவை, நீடிக்கப்பட்டுள்ள வங்கி அலுவல் நேரம், 24 மணித்தியாலமும் பணத்தையும் காசோலையையும் வைப்புச் செய்வதற்கான தன்னியக்க இயந்திர (Kiosk) வசதி என்பன இந்த முன்னெடுப்புக்களில்சிலவாகும். தமதுவாடிக்கையாளர்களின் கொடுப்பனவுத் தேவைகளை சௌகரியமாக்குவதற்காகஅமானாவங்கிவெகுவிரைவில் தனது பற்று அட்டையை (Debit card) அறிமுகப்படுத்தவுள்ளது. (த)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 07 . 1971

மறைவு 03 . 11 . 2012

திருமதி ஜெயகலா செல்வச்சந்திரன்

திதி : சதுர்த்தி

ஓர் ஆண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

அச்சுவேலி வடக்கு,
மடத்தடி, அச்சுவேலி.

என்றும் நினைவில்
கணவர், பிள்ளைகள்.

(33115) (7.6.3)

வடமராட்சியில் தொழில் சந்தை

வடமராட்சி பிரதேசத்திலுள்ள வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தனியார் துறையில் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள மனித வலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் வழி காட்டல் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் ஒரு மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தத் தொழிற்சந்தையில் தனியார் நிறுவனங்கள் பல பங்கு கொள்ளவுள்ளன. இதில் வேலையற்ற இளைஞர், யுவதிகள் தங்களுக்கு பொருத்தமான வேலையை தெரிவு செய்து கொள்வதுடன் ஆலோசனைகளையும் பெறலாம் என பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ந)

புற்றளைப் பகுதியில் திருட்டு

மந்திகை புலோலியில் உள்ள புற்றளைப் பகுதியில் இரு கோயில்களில் தண்ணீர் இறைக்கும் இரு மோட்டர்களும் வீடொன்றில் ஆடும் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. புற்றளைப் பகுதியிலுள்ள வீடொன்றில் புகுந்த திருடர்கள் வீட்டின் பின்புறமாக ரூபா 15,000 பெறுமதியான ஆடொன்றை திருடியுள்ளனர். அதன் போது ஆடு சத்தமிட வீட்டு உரிமையாளர் வெளியில் வந்து பார்த்த போது திருடர்கள் ஆட்டினை கன்ரர் வாகனமொன்றில் ஏற்றிக் கொண்டு விரைவாக அந்த இடத்தை விட்டுச் சென்றுள்ளனர். அதேநேரம் வடுவாவத்தை வீரபத்திரர் ஆலயம், தோட்டத்து ஞான வைரவர் ஆலயம் என்பவற்றின் மோட்டர்களும் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (ந-22)

முதலாம் வருட நினைவஞ்சலி



பிறப்பு 10 . 11 . 1935

இறப்பு 02 . 11 . 2012

அமரர் சீனிவாசகம் பொன்னுத்துரை

(ஓய்வூதியர்)

திதி-சங்கடஹர சதுர்த்தி

குடும்பத்தின் ஒளிவிளக்காய்ப் பிரகாசித்து
எங்களை வையகத்துள் வாழ்வாங்கு வாழ
வைத்த எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று ஓடி விட்டாலும் உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பாகுதேவன்புலம்,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்

(33175)(12.3.6.)

18 ஆம் ஆண்டு நினைவஞ்சலிகள்



செல்வன்
தருமலிங்கம் பாலச்சந்திரன்

திதி: சங்கடகர சதுர்த்தி
(22.10.2013)

மண்ணில் 24.10.1970 விண்ணில் 11.11.1995

கடந்து போனதடா பதினெட்டு ஆண்டுகள்
கயவர் உன்னைப் பறித்த அந்த ஓர் நிமிடம்
உன்னைப் பார்த்ததும் நேற்றுப் போல்
உள்ளதடா
ஆறாது தவிக்கும் எங்கள் உள்ளம்
அன்றிலிருந்து வெறுமையாக உள்ளது
எமதில்லம்
புன்னகை தவழும் உந்தன்
வதனம் இப்புவியில்
தேடித்துடிக்குது எங்கள் இதயம்

நிரந்தர முகவரி:
நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.
தற்காலிக முகவரி:
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

உங்கள் ஆத்மசாந்திக்காக
பிரார்த்திக்கும்
அம்மா, அப்பா, தம்பி, தங்கை,
குடும்பத்தினர்.

(33172) (3.6.4)

9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பூவுலகில் 09 ★ 11 ★ 1948

விண்ணுலகில் 01 ★ 11 ★ 2004

அமரர் இராசையாஐயர் நடனசபாபதிஐயர்
(சபா ஐயா)

திதி:சங்கடஹர சதுர்த்தி(22.10.2013)

ஆண்டுகள் ஒன்பது கடந்தாலும்
என்றும் உம் நினைவுகள்
எமதுள்ளங்களில் நிலைத்திருக்கும்

எம்.பி.லேன்,
கந்தரோடை,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

தாமோதரம்பிள்ளை தயாபரன்

(முன்னாள் உரிமையாளர்-குரு டீசல் என்ஜினியர்ஸ், ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு, அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை தயாபரன் நேற்றுமுன்தினம் (20.10.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-மகாலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருவிளங்கத்தின் பெறாமகனும், காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் அழகரட்ணம் (நீர்வேலி) ஆகியோரின் மருமகனும், செல்வராணியின் (பவா) அன்புக் கணவரும், Dr.யசோதா, பார்தீபன் (U.K), அபிராமி (U.K), குருபரன் (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.தேவகுமார், கவிதா (U.K), மோகனராஜா (U.K), தனுஜா (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிரந்தீப், பதஞ்சலி, கதிரவன், கார்த்திகா, ஜனனி, தனஞ்சயன், அபிநயன், ஆரணியன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 30, நீர்வேலி வடக்கு, நீர்வேலியில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

30, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(33194)(10.6.3)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

மரண அறிவித்தல்

கதிரேசு மார்க்கண்டு

(ஸ்தாபகர் - Woodlands Company, Woodlands Hotel, Colombo -11)



புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட கதிரேசு மார்க்கண்டு 19.10.2013 சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற புனிதவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கதிரேசு - வள்ளியம்மை தம்பதியரின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற சின்னத்துரை - அன்னம்மா தம்பதியரின் அருமை மருமகனும், புஸ்பவதி (Australia), லிங்கநாதன் (Woodlands), புஸ்பரஜனி (Australia), புஸ்பலதா (Colombo), புஸ்பசாந்தினி (Canada), ஜெகநாதன் (Woodlands) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. பிரபாகரன் (Australia), கிருபா, சஞ்ஜீவன் (Australia), Dr. சோமாஸ்கந்தராசா (Colombo), வாகீசன் (Canada), தர்ஷினி (Colombo) ஆகியோரின் அருமை மாமாவும், காலஞ்சென்றவர்களான முத்துவேலு, செல்லமுத்து, தாமோதரம்பிள்ளை, பொன்னம்பலம் மற்றும் ஆறுமுகம் (Canada) ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஆச்சிக்குட்டி, சுந்தரம்பிள்ளை மற்றும் கிருஷ்ணாம்பாள் (Canada), மனோன்மணி (Colombo),தேவரசி (Canada), சரஸ்வதி (Canada), திலகவதி (Canada), Dr. வசந்தகுமார் (USA), தெய்வகுமார் (Canada) ஆகியோரின் அருமை மைத்துனரும், காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை வேல்சாமி மற்றும் மகாலட் சுமி, ஸ்ரீகௌரி ஆகியோரின் அருமை சகலனும், ரெஜிகன், அருண், டயான், சகிஷ்ணா, ரகிஷ்ணா, கோவிந்த், திவ்யா, ஹரிஷ்மன், தனுஷா, அனோஜ்மன், புருஷோத்தனன், யஷ்வினி, ஜஸ்மின், ஆஷா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2013) புதன்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9/4, Station Road,
Colombo - 04,
T.P. 258 4519

தகவல்:
மா.லிங்கநாதன்
(மகன்)

(சி.13146) (4.6.3)

சிறுகதைத் தொகுதி நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 22

கவிஞர் சோ.பத்மநாதன் மொழி பெயர்த்த ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைத் தொகுதி நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக புவியியற்துறை விரிவுரை மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் முதன்மை விருந்தின ராகவும் ஏ.ராசகுமாரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

கலாநிதி அமிர்தாஞ்சலி சிவபாலன் அறிமுகஉரையையும் ஈ.குமரன், ஆர்த்தி டெனீஷியஸ் ஆகியோர் ஆய்வுரைகளையும் நிகழ்த்துவர். (ஒ)

மரண அறிவித்தல்

திருமதி **செல்லம்மா சந்திரசேகரம்**

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கைதடி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சந்திரசேகரம் நேற்று21.10.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சந்திரசேகரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான செல்லையா-சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான உதயகுமார், லோகேஸ்வரன் மற்றும் கோணேஸ்வரன்(லண்டன்), பிரதீஸ்வரன் (ரமேஸ்), ஈஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், சுஜித்தா (லண்டன்), தர்சினி ஆகியோரின் அன்பு மாமியும், கிருத்திகா (லண்டன்), தீபிகா (லண்டன்), அபிராம், ஆர்த்திகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், இராசலட்சுமி, கனகரட்ணம், விஜியலட்சுமி, இராசரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.10.2013) திங்கட்கிழமை பி.ப. 2.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் கைதடி ஊற்றல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

சிறுவர், முதியோர், மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு

காரைநகர், ஒக். 22

காரைநகர் பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுவலுவுள்ளோர் தினவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிர தேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினர் களாக சமூக சேவைகள் திணைக்கள வடமாகாணப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், ஊர்காவற்றுறை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி ஜான்சி ஆனந்தராசா, காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு.சிறிவிக்கினேஸ்வரன், காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் சிவா.தி.மகேசன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாண வர்களுக்கான பரிசளிப்பு, தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திடைந்த 19 மாணவர்கள் கௌரவிப்பு, கிராம சேவையாளர் பிரிவு ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதியோர்கள் கௌரவிப்பு, முதி யோர் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற முதியவர்க ளுக்கான பரிசளிப்பு என்பனவும் நடைபெறும். (ந-250)

புலமைப் பரிசில் மாணவர்களுக்கு மதிப்பளிப்பு

கிளிநொச்சி முருகானந்தா ஆரம்ப வித்தியால யத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித் தியடைந்த மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் திருமதி இ.பாலேந்திரா தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருக வேலும், சிறப்பு விருந்தினராகக் கண்டாவளை கோட்டக் கல்வி அதிகாரி வீ.இராசகுலசிங்கமும் கலந்து கொள்ள வுள்ளனர். (ந-6)

வாழும் கலை பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஒக். 22

வாழும் கலை மையத்தினால் நல் லூர் மகேஸ்வரன் மண்டபத்தில் 3 நாள் வகுப்புகள் நடைபெறவுள்ளன.

ஆசிரியர் மணிகண்டன்ஜியினால் நடத்தப்படும் இந்த வகுப்புகள் இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமை, நாளைமறுதினம் வியாழக் கிழமை ஆகிய மூன்று நாள்கள் நடைபெற வுள்ளன. வகுப்புகள் தினமும்மாலை6மணி முதல் 9 மணி வரை நடைபெறும். (ந)

சந்தை வாய்ப்பு இல்லாததால்

அழிய விடப்படும் பீற்றூட் உற்பத்தியாளர் கவலை

வலி. வடக்கு, ஒக். 22

பீற்றூட் உற்பத்தியாளர்கள் பலர் தமது விளைபொருள்களை சந்தைப்படுத்த முடியாத நிலையில் அழிய விட்டுள்ளனர்.

கடந்த காலத்தில் பீற்றூட் உற்பத்தியாளர்கள் உரிய விலையை பெற்ற போதிலும் இந்த முறை உற்பத்தி செய்யப்பட்ட பீற்றூட்டை நியாயமான விலைக்கு விற்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளமையால் அவற்றை அழிய விட்டுள்ளார்கள்.

குறிப்பாக தம்புள்ளைச் சந்தையை பிரதான சந்தையாகக் கொண்டு புன்னாலைக்கட்டுவன், ஈவினை, குப்பிளான் போன்ற பகுதிகளில் பீற்றூட் உற்பத்தி மேற்கொள்ளப் படுவது வழமையாகும்.

இதிலும் கூட தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்படும் காலம் தவிர்ந்து ஏனைய காலங்களில் பீற்றூட் செய்கை பண்ணப்பட்ட போதிலும், இந்த முறை தென்னிலங்கை பீற்றூட்டும் தம்புள்ளை சந்தைக்கு வரத் தொடங் கியமையால் சந்தையில் பீற்றூட்டின் விலை மிகவும் குறைந்துள்ளது. இதனால் பீற்றூட் செய்கையாளர்கள் அதனை மிகவும் குறைந்த விலை யான 10, 12 ரூபாவுக்கே விற்பனை செய்ய வேண்டிய நிலை காணப் படுகின்ற மையால் உற்பத்தியாளர்கள் தம்மால் பல நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலப் பரப்பில் செய்கை பண்ணப்பட்ட பீற்றூட்டை அறுவடை செய்யாது விட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ந-86)

விக்னேஸ்வராவின் கண்ணீர்க் காணிக்கைகள்

எமது சக ஆசிரியர் **நசிவாகரன்** அவர்களின் அன்புத் தாய்

திருமதி நல்லையா பர்வதம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம், புத்தூர். (33140)(10.14)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

காணி விற்பனைக்கு சாவகச்சேரி, டச்சு வீதி, மருதடிக்கு சமீபமாக உள்ள காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 865 9109 (29674)(6.3.4)

காணி விற்பனைக்கு

''புத்தூர் சந்தி, முதியோர் இல்லம், சேர்ச்சுக்கு பின் பக்கத்தில்'' நில.பர 6 குழி 8.44 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(பிரித்தும் கொடுக்கப்படும்)

தொடர்பு: 071 6792967 (33137)(10.14)

வேலையாள்கள் தேவை

பருத்தித்துறை போக்குவரத்துசேவை நிறுவனத்தின் (P.P.T.Express) வெள்ளவத்தை கொழும்பில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சர்வதேச விமான பயணச்சீட்டு பதிவு செய்து வழங்கும் நிலையத் திற்கு பெண்பணியாளர்கள் உடன்தேவை.

நிபந்தனை: ★கணினி அறிவுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

★கொழும்பில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 386 6250 (33134)(6.3.4)

O/L துரித மீட்டல் எதிர்பார்க்கை வினாத்தாள் தொகுதி

95 வினாத்தாள்கள் 500/=

- ஒவ்வொரு முக்கிய பாடத்திலும் 10 இற்கு மேற்பட்ட வினாத்தாள்கள்.
- மாவட்ட ரீதியான பிரபல ஆசான்களின் வேறுபட்ட சிந்தனைகளில் உருவான வினாத்தாள்கள்.

பாடங்கள்	வினாத்தாள்	எண்ணிக்கை
தமிழ்மொழியும் இலக்கியமும்	-	12
தமிழ் இலக்கிய நயம்	-	05
கணிதம்	-	15
விஞ்ஞானம்	-	22
வரலாறு	-	12
ஆங்கிலம்	-	13
வணிகக்கல்வியும் கணக்கீடும்	-	08
தகவல் தொழில்நுட்பம்	-	06
சித்திரம்	-	02

இதனை நேரடியாகவோ / தபால் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு : 071 8400624 / 071 4273035. யாழ் : 077 6569617

இல. 85, ஜயந்த மல்லி மாவத்தை, கொழும்பு - 14

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18.04.1932

மறைவு
01.11.2012

அமரர் **கனகம்மா கந்தசாமி**

நெஞ்சம் மறக்குமா....

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
அகத்தினில் நிறைந்து வாழ்கின்றீர்கள்
நீண்ட உங்கள் நினைவை நெஞ்சம் சுமக்கிறது
நினைவழியா நாள்களை நினைக்கின்றோமம்மா
வேண்டிடும் செல்வமாய் ஒன்பது பேரை தந்தீர்களே
விரைவினில் எங்களை விட்டு பிரிந்தீர்களம்மா
ஆண்டிடும் இறைவன் தாளினில் சேர்ந்தீர்களே
அஞ்சலிக்கின்றோம் உங்கள் ஆத்ம சாந்திக்காக....

நீண்ட நினைவுகளுடன்
உங்கள் பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

யாழ்ப்பாணம். (33141)(10.14)

முதலாம் ஆண்டு நினைவுமலர்கள்

தோற்றம்
08.10.1931

மறைவு
02.11.2012

அமரர்

குணரட்னம் இராசபூரணம்

திதி : 22.10.2013

ஓர் ஆண்டு ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்.
ஆறாய் பெருகும் விழிகளுடன் ஆறாத் துயரில் தவிக்கும்

பாரதி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(33139)(10.14)

தன்னிச்சையான முடிவுகள் தமிழருக்குச் செய்யும் துரோகம்

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக்.22

தமிழ்த் தேசியத்துக்காக செய்த தியாகங்களை வாக்குகளாகப் பெற்ற நாம் இதய சுத்தியுடனே தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். தன்னிச்சையான முடிவுகள் தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரை ரெட்ணம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளின் ஒற்றுமையின் அவசியம் தொடர்பில் அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்களின் உரிமைக்காக, நல்லாட்சி முறைமைக்கான, தலைமைத்துவத்தை உருவாக்க முன்னின்று உழைப்பதை விடுத்து ஒரு கட்சி சார்ந்த பக்கச்சார்பான தனி நபர் நடவடிக்கைகள்

முன்னெடுக்கப்படுவது உடன் நிறுத்தப்படல் வேண்டும்.

கூட்டமைப்பின் அண்மைக்கால நடவடிக்கைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள சகல கட்சிகளும் பேசி தெளிவான முடிவுகளை இதய சுத்தியுடன் எடுக்க முன்வர வேண்டும்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்தும் தமிழ்த் தேசியத்தின் விடுதலை என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே ஒன்றிணைந்துள்ளன.

வட மாகாண சபைத் தேர்தல் மூலம் வடக்கு மக்கள் தங்களுக்கு நிகழ்ந்த அநீதிகளுக்கும் அவமானங்களுக்கும், தங்கள் வாக்கு பலத்தின் ஊடாக தகுந்த பாடம் புகட்டியுள்ளனர். தங்கள் உரிமைகள் அபிலாசைகள் தொடர்பாக அரசுக்கும், சர்வதே சத்துக்கும் மீண்டும் ஒரு முறை தெளிவுபடுத்தி உள்ளனர்.

பல கட்சிகளின் கூட்டு முயற்சியில் ஸ்தாபிக்கப்பட்ட கூட்டமைப்பிலும் ஒரு கட்சியின் மேலாதிக்கப் போக்கும் ஏதேச்சதிகாரப்போக்கும் முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளன.

இந்தநிலையில் உரிமைகள் தொடர்பாகப் பேசுவோர் தமிழர் போராட்டத்தில் தங்கள் நிலை தொடர்பாக ஒரு கணம் தம்மை சுய மதிப்பீடு செய்து கொள்ளவேண்டும்.

தமிழர் போராட்டத்தின் இழப்புக்களையும் தியாகங்களையும் அர்த்தமற்றதாக்கிவிடக் கூடாது.

மக்கள் தமிழ்த் தேசியத்துக்காகச் செய்த தியாகங்களை வாக்குகளாகப் பெற்ற நாம், இதய சுத்தியுடனே தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். அதனைக் கொச்சைப்படுத்தும் தன்னிச்சையான முடிவுகள் தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகும்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைமைகள் பேதங்களைக் கைவிட்டு ஒன்றிணைந்து அது குறித்து கூட்டான அறிக்கையை வெளியிட முன்வரவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

விடுதி அறைகளை பதிவு செய்தது இந்தியா

மாநாட்டில் பங்கேற்கும் குழுவினருக்காக

கொழும்பு,ஒக்.22

கொழும்பில் அடுத்த மாதம் நடை பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டுமென வலியுறுத்தி தமிழகத்தில் கடும் எதிர்ப்பு பிரயோகிக்கப் பட்டுவரும் நிலையில், மாநாட்டில் பங்கேற்கும் குழுவினர் தங்குவதற்காக, இந்தியா விடுதி அறைகளைப் பதிவு செய்துள்ளதென வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள விடுதி ஒன்றில் இந்தியா, அறைகளைப் பதிவு செய்துள்ள போதிலும், இந்தியக் குழுவின் முழு விவரம் தொடர்பாக தெளிவாகத் தெரியவரவில்லை என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், தாம் இந்த மாநாட்டில் பங்கேற்க வுள்ளதாக உறுதிப் படுத்தியுள்ள போதிலும், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், இந்தியக் குழுவுக்குத் தலைமை

> மாநாட்டில் பங்கேற்கும் குழுவினர் தங்குவதற்காக, இந்தியா விடுதி அறைகளைப் பதிவு செய்துள்ளது.

தாங்குவாரா என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்துள்ளது.

இந்தியக் குழுவுக்கு, துணை குடியரசுத் தலைவர் ஹமீத் அன்சாரி தலைமை தாங்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும், மன்மோகன்சிங், மாநாட்டுக்கு வருவாரா? இல்லையா என்று இந்தியா இன்னமும் உறுதிப்படுத்தவில்லை என்று வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

மக்களுக்கு சிறப்பான சேவை வழங்க அரசுடன் இணைந்து செயற்படுங்கள்

அமைச்சர் மோர்வின் சில்வா கருத்து



வடக்கு மாகாண முதலமைச்சர் அரசுடன் இணைந்து செயற்பட்டால் மக்களுக்கு சிறப்பாக சேவையாற்ற முடியும்.

இவ்வாறு மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மோர்வின் சில்வா தெரிவித்தார்.

மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரனின் அழைப்பின் பேரில் மட்டக்களப்பு கிரான் விநாயகர் ஆல யத்துக்கு வருகைதந்த அமைச்சர் மோர்வின் சில்வா, அங்கு இடம்பெற்ற பூசை வழிபாடுகளில் கலந்துகொண்ட பின்னர் பிரதேச மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வட மாகாணத்தில் வீதிகள், பாலங்கள் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை விஸ்தரித்துள்ளோம். அதே போன்று அந்த மக்களின் நலன் கருதி தேர்தலையும் நடத்தினோம். மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விரும்பி வாக்களித்தமை ஜனநாயக நடைமுறைக்கு உட்பட்டதாகும். இந்த நிலையில் விக்னேஸ்வரன் அரசை ஒதுக்கிவிட்டு வெளிநாட்டு ஆலோசனைகளுக்கு ஏற்ப செயற்படுவாரானால் அவரை இறைவன்தான் காப்பாற்ற வேண்டும் -என்றார். (ச)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 03.03.1945

உதிர்வு 23.09.2013

அமரர்

கோணன் செல்லமாணிக்கம்

அன்பினால் வழிகாட்டி அரவணைத்தீரே
ஆண்டவன் நிழல்நாடி அமைதியாய்ச் சென்றீரே
மாதம் ஒன்றானது மாறவில்லை ஏம் துயரம்
மாறாது மாறாது உம் நினைவு ஏமைவிட்டு எந்நாளும்

நாளை (23.10.2013) புதன்கிழமை காலை வீட்டுக் கிருத்தியக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

(29577)(10.6.3)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11.01.1928

விண்ணில் 03.11.2012

அமரர் செல்லத்துரை இரத்தினாம்பிகை

எங்கள் குடும்பக் குலவிளக்கே - நீங்கள்
எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு
ஆனபோதும் என்றும் எம்நினைவிலே
நீயர் ஆறவில்லையே
நீனம் நீனம் உம்மை நினைந்து
கண்ணீர் மல்கி நிற்கின்றோம்
நாங்கள் பூமியிலே வாழும்வரை
உங்கள் நினைவுகளோடு வாழ்ந்திடுவோம்.

அனுக்கை,
அளவெட்டி.

குடும்பத்தினர்.

(33135) (7.6.3)

மரண அறிவித்தல்

திருமதி சரஸ்வதி (இலங்கேசு) குருலிங்கம்

பனிப்புலம் பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி குருலிங்கம் நேற்று (21.10.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பாறுப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், குருலிங்கத்தின் (ஓய்வு பெற்ற நடத்துநர் இ.போ.ச) அன்பு மனைவியும், , காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெகதீஸ்வரன் (மக்கள் வங்கி உத்தியோகத்தர், கன்னாதிட்டி), ஆறுமுகசாமி (இலங்கை),ஜெகதீஸ்வரி (ஜேர்மனி), ஜெயரட்ணம் (கொலண்ட்), பாலசுப்பிரமணியம் (கனடா), நாகேஸ்வரி (இத்தாலி), உதயகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலகேசரி சாரதா (இலங்கை), விக்கினராசா (ஜேர்மனி), நாகரஞ்சிதமலர் (கொலண்ட்), சுனிதா (ஜேர்மனி), வதனா(கனடா), சுகந்தி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2013) புதன்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பனிப்புலம்,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.

(33133)(6.4.3)

கண்ணீர் அஞ்சலி

கதிரேசு மார்க்கண்டு

(ஸ்தாபகர்-Woodlands Company, Woodlands Hotel, Colombo-11)



புங்குடுதீவு, 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட கதிரேசு மார்க்கண்டு அவர்கள் இறைபதம் எய்திய செய்தி அறிந்து நாம் துயருற்றிருக்கும் வேளை, அன்னாரின் பிரிவால் துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவுத் துயரில்:

★ சிறிகண்ணன் ஸ்ரோஸ், திருநெல்வேலி.
★ சிறி பேப்பர் மாட், பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

(N.S.K)

(33199) (10.6.3)

தென்மராட்சியில் நேற்று நடைபெற்ற சுகாதார மேம்பாட்டு நிகழ்வு

தென்மராட்சி கல்வி வலயத்தினர் வடமாகாணக் கல்வித் திணைக்களம், மாகாண சுகாதாரக் கல்வி அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து நேற்று பாடசாலைச் சுகாதார மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் கீழ் நிகழ்வுகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தினர்.

செயற்றிட்டத்தின் காலை அமர்வு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்றது.

காலை நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும் கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட பாடசாலைச் செயற்றிட்ட பொறுப்பதிகாரி மருத்துவர் யோகேஸ்வரனும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் சுகாதார மேம்பாடு தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு இடம் பெற்றது. இதில் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளிலிருந்து 200 மாணவர்கள், 100 பெற்றோர்கள், 50 ஆசிரியர்கள், 50 சுகாதாரக் கழக உறுப்பினர்கள் என 400 பேர் கலந்து கொண்டனர்.

போசாக்கு, கண், தொற்று நோய், தொற்றா நோய், தனிநபர் சுகாதாரம், குடிதண்ணீர் சுகாதாரம் உள் ளிட்ட பல்வேறு சுகாதார விழிப்புணர்வு தொடர்பாக வளவாளர்களால் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் நடைபெற்ற மருத்துவ முகாமில் வைத்திய நிபுணர்கள், மருத்துவ அதிகாரிகள் பல், கண், உயரம், நிறை பொது மருத்துவம், குழந்தை வைத்தியம் போன்றவை இடம் பெற்றன. அத்துடன் நடமாடும் பற்சிகிச்சை, நடமாடும் ஆய்வுகூடம் ஆகிய சேவைகளும் இடம்பெற்றன. மருத்துவ முகாம், கண்காட்சி ஆகியவற்றினை விருந்தினர்கள் திறந்து வைத்தனர். இதில் பெருமளவு பொது மக்கள் கலந்து கொண்டு பார்வையிட்டனர். குறிப்பாக மாதிரி சிற்றுண்டிச்சாலை அமைக்கப்பட்டு நோய்கள் ஏற்படாமல் தடுக்கக் கூடிய உணவு வகைகள் விநியோகிக்கப்பட்டன. (வ-9)

வீட்டுக்குத் தீ வைப்பு சந்தேகநபருக்கு மறியல்

வலி.வடக்கு, ஒக்.22

வீட்டுக்குத் தீ வைத்த சந்தேகநபர் ஒருவரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

குப்பிளான் பகுதியில் உள்ள ஒருவரின் வீட்டுக்குத் தீ வைத்த சம்பவம் தொடர்பாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வீட்டின் உரிமையாளரால் முறையிடப்பட்டது.

இது தொடர்பாக விசாரணையை மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸார் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரைக் செய்துள்ளனர். சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதைத் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது. (வ-86)

எம்.ஐ.கிறீன் இன மிளகாய்

மானிய விலையில் விவசாயிகளுக்கு

யாழ்ப்பாணம், ஒக்.22

யாழ்.மாவட்டத்தில் மிளகாய்ச் செய்கையில் நல்ல விளைச்சல் தரக்கூடிய எம்.ஐ.கிறீன் மிளகாய் விதைகள் 224 விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபால சுந்தரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்ட மிளகாய்ச் செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்காக விவசாயத் திணைக்களம் மானிய விலையில் மிளகாய் விதைகளை வழங்கியுள்ளது. கடும் பச்சை நிறம் கொண்ட நீளமான மிளகாய் குடாநாட்டுச் சந்தைகளில் நுகர்வோரால் அதிகளவு கொள்வனவு செய்யப்படுகிறது. எம்.ஐ.கிறீன் மிளகாய்ப் பயிர்ச்செய்கையை விவசாயிகள் பயிரிடுவதன் ஊடாக கூடிய வருமானத்தைப் பெற முடியும்.



யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் எம்.ஐ. கிறீன் மிளகாய் விதை விவசாயி ஒருவருக்கு ¼ கிலோ என்ற அடிப்படையில் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

நோய்த் தாக்கம் இன்றி உற்பத்தி செய்யப்படும் இந்த மிளகாய் இனம் தற் போது சந்தைகளில் 200 ரூபாவுக்கு குறைவான விலையில்விற்பனை செய்யப் படுகிறது. எனினும் இந்த வருட அறுவடையில் கூடுதல் வருமானத்தை விவசாயிகள் பெறமுடியும்- என்றார். (வ-14-11)

கரையோர வீதிகளுக்கு பெயர்ப்பலகை இல்லை



யாழ்ப்பாணம், ஒக்.22

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட அதிகமான கரையோர வீதிகளுக்கு அவற்றுக்கான பெயர்ப் பலகைகள் அமைக்கப்படாததால் மக்கள் வீதிகளை இனங்காண முடியாது சிரமப்படுகின்றனர்.

குறிப்பாகக் கரையோரப் பகுதியிலுள்ள அநேகமான வீதி களுக்கு இவ்வாறு வீதிகளின் பெயர்கள் குறிப்பிடாததால் வெளியிடங்களில் இருந்து வரும் வீதிகளை இனங் காண்பதில் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கொழும்புத்துறை மேற்கு பகுதியில் உள்ள வீதி ஒன்றுக்கு அதற்கான பெயர் குறிப்பிடப்பட்ட தட்டி ஒன்று மரத்தில் கட்டி தொங்க விடப்பட்டுள்ளது.

கரையோரப் பகுதியிலுள்ள வீதிகளுக்குரிய பெயர்ப் பலகை நடுவதற்கு மாநகர சபை உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகரசபை உறுப்பினர் அ.தொன்லெலியஸ் கோரிக்கை விடுத்துள்ளார். (வ-17)

ஓய்வு மண்டபம் திறப்பு

அக்கராயன், ஒக்.22

கிளிநொச்சி சுண்டிக்குளம் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள மீனவர் ஓய்வு மண்டபத்தின் திறப்பு விழா நிகழ்வு எதிர்வரும் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி அரச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ்.தவராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜி.ஐ.இசட்டின் 15 லட்சம் ரூபா நிதியைக் கொண்ட இந்த ஓய்வு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

கிளிநொச்சி, அக்கராயன் பகுதியில்

800 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள்

அக்கராயன், ஒக்.22

கிளிநொச்சி, அக்கராயன் பிரதேசத்தில் 800 பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மீள் எழுச்சித் திட்டக் கூட்டம் ஸ்கந்தபுரம் கிராமத்தில் இடம்பெற்ற போது ஸ்கந்தபுரம் கிராமிய அபிவிருத்தி அமைப்பின் தலைவர் இந்தத் தகவலை வழங்கினார். இந்தக் குடும்பங்கள் பொருளாதார ரீதியாகப் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருவதாகவும் இவர்களுக்கு உதவிகள் அதிக அளவில் தேவைப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குடும்பங்கள் பொருளாதார ரீதியாகப் பெரும் நெருக்கடியை எதிர் கொண்டு வருகின்றனர்

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு வசதிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் அந்த அமைப்பினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பல பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை என்ற தகவலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

உள்ளூர் சேவையில் ஈடுபடும்

தனியார் பஸ்களை கண்காணிக்க நேரக் கணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஒக்.22

உள்ளூர் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் உரிய நேரத்துக்குள் சேவையில் ஈடுபடுவதைக் கண்காணிப்பதற்கு அந்தந்த வழிச் சேவைகளில் நேரக் கணிப்பாளர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்று தனியார் பஸ் சங்கத்தின் உப தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார்.

தனியார் பஸ்கள் தாமதித்துச் சேவையில் ஈடுபடுவதால் பயணிகளுக்கு மட்டுமல்லாது அதே வழிச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களையும் பாதிக்கிறது. இதனால் ஏற்படக் கூடிய முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக அந்தந்தச் சங்கங்களால் அனுமதிக்கப்பட்ட நேரக் கணிப்பாளர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

குறித்த நேரத்தில் சேவையில் ஈடுபடாத பஸ்களிடம் இருந்து தாமதித்த கட்டணங்களும் அறவிடப்பட்டு அந்த பஸ்களுக்கு அடுத்து வரும் தனியார் பஸ்களுக்கு அந்த தாமதித்த கட்டணம் வழங்கப்படுகிறது.

இதனால் உரிய நேரத்தில் பொது மக்களுக்கான சேவையைத் தனியார் பஸ்கள் வழங்குகின்றன என்றார். (வ-14)

ஊர்காவற்றுறை தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வரலாற்றில் முதல் தடவையாக தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவன் நி.மதுஷன் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொண்டு மாணவர்களைப் பாராட்டி விருது மற்றும் பரிசில்களை வழங்கினார். (வ-17)

சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.22

இலங்கைக்கு கடந்த செம் ரெம்பர் மாதம் பயணம் மேற் கொண்ட சுற்றுலாப் பயணிக ளின் தொகை 26.2 வீதத் தால் உயர்வடைந்துள்ளது. அதற்கமைய இந்திய சுற்று லாப் பயணிகளின் வருகை 30 வீதத்தால் அதிகரித்துள் ளதோடு, தென்னாசிய வலய சுற்றுலாப் பயணிகளின் வருகை 31 வீதத்தால் உயர் வடைந்துள்ளது.

இந்திய ரூபாவின் பெறுமதி கீழிறங்கியுள்ளதையடுத்து வேறு நாடுகளுக்குச் சுற்று லாப் பயணங்களை மேற் கொள்வது அதிக செலவி னத்தை ஏற்படுத்தும் என்ப தால் இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கே அதிகளவில் பயணம் மேற் கொள்கின்றனர்.

இதேவேளை- செப்ரெம்பர் மாதம் மாலைதீவில் இருந்து இலங்கைக்குப் பயணம் மேற் கொண்ட சுற்றுலாப் பயணிக ளின் எண்ணிக்கையும் 34.5 வீதத்தால் உயர்வ டைந்துள்ளது.

மேற்கு ஐரோப்பாவில் இருந்து வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் வருகை 41.2 வீதத்தால் உயர்வடைந்துள் ளது. இந்த ஆண்டு முதல் 9 மாத காலத்துக்குள் இலங் கைக்கு வெளிநாட்டுச் சுற்று லாப் பயணிகள் 6 லட்சத்து 93 ஆயிரத்து 772 பேர் வருகை தந்துள்ளனர். அதற் கமைய செப்ரெம்பர் மாதம் இலங்கைக்குப் பயணம் மேற் கொண்டுள்ள சுற்றுலாப் பய ணிகளின் எண்ணிக்கை 15.5 வீதத்தால் அதிகரித்துள் ளது. (ச-22)

பொதுத் தேர்தலை நடத்தத் தீர்மானம்

ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.22

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் னர் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு ஆராயப்படு கிறது. கடந்த 14 ஆம் திகதி இரவு அலரி மாளி கையில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் மத்திய செயற் குழு கூட்டத்தில் வைத்து இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் சில சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப் பினர்கள், அமைச்சர்கள் போன்றே கனிஷ்ட நாடாளு மன்ற உறுப்பினர்கள், அமைச் சர்களும் அரசின் கருத்துக்கு எதிராகப் பேசுகின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

அரசிலிருந்து வெளியேறுவ தற்கு ஒருவருக்கு எண்ணம் இருந்தால் இறுதிவரை காத் திருக்காது இப்போதே வெளி யேறிவிட முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஒரு சிலரின் மூளையில் இருக்கும் எண்ணம் வெவ் வேறு விதமாக வெளிப்படுகி றது. கட்சியின் தீர்மானத் துக்கு முரணாகச் செயற்படும் ஆற்றல் எவருக்கும் இல்லை என்று அவர் கூறினார்.

இனிவரும் காலத்தில் கட் சிக்கு எதிராகச் செயற்படு வதற்கு எவருக்கும் இடமளிக் கப்படமாட்டாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை -ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வட மாகா ணத்தில் பலப்படுத்துதல் மற்றும் அமைப்பாளர்களை நியமிப்பது குறித்தும் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (ச-22)

பசுக்களின் தொகை குறைந்தது



கொழும்பு, ஒக்.22

நாட்டிலுள்ள பசு மாடுகளின் தொகை இருபது ஆண்டுக ளில் 5 லட்சங்களால் குறை வடைந்துள்ளது. இந்தத் தக வல் கால்நடை வளங்கள் அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது நாடு முழுவதிலும் உள்ள பசுக்களின் தொகை 12 லட்சங்களாகும். இந்த பசு மாடுகளின் தொகை தொடர்ச் சியாகக் கீழிறங்கிச் சென் றுள்ளது என்று அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பால் உற்பத்தியும் கடந்த இருபது ஆண்டுகள் காலத்தில் 170 லட்சம் மீற் றர்களால் கீழிறங்கியுள்ளது என்று அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. (ச-22)

14, 000 மாணவருக்கு விடுதி வசதிகள் இல்லை

உயர்கல்வி அமைச்சு கூறுகிறது

கொழும்பு, ஒக்.22

சுமார் 14,000 பல்க லைக்கழக மாணவர்களுக்கு தங்கியிருப்பதற்கான விடுதி வசதிகள் இல்லை. இந்த விடயம் உயர் கல்வி அமைச் சின் அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து பல்க லைக்கழகங்களுக்கு அனு மதிபெறும் மாணவர்களுக்கு விடுதி வசதிகள் இல்லை என்று உயர் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இவர்களுக்கு விரைவில் விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இரண்டாண்டு காலத் துள் 60 விடுதிக் கட்டடங் களை நிர்மாணிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று உயர்கல்வி அமைச்சின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த 60 கட்டடங்களில் முதலாவது ஆண்டில் 30 கட்டடங்களை நிர்மாணித்து முடிப்பதற்கும், எஞ்சியுள்ள கட்டடங்களை இரண்டாவது ஆண்டில் நிர்மாணித்து முடிப்பதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. அதற்கமைய நான்குமாடிக் கட்டடமொன் றில் பொதுவான சமைய லறை, குளியல் அறைகள் இரண்டு கழிப்பறைத் தொகு திகள் என்றவாறு அமைய வுள்ளன.

> **“ குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து பல்க லைக்கழகங்களுக்கு அனுமதிபெறும் மாணவர்களுக்கு விடுதி வசதிகள் இல்லை என்று உயர் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.**

இந்த திட்டத்தின் மூலம் 24, 000 மாணவர்களுக்கு தங் குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என உயர் கல்வி அமைச்சு தெரிவித் துள்ளது.

பல்கலைக்கழகங்களின் மாண வர்களுக்கு தங்குமிட வசதி களை ஏற்படுத்திக் கொடுப் பதற்காக வெளிநபர்களுக்கு ஆண்டொன்றுக்குச் செலுத் தப்படும் தொகை 1,200 மில்லியன் ரூபாவாகும். இலங்கையிலுள்ள 17 அரச பல்கலைக்கழகங்களிலும் 92, 000 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர் என்று உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-22)

வெட்டுப்புள்ளி நவம்பரில்

கொழும்பு, ஒக்.22

2012 ஆம் ஆண்டு நடை பெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட் சையின் வெட்டுப்புள்ளிகள் நவம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

இந்த வெட்டுப்புள்ளிகள் வெளி யிடப்பட்ட பின்னர் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்கள் எதிர்வரும் மார்ச் மாதத்தில் இணைத்துக் கொள்ளப்படு வர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வின் தலைவர் திருமதி க்ஷ னிக்கா ஹிரிம்புரேகம தெரி வித்தார்.

2012 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தி யடைந்த 23,000 மாணவர் கள் இந்தமுறை 17 தேசியப் பல்கலைக்கழகங்களுக்குச் சேர்த்துக் கொள்ளப்படவுள் ளனர் என்று அவர் மேலும் கூறினார். (ச-22)

மனிதம் குறுந்திரைப்பட இறுவட்டு வெளியீடும், திறமைக்கான தேடல் கௌரவ விருது வழங்கும் விழாவும் ஞாயிற்றுக்கிழமை கல்முனை மஹ்மூத் மகளிர் கல் லூரி மண்டபத்தில் நடைபெற்ற போது இறுவட்டின் முதல் பிரதியை நாடாளுமன்ற உறுப்பினர் ஹஸன் அலியிடமிருந்து மௌலவி எம்.ஆர்.எம்.றியால் பெறுகிறார்.

499 வெளிநாட்டவர் நாடு கடத்தப்பட்டனர்

கொழும்பு, ஒக்.22

சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருந்த 499 வெளிநாட்டவர்கள் கடந்த ஆண்டில் நாடு கடத்தப்பட் டுள்ளனர்.

இந்தத் தகவல் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடு கடத்தப்பட்டோரில் பெருமளவானோர் இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நைஜீரியா, சீனா ஆகிய நாடுகளின் பிரஜைகளாவர்.

விசா சட்ட விதிகளை மீறி சட்ட விரோதமாக இலங்கையில் தங்கியிருந்த 511 வெளிநாட்டவர்கள் கடந்த ஆண்டில் கைது செய்யப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-22)

வாக்காளர் பட்டியல்

மேன் முறையீடுகள் 30 இற்கு முன்னர்

கொழும்பு, ஒக்.22

2013 ஆம் ஆண்டு தயாரிக் கப்பட்ட வாக்காளர் பட்டியலில் தமது பெயர்கள் உள்ளடக்கப் படாதோர் அதுகுறித்து எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன் னர் மேன்முறையீடு செய்ய முடியும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

தற்காலிகமாகத் தயாரிக்கப் பட்ட 2013 ஆம் ஆண்டுக் கான வாக்காளர் பட்டியல்கள் பிரதேச செயலகங்கள் மற் றும் கிராமசேவை உத்தி யோகத்தர் அலுவலகங்கள், தபால் அலுவலகங்கள் ஆகிய வற்றில் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன.

அந்தப் பட்டியல்களில் தமது பெயர்கள் உள்ளடக்கப்பட் டுள்ளனவா என்பதைப் பொது மக்கள் பரிசீலிக்க முடியும்.

அவ்விதம் வாக்காளர் பட்டி யலில் தமது பெயர் உள்ளடக் கப்பட்டிருக்கா விட்டால் அவர் கள் கிராம சேவை உத்தி யோகத்தர்கள் ஊடாக மேன் முறையீடுகளை முன் வைக்க முடியும் என்று பிரதித் தேர் தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டு வாக்கா ளர் பட்டியலில் உள்ளடங் கியிருக்கும் பெயர்கள் குறித்து எதிர்ப்புகள் இருந்தால் ஆட்சே னைகள் எதுவும் இருப்பின் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக அது தொடர்பில் தெரி விக்க முடியும் என்று அவர் கூறினார்.

2013 ஆம் ஆண்டின் வாக்கா ளர் பட்டியல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி அளவில் உறுதிப்படுத்தப் டும் என்று அவர் குறிப்பிட் டார். (ச-22)

மருத்துவப் பட்டதாரிகள் ஐந்து ஆண்டுகள் சேவை

அமைச்சர் மைத்திரி கூறுகிறார்

கொழும்பு, ஒக்.22

பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் எம்.பி. பி.எஸ். மருத்துவப் பட்டதா ரிகள் குறைந்த பட்சம் இலங் கையில் ஐந்தாண்டுகள் அரச மருத்துவர்களாக சேவை யாற்றியாக வேண்டும்.

இதனை உறுதிப்படுத்தச் சுகாதார அமைச்சுடன் ஒப்பந் தம் செய்ய வேண்டும்.

இவ்வாறு சுகாதார அமைச் சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எம்.பி.பி.எஸ்.பட்டதாரிகளுக்கு அரச மருத்துவர்களாக நிய மனங்களை வழங்குகின்ற போது, அவர்களுள் ஐம்பது, அறுபது பேர் நியமனங்கள் வழங்கப்படுவதற்கு முன் னரே எந்த அறிவிப்பும் இல் லாமல் நாட்டை விட்டு வெளியேறிச் செல்கின்றனர் என்று அவர் கூறினார். இவ்வாறு அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால் சுகாதாரத் துறைக்கு நட்டம் ஏற்படுகிறது.

அதனாலேயே இவ்வாறு தீர்மானம் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் கூறி னார்.

நியமனங்களைப் பெற்றுக் கொள்ளாமலேயே மருத் துவர்கள் நாட்டிலிருந்தும் வெளியேறி விடுகின்றனர். ஆண், பெண் தாதிய உத்

தியோகத்தர்கள் கூட தினமும் சுமார் 30 பேர் வரை வெளிநாடுகளுக்குச் செல் வதற்கான அனுமதிகளைப் பெற்றுக் கொள்கின்றனர் என்று அவர் கூறினார்.

அடிப்படை உரிமைகள் மற் றும் மனித உரிமைகளுக்கு அமைய அவர்கள் வெளிநாடு செல்வதற்குத் தடைகளை விதிக்கும் ஆற்றல் அரசுக்கு இல்லை என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (ச-22)

கணித விஞ்ஞானப் போட்டியில் வடக்கு மாகாண அணி முதலிடம்

யாழ்ப்பாணம். ஒக். 22.

கல்வி அமைச்சினால் நடத்தப் பட்ட மாகாணங்களுக்கிடையி லான தேசியமட்ட கணித விஞ் ஞானப் போட்டியில் கனிஷ்ட பிரிவில் வடமாகாண மாண வர் அணி வெற்றி பெற்று தங் கப்பதக்கத்தைதட்டிக்கொண்டது.

இப் போட்டிகள் கடந்த 12ஆம் திகதி மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெற்றன.

இதில் வடமாகாணம் சார்பாக தரம் 06இல் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த நடேச மூர்த்தி சிவமைந்தன், வேம் படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஆரணி ஆகியோரும் தரம் 7இல் வவுனியா இறம் பைக் குளம் மகளிர் கல்லூரி யைச் சேர்ந்த சர்வானந்தா சர்மிகா, வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பிரபாகரன் அர்ஜீன் ஆகியோரும் தரம் 8இல் பருத்தித்துறை

ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த சிவனேசன், யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ரவீந் திரா யதுசன் ஆகி யோரும் வெற்றிபெற்று தங்கப்பதக்கத் தைச் சுவீகரித்தனர்.

இவர்களுக்கான பதக்கங் களையும் சான்றிதழ்களையும் கல்வி அமைச்சர் பந்துல குண வர்த்தன வழங்கினார். (த-400)

ஹலால் எதிர்ப்பு இன்று பேரணி

ஹலால் சான்றிதழுக்கு மறுப டியும் எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு முதல் கண்டி தலதா மாளிகை நோக்கிய வாகனப் பேரணியை பொது பல சேனா அமைப்பு இன்று நடத்தவுள்ளது.

மீண்டும் தலைதூக்கியுள்ள ஹலால் நடவடிக்கைகளை நிறுத்துமாறு வலியுறுத்தி தலதா மாளிகையில் விசேட பூஜையை நடத்தவும் பொது பல சேனா தீர்மானித்துள்ளது.

"ஹலால் சான்றிதழ் வழங்கு தைத் தாம் நிறுத்துவதாக உறு தியளித்த அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா சபை, தமது வாக்குறுதியை மீறி ஹலால் நடவடிக்கைகளை மறுபடியும் ஆரம்பித்துள்ள மைக்கு எதிர்ப்பு தெரி வித்தே இந்த வாகனப் பேரணியை நடத்துகின்றோம்" என அதன் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானாசார தேரர் தெரிவித்தார்.

யாழ்.வைத்தீஸ்வராவின் நூற்றாண்டு விழா நாளை

யாழ்ப்பாணம். ஒக். 22.

வைத்தீஸ்வராக்கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் நாளை காலை 8 மணிக்கு கல்லூரியின் விவேகானந்தர் மண்டபத்தில் இடம்பெறவுள் ளன.

கல்லூரி முதல்வர் மு. மகேந்தி ரன் தலைமையில் இடம்பெறும் காலை அமர்வுகளுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச் சின் செயலாளர் சி. சத்தியசீல னும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப் பாளர் வ. செல்வராசா, யாழ் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரி நாதன் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு. சண் முககுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் முன்னாள் அதிபர்களின் உருவப்படங்கள் திரை நீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது டன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர் கௌரவிக் கப்படவுள்ளனர்.

கல்லூரியின் நூற்றாண்டு விழாச் சபைத் தலைவர் பேரா சிரியர் மா. சின்னத்தம்பி தலை மையில் இடம்பெறும் மாலை அமர்வுகளுக்கு பிரதம விருந்தி னராக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமா ரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். தேசியக் கல்வியற் கல் லூரி பீடாதிபதி ச. அமிர்த லிங்கம், யாழ். கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்க ளான கோ. வரதராஜ மூர்த்தி, சி. மாணிக்கராசா ஆகியோ ரும் கலந்து கொள்ளவுள்ள னர்.

(த-400)

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

துயிலும்

நடைபெறவுள்ளது. எனவே, இந்த மாகாண சபையின் கட்டமைப்பு முழுமையாக உருவாக்கப்பட்ட பின்னர் மாவீரர் துயிலும் இல்லங் களை ஆக்கிரமிக்கும் படையி னரின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து தீர்க்கமான ஒரு முடிவை எடுப்போம்.

தமிழர் விடுதலைப் போராட் டத்தில் மரணித்த தமது உற வுகளின் மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் சென்று அஞ் சலி செலுத்துவதும் ஈமக் கடன் செய்வதும் தமிழ் மக்களின் கடமை; உரிமை. இதை அர சும் அதன் படைகளும் தடுப்ப தும், துயிலும் இல்லங்களை உடைப்பதும் அநாகரிகமான செயலாகும். இவை தமிழ் மக்களைக் கொதிப்படையச் செய்யும்.

படையினரின் இந்த அநாகரிக மான செயல்களுக்கு விரை வில் வடக்கு மாகாண சபை யில் முடிவு கட்டுவோம்" - என்றார்.

தமிழ் சிவில் சமூகத்தின் சார் பில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை கருத்துத் தெரிவிக்கையில்,

"வடக்கில் தேவையற்ற நட வடிக்கைகளில் படையினர் தற் போது ஈடுபட்டு வருகின்றனர். மாவீரர் துயிலும் இல்லங்கள் பாதுகாக்கப்பட வேண்டியவை. இவற்றை உடைத்து - ஆக்கிர மிப்பது அநாகரிகமானது.

தமிழ்ச் சமூகத்துக்காக உயிர் கொடுத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தவிடாமல் தடுத்து நிறுத் துவது எந்த வகையில் நியாய மானது?

தமிழ் மக்களின் உரிமைக் காகப் போராடியவர்களின் இறந்த உடல்கள் இளைப்பாறக் கூட இந்த மண்ணில் இட ம ளிக்கக்கூடாது என்பதில் அர சும் அதன் படைகளும் குறி யாகவுள்ளன. உயிரிழந்தவர் களின் உடல்கள் இருக்கும் இடத்திலும் இந்த அரச தரப்பு தமது பழிவாங்கலைக் காட்டு கின்றது.

உலகம் முழுவதும் இறந்தவர் களுக்கு மரியாதை செலுத்த - அஞ்சலி செலுத்தப் பூரண சுதந் திரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இலங்கையில் மட் டும் தமிழ் இனத்துக்கு இந்தச் சுதந்திரத்தை வழங்காமல் அரசும் அதன் படைகளும் தமது அடாவடியைக் காட்டு கின்றன. இது பெரும் மனித உரிமை மீறலாகும்; காட்டு மிராண்டித்தனமான செய லாகும்.

எனவே, தமிழ் மக்களின் உற வுகளான மாவீரர்களின் துயி லும் இல்லங்களைச் சுற்றி முட் கம்பி வேலி போட்டு அங்கு முகாம்களை அமைக்கும் படையினரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தொடருமா னால் தமிழ் மக்கள் கிளர்ந் தெழுவார்கள். இதை யாரா லும் தடுத்துநிறுத்த முடியாது" - என்றார். (த-சி)

பிரதேச

'பாபுள்' பாக்கு விற்பனை செய் யப்படுவ தாகவும், இதனால் தினமும் இளைஞர் கூட்டம் அங்கு அலைமோதுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனை அவதானித்த சமூக நலன்விரும்பி ஒருவர் இது தொடர்பாக வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைத் தலை வருக்குத் தெரியப்படுத்தியுள் ளார்.

இதனையடுத்து அந்தப் பகு திக்கு நிலைமைகளை அவதா னிப்பதற்காகச் சென்றார் பிர தேச சபைத்தலைவர். அவரை யார் என்று அறியாத அந்தப் பெட்டிக் கடை வியாபாரி 'பாபுள்' என்ற போதை கலந்த பாக்கை அவரிடம் நீட்டி அதனை விற் பனை செய்ய முயற்சித்துள் ளார்.

இந்த வேளையில் தன்னை பிரதேச சபைத் தலைவர் என்று அறிமுகப்படுத்திய வியா கேசு, 'பாபுள்' பாக்கு விற்பனை செய்வது சட்டவிரோதம் என்று உடனடியாகக் கடையை மூடாவிட்டால் சட்ட நடவ டிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த வியாபாரியைக் கடுமை யாக எச்சரிக்கை செய்தார்.

இதேவேளை, நெல்லியடிச் சந்திப் பகுதியில் படையினரும், பொலிஸாரும் தினமும் பாது காப்புக் கடமையில் ஈடுபட் டிருக்கும் நேரத்தில் 'பாபுள்' பாக்கு விற்பனை செய்யப்பட் டமை தொடர்பாக அப்பகுதி மக்கள் சந்தேகம் வெளியிட் டுள்ளனர். (த-422-400)

போரில்

இந்தியப் படையினரால் யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்துச் சுட்டுக் கொலை செய்யப்பட்ட 21 பேரின் 26 ஆவது நினைவு அஞ்சலி மற் றும் அகவணக்கம் செலுத்தும் நிகழ்வு யாழ்.போதனா வைத்தி யசாலையில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு அஞ் சலி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:

வைத்தியசாலையில் கொலை செய்யப்பட்ட 21 பேரினதும் அஞ்சலி நிகழ்வு வைத்திய சாலையில் வருடாந்தம் அனுஷ் டிக்கப்படுகிறது. இந்தச் சம்ப வம் வைத்தியசாலையில் இடம் பெற்றிருந்தமையால் அஞ்சலி நிகழ்வை வைத்தியசாலையில் நினைவு கூருகின்றோம்.

இதேபோன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதல், வடமராட்சி, முல் லைத் தீவு எனப் பல பொது இடங்களிலும் மேற்கொள்ளப் பட்ட தாக்குதலில் பலர் கொல் லப்பட்டனர். இறுதிப் போரில் மட்டுமன்றி அதற்கு முன்ன ரும் போராளிகளும் பொது மக்களும் கொல்லப்பட்டுள் ளனர்.

கொல்லப்பட்டவர்களுக்கு அஞ் சலி செலுத்த வேண்டும். அதில் எதிரி நண்பர் என்றில்லாது கொல்லப்பட்டவர்களுக்கு அனைவரும் அஞ்சலி செலுத்தி அகவணக்கம் செய்ய வேண் டும். இந்த நடைமுறை உலக நாடுகளிலும் வழமையான நிகழ்வுதான்.

அவ்வாறு கொல்லப்பட்டவர் களுக்கு அஞ்சலி செலுத்தும் சந்தர்ப்பத்தை இறைவனே ஏற்படுத்தித் தரவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன் - என்றார். (த-4)

வடக்கு

றது என்றும் அவர் தெரிவித்தார்.

"வடக்கு - கிழக்கு இணைப் புக்கு கிழக்கு மாகாணம் இணக் கம் தெரிவித்தால் நிச்சயம் அதை நிறைவேற்றுவோம்" என வடமாகாண முதல்வர் க. வி. விக்னேஸ்வரன் அறி விப்பு விடுத்துள்ள நிலையில், இதுதொடர்பில் ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் உறுப்பினர் களின் நிலைப்பாடு என்ன என வினவியபோது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசியல் தீர்வு விவகாரம் மற் றும் சிறுபான்மையின சமூ கங்களுக்கிடையில் ஒற்று மையை வலுப்படுத்துவது தொடர்பான சாதகமான சமிக் ஞையைக் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் காட்டியுள்ளனர். 13ஆவது திருத்தச் சட்டத்தை வலுப்படுத்துவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி எமது பொறுப்புணர்வை வெளிக் காட்டியுள்ளோம்.

சிறுபான்மை மக்களின் நலன் கருதி நாம் நேசக்கரம் நீட்டி யுள்ள நிலையில், அதனைப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டிய தார்மீக பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு இருக்கிறது. சிறுபான்மை சமூகங்களைப் பாதுகாக்க இரு தரப்பினரும் சில விட்டுக் கொடுப்புகளைச் செய்ய வேண்டும்.

சிறுபான்மை மக்களின் பிரச்சி னைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் தமிழ்க் கூட்டமைப் புக்கும் எமக்கும் இடையில் புரிந்துணர்வு ஏற்படவேண் டும். அப்போதுதான் வடக்கு - கிழக்கு இணைப்பு உள்ளிட்ட அனைத்து விவகாரம் குறித் தும் சாதகமாகப் பரிசீலிக்க லாம். இதற்காக நாம் நீட்டி யுள்ள நேசக்கரத்தைப் பற்றிக் கொண்டு கூட்டமைப்பு பொறுப் புணர்வுடன் செயற்பட வேண் டும் - என்றார். (த-சி)

ஆணைக்குழு

திகதியிலிருந்து 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் வடக்கு - கிழக்கு மாகாணங் களில் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்வ தற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஆணைக் குழு நியமிக்கப்பட்டது.

ஆணைக்குழுவுக்கு காணா மற்போனோர் தொடர்பான விவரங்களை இந்த மாதம் 31 திகதிக்கு முன்னர் அனுப்பு மாறு கோரப்பட்டிருந்தது.

இதற்கமைய வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து 702 முறைப்பாடுகளே கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆணைக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவர் 'உதயனு'க்குத் தெரி வித்தார்.

இவையாவும் பதிவு தபால் மூலமே கிடைக்கப் பெற்றதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ஒவ்வொரு பகுதிகளுக்கும் நேரடியாக ஆணைக்குழு சென்று விசார ணைகளை மேற்கொள்ளவுள் ளதாகவும் அவர் கூறினார்.

செயலாளர், காணாமற் போன வர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக் குழு, இல 9/8 சுரனிமல இடம், கொழும்பு - 06 என்ற முகவ ரிக்கு அனுப்பி வைக்க முடியும். மின்னஞ்சல் ஊடாக அனுப்பு பவர்கள் pcicmp@sltnet.lk என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது. (த-5)

ஆயிரத்து

பாடுகள் பெறப்பட்டு வருவதா கவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐந்து மாவட்டங்களிலும் பதிவு நடவடிக்கைகள் முடிவடைந் திருந்தாலும் தொடர்ச்சியாகக் கிடைக்கும் முறைப்பாடுகளை ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிவித்த மன்னார் பிரஜை கள் குழுவினர், 0771139897 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கூறியுள் ளனர்.

மன்னார் பிரஜைகள் குழு தங்க ளுக்குக் கிடைத்த முறைப்பாடு களை விரைவில் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குச் சமர்ப் பிக்கவுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. (த-5)

வடக்கின்

வெளியிட்டு வைக்கப்பட்டது.

கோப்பாய் ஆசிரியர் கலா சாலை யில் நேற்றுப் பிற்பகல் நடந்த இந்த நிகழ்வில் பிரதம விருந்தி னராகக் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் ததாவது:

தமிழர் வரலாற்றில் 2013 ஆம் ஆண்டை மறக்கமுடியாது. இது வரலாற்றில் ஒரு மைல்கல். மக் கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மிகப்பெரும் ஆணை யைத் தந்துள்ளனர். அதனை முன்னெடுத்துச் செல்ல வேண் டும் என்று மக்கள் எதிர்பார்க் கிறார்கள்- விரும்புகிறார்கள். அவர்கள் எதனைச் சொல்ல விரும்புகிறார்கள் என்பதனை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

அந்த ஆணையை வைத்தே எதிர்வரும் 25 ஆம் திகதி மாகாண சபை முதல் அமர் வில் அனைவரும் செயற்பட வேண்டும்.

வடக்கு மாகாணத்தின் கல்வி யைச் சீராக முன்னெடுத்துச் செல்ல அனைவரும் என்னு டன் சேர்ந்து வாருங்கள் - என்றார். (த-4)

கூட்டமைப்பின்

இவர் மீது மோசமான தாக் குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

அல்போன்ஸ் கனியூட் (வயது-28) என்பவரே இவ்வாறு கடுமை யான தாக்குதலினால் கடும் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளார்.

நடந்து முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் வேட்பா ளர் பா. கஜதீபனுக்காகப் பிரசா ரப்பணிகளைத்தீவகத்தில் இவர் முன்னெடுத்திருந்தார் என் றும், தேர்தல் காலத்தில் இவர் ஆயுதக் குழுவினரால் எச்சரிக் கப்பட்டார்என்றும்கூறப்படுகிறது.

இந்த நிலையில் தேர்தல் முடி வடைந்த பின்னர் யாழ். நகரில் தங்கியி ருந்த இவர் ஊர்காவற்றுறைக்குக் கடந்த வெள்ளிக்கிழமை சென்றுள் ளார். இதன்போது ஊர்காவற் றுறை வைத்தியசாலைக்கு அருகில் வைத்துக்கடற்படையி னரால் இவர் கடுமையாகத் தாக்கப் பட்டுள்ளார். கடற்படை யினரின் தாக்குதலினால் இவ ரது எலும்புகள் உடைந்துள் ளன.

அத்துடன் குடலில் ஏற்பட்ட காயம் காரணமாகச் சத்திரசிகிச் சைக்கும் உட்படுத்தப்பட்டுள் ளார். உயிருக்கு மிகவும் ஆபத் தான நிலையில் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

எனினும் இவர் மீதான தாக்கு தலைத் தாம் மேற்கொள்ள வில்லை எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இந்தக் குற்றச்சாட்டை அவர்கள் அடி யோடு மறுத்துள்ளனர்.

இவரை தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் மற்றும் மாகாணசபை உறுப்பினர் பா. கஜதீபன் ஆகியோர் நேற்று நேரடியாகச் சென்று பார்வை யிட்டனர். (த-5-400)

ஒரே இரவில்

சாமந்தி என்பவின் வீட்டுக்குள் வீட்டார் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை மயக்க மருந்து வீசி 5 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட் டுள்ளனர். வேலாயுதம் என் பவரின் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் பெறுமதியான பொருள்களை யும் கொள்ளையிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

இதேவேளை, இந்த மாத ஆரம்பத்தில் இதே பகுதியில் இரவு வேளைகளில் நான்கு வீடுகளில் தொடர்ச்சியாகத் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(த-400-8)

வடக்கு மாகாண

திகதி புதிய கட்டடத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தப் புதிய கட்டடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இன் றையதினம் உத்தியோகபூர் வ மாகக் கையளிக்கப்படவுள் ளது. அத்துடன் புதிய கட்டடத் துக்கானபால் காய்ச்சும் நிகழ்வு மற்றும் ஏனைய சம்பிரதாய பூர்வ நிகழ்வுகள் இன்று காலை 6 மணி தொடக்கம் காலை 7.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுகள் யாவும் வட மாகாண முதலமைச்சர் தலை மையிலேயே இடம்பெறவுள் ளன. (த-5)

இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் ஒக்22
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தால் யாழ் மாவட்டத் திலிருத்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப் படும் 7பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்றுசெவ்வாய்க்கிழமை இடம் பெற வுள்ள ஆட்டங்களில் மோதவுள்ளஅணிகளின் விவரம்வரு மாறு:-

பி.ப 3.30மணி

யங் கம்பன்ஸ் வி.க. எதிர் நவிண்டில் கலைமதி வி.க.

மாலை4.30மணி

ஊரெழு றோயல் வி.க. எதிர் பூமகள் வி. க. (த-23)

★ ★ ★

முன்னாள் மாணவ முதல்வர் பொன்.விபுலானந்தன் ஞாப கார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.மத்திய கல்லூரி யின் மாணவ முதல்வர் சபை நடத்தும் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயது ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதியாட்டங்களில் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணி களின் விவரம் வருமாறு:-

மாலை 3 மணி (பெண்கள் பிரிவு)

யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம் அணி எதிர் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி.

மாலை 4 மணி (ஆண்கள் பிரிவு)

யாழ்.இந்துகல்லூரி அணி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி. (த-23)



வடக்கு மாகாணம் கராத்தே சம்மேளனத்தால் நடத்தப்பட்ட கராத்தே சுற்றுப்போட்டி கடந்த சனி, ஞாயிறு தினங்களில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.
இந்தப் போட்டியின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராசா வெற்றி பெற்றவர்களுக்குப் பதக்கங்களை வழங்கிக் கௌரவித்தார். (த-21)

இலகுவாக வென்றது மன்னார் ஈகிள்ஸ் திருநெல்வேலி வை.எம்.ஏச்.ஏ. அணியை

திருநெல்வேலி வை.எம். எச்.ஏ. விளையாட்டுக்கழக அணியை 72 ஓட்டங்களால் வெற்றி கொண்டது மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணி.
திருநெல்வேலி வை.எம். எச்.ஏ. விளையாட்டுக்கழக அணிக்கும் மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளை யாட்டுக் கழக அணிக்கும் இடை யிலான இரண்டாவது நட்பு ரீதியிலான 20/20 கிரிக்கெட் ஆட்டம் கடந்த வெள்ளிக் கிழமை மதியம் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.
இதில் முதலில் துடுப்பெடுத் தாடிய மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட் டுக்கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்கினை இழந்து 236 ஓட் டங்களைப் பெற்றது.
இதில் றோய் 69 ஓட்டங்க ளையும், அஜந்தன் 52 ஓட் டங்களையும், அஜித் 47 ஓட்டங்களையும்,ஜோர்ச் 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்தவீச்சில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட் டுக்கழக அணிசார்பாக அனோ ஜன்-4 பந்துப் பரிமாற்றங் கள் பந்து வீசி 48 ஓட் டங்களுக்கு ஓர் இலக்கினை யும், ஜெயராஜ் 3 பந்துப் பரி மாற்றங்கள் பந்து வீசி 40 ஓட்டங்களுக்கு 3 இலக்கு களையும் வீழ்த்தினார்கள்.
237 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலையில் பதி லுக்கு துடுப்பெடுத்தாடிய திரு நெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக்கழக அணியி னர் 20 பந்துப் பரிமாற்றங் கள் நிறைவில் 8 இலக்கு களை இழந்து 164 ஓட்டங் களைப் பெற்றனர்.
இதில் இரசேந்திரம் 54 ஓட் டங்களையும், அனோஜன் 31 ஓட்டங்களையும் ஜெய ராஜ், நிலா, ஆகியோர் தலா 11 ஓட்டங்களையும், கீதன் 16 ஓட்டங்களையும், தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளை யாட்டுக்கழக அணிசார்பாக அமல் 4 பந்துப் பரிமாற்றங் கள் பந்து வீசி 23 ஓட்டங்க ளுக்கு 3 இலக்குகளையும், றோய் 2 பந்துப் பரிமாற்றங் கள் பந்து வீசி 18 ஓட்டங் களுக்கு 2 இலக்குகளையும், ஞானம் 4 பந்துப் பரிமாற் றங்கள் பந்து வீசி 20 ஓட்டங் களுக்கு ஒரு இலக்கினையும், கவிஸ் 2 பந்துப் பரிமாற்றங் கள் பந்து வீசி 16 ஓட்டங் களுக்கு ஓர் இலக்கினை யும், வீழ்த்தினர். (த-23)

நட்சத்திர அணிகளின் ஆட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.22
மாலுசந்தி மைக்கல் விளை யாட்டுக்கழகம் யாழ் மாவட் டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடந்தும் 7பேர் பங்கு கொள் ளும் நட்சத்திர அணிக ளுக்கு இடையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றஆட்டங்களில் வெற்றி பெற்றஅணிகளின் விவரம் வருமாறு:-
முதலில் இடம் பெற்ற ஆட் டத்தில் பருத்தித்துறை ஜக் கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொற்றா வத்தை றேஞ்சர்ஸ் விளை யாட்டுக்கழக அணிமோதிக் கொண்டது.
இதில் கொற்றாவத்தை றேஞ் சர்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலை மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப் பாய் ரெட் றேஞ்சர்ஸ் விளை யாட்டுக் கழக அணிமோதிக் கொண்டது.
இதில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகஅணி 3:0 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

அபாரமான ஆட்டத்தால் ஞானமுருகனுக்குக் கிண்ணம்

யாழ்ப்பாணம், ஒக்.22
யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் இரசேந்திரன் மகிந்தன் வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட 7 பேர் பங்குகொள் ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட் டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது.
நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இறுதியாட்டம் இடம் பெற்றது.
இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
ஆட்டநேரமுடிவில் இருஅணியினரும் தலா 2 கோல்களை அடித்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இதில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது.
இதில் சிறந்த வீரர்களாக குருநகர் பாடும்மீன் விளையாட் டுக்கழக அணி வீரன் மயூரன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி வீரன் ஜெகன் ஆகியோர் தெரி வானார்கள். (23)

திருகோணமலை லீக் நடத்திய உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.22
திருகோணமலை உதைபந் தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டக் கழகங்கள், பாடசாலை அணிகளுக்கிடை யிலான 5பேர் பங்குகொள் ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதி யாட்டங்கள் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றன. இதில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங் கள் வருமாறு:-
விளையாட்டுக் கழகங்க ளுக்கு இடையிலான இறுதி யாட்டத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈஸ்ரன் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் சென்.அன்ரனிஸ் விளை யாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
பாடசாலைகளுக்கு இடையி லான 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் திருகோண மலை சென்.ஜோசப் கல்லூரி அணியை எதிர்த்து அல் அக்ஷா கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் சென்.ஜோசப் கல்லூரி அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது.
பாடசாலைகளின் 17வயதுப் பிரிவு அணிகளுக்கு இடை யிலான இறுதியாட்டத்தில் அல்அக்ஷா கல்லூரி அணியை எதிர்த்து ஜமாலியா வித்தி யாலய அணிமோதிக் கொண் டது.
இதில் அல்அக்ஷா வித்தியா லய அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம் பியன் ஆனது. (த-23)

கூடைப்பந்தாட்டத்தில் பாடசாலை அணிகள் அசத்தல்

யாழ்ப்பாணம், ஒக்.22
முன்னாள் மாணவ முதல் வர் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண் ணத்துக்காக யாழ். மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை நடந்தும் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையி லான 19வயது ஆண்,பெண் இருபாலாருக்கமான கூடைப் பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-
பெண்களுக்கான ஆட்டங் களில் முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ்.இந்து மக ளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண் டது.
இதில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி 34:26என்ற புள்ளிஅடிப்படையில் வெற்றி பெற்றது.
பெண்களுக்கான ஆட்டங்க ளில் இரண்டாவது இடம் பெற்ற ஆட்டத்தில் திருக் குடும்பக் கன்னியர் மட அணியை எதிர்த்து இராம நாதன் மகளிர்கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் திருக்குடும்ப கன்னியர் மட அணி 49:18என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற் றது.
ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 43:20 என்ற புள்ளிஅடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

ஆர்சனல் வெற்றி

நோர்விச் சிற்றி அணிக்கு எதிரான பிரிமியர் லீக் உதைபந்தாட்டத் தொடரின் லீக் போட்டியில் ஆர்சனல் அணி வெற்றி பெற்றது.

இங்கிலாந்தின் பல்வேறு பகுதியில் பிரிமியர் லீக் உதைபந்தாட்டத் தொடர் நடக்கிறது. நேற்று முன் தினம் நடந்த லீக் போட்டியில் ஆர்சனல், நோர்விச் சிற்றி அணிகள் மோதின.

போட்டியின் முதல் பாதியில் ஆர்சனல் அணிக்கு, ஜாக் (18ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு நோர்விச் சிற்றி அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

பின் இரண்டாவது பாதியில் தொடர்ந்து அசத்திய ஆர்சனல் அணியில் ஒசில், ஆரோன் ஆகியோர் கோல் அடித்தனர்.

கடைசிவரை போராடிய நோர்விச் சிற்றி அணிக்கு ஜனாதன் ஒரு கோல் அடித்து ஆறுதல் அளித்தார். முடிவில், ஆர்சனல் அணி, 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த)

ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றவர் தாய்லாந்தில் சுட்டு படுகொலை

ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற வீரர் சுட்டுக் கொல்லப்பட்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தாய்லாந்தைச் சேர்ந்த துப்பாக்கி சுடும் வீரர் ஜக்ரிட் பனிச்படிகம்(வயது-40).

இவர் ஒலிம்பிக் போட்டியில் இரண்டு தடவைகள் பங்கேற்றுள்ளார். இதில் பதக்கமும் வென்றுள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

அப்போது மற்றொரு மோட்டார் சைக்கிளில் இவரை பின் தொடர்ந்த இரண்டு மர்ம மனிதர்கள் அவர் மீது சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர். இதனால் உடலில் குண்டு பாய்ந்த அவர் அதே இடத்தில் பரிதாபமாக உயிரி ழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்துள்ள பொலிஸார், கொலையாளியைத் தேடி வருகின்றனர்.

இவருக்கும், இவரது மனைவிக்கும் சுமுகமான உறவு இல்லை. இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். இதன் காரணமாக இவர் கொலை செய்யப்பட்டுள்ளாரா என்ற கோணத்திலும் விசாரணை நடக்கிறது. (த)

100 கோல் அடித்து ஜெராட் சாதனை

நியூகேசில் அணிக்கெதிராக கோல் அடித்த லிவர்பூல் அணியின் அணித்தலைவர் ஸ்ரீவன் ஜெராட் பிறீமியர் உதைபந்தாட்ட அரங்கில் தனது 100ஆவது கோல் அடித்துச் சாதனை படைத்தார்.

இங்கிலாந்தில் உள்ளூர் அணிகள் பங்கேற்கும் பிறீமியர் உதைபந்தாட்ட தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் நியூகேசில், லிவர்பூல் அணிகள் மோதின.

பரபரப்பான இந்தப் போட்டி, ஆட்டநேர முடிவில் 2-2 என்ற கோல் கணக்கில் சமனானது. இப்போட்டியின் 42ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை லிவர்பூல் அணியின் அணித்தலைவர் ஸ்ரீவன் ஜெராட் கோலாக மாற்றினார். இதன்மூலம், பிறீமியர் உதைபந்தாட்ட அரங்கில் தனது 100ஆவது கோல் அடித்து சாதனை படைத்தார். சர்வதேச போட்டியில் இங்கிலாந்து அணிக்காக விளையாடி வரும் ஜெராட் 1998ஆம் ஆண்டு முதல் லிவர்பூல் அணிக்காகப் பிறீமியர் உதைபந்தாட்டத் தொடரில் விளையாடி வருகிறார்.

இதுவரை 448 போட்டியில் 100 கோல் அடித்துள்ளார். இதன்மூலம் பிறீமியர் உதை பந்தாட்ட அரங்கில் 100 கோல் அடித்த 24 ஆவது வீரர் என்ற பெருமை பெற்றார். (த)

இஷாந்த் சர்மாவுக்கு ஆறுதல் கூறிய பல்க்னர்



இறுதிக்கட்டத்தில் பந்துவீசும் அனைவருக்கும் இக்கட்டான நிலை வரும். இதற்காகக் கவலைப்படக்கூடாது என ஆஸ்திரேலிய அணியின் பல்க்னர் கூறியுள்ளார்.

இந்தியா- ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான மூன்றாவது ஒருநாள் போட்டியில் 4 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் இஷாந்த் சர்மா வீசிய 48ஆவது பந்துப்பரிமாற்றத்தில் பால்க்னர் 30 ஓட்டங்கள் எடுத்து ஆஸ்திரேலிய அணியை வெற்றி பெறச் செய்தார்.

இது குறித்து பால்க்னர் கூறுகையில், இறுதிக் கட்டத்தில் பந்துவீசும் அனைவருக்கும் இஷாந்துக்கு ஏற்பட்டது போன்ற சூழ்நிலை உருவாகும்.

நானும் அதுபோன்றதொரு நிலையை சந்தித்துள்ளேன். எனவே அதுபற்றிக் கவலைப்படத் தேவையில்லை. சில நேரங்களில் நல்ல பந்துப்பரிமாற்றங்களை வீசி அணிக்கு வெற்றியையும் தேடித் தர முடியும். இதுதான் கிரிக்கெட் விளையாட்டின் தன்மை.

இரண்டாவது ஒருநாள் போட்டியில் தோல்வி அடைந்தமை வருத்தம் அளித்தது. இந்நிலையில் மூன்றாவது ஒருநாள் போட்டியில் எதிரணியின் துடுப்பாட்டத்தின் போது ஓட்டங்களை நன்கு கட்டுப்படுத்தினோம். ஆனால் டோனியின் அற்புதமான ஆட்டத்தால் 300 ஓட்டங்களை இந்திய அணி தொட்டது. நாங்கள் மிதவேகப்பந்து வீச்சாளர்களின் பந்துப்பரிமாற்றத்தில்தான் அடித்து ஆட வேண்டும் என்று நினைத்தோம். அஸ்வினின் பந்துவீச்சில் அடித்து ஆடாததற்கு அதுவே காரணம். இருப்பினும், இறுதியில் நாங்கள் வெற்றி பெற்றது ஆறுதல் தருவதாக அமைந்தது. இந்தத் தொடரில் மீண்டும் முன்னிலையும் பெற்றுள்ளோம் - என்றார். (த)

தென்னாபிரிக்கப் பயணத்துக்கு இந்தியக் கிரிக்கெட் அனுமதி

தென்னாபிரிக்கச் சுற்றுப் பயணத்துக்கு இந்திய கிரிக்கெட் சபை அனுமதி அளித்துள்ளது.

இந்தியா அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் மற்றும் 7 ஒருநாள் போட்டிகளில் விளையாடத் திட்டமிட்டிருந்தது. இதற்கான அட்டவணையைத்தங்களுடன் கலந்து கொள்ளாமல் தன்னிச்சையாக முடிவு செய்ததால் தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபையின் மீது இந்தியக் கிரிக்கெட் சபை அதிருப்தி அடைந்தது.

இதனால் இந்தத் தொடருக்கு முன்பாக மேற்கிந்தியத் தீவுகள் அணியை வந்து விளையாடுமாறு கேட்டுக் கொண்டதால், தென்னாபிரிக்கச் சுற்றுப்பயணம் கேள்விக் குறியானது.

இதனையடுத்து இரு தரப்பினருக்கு இடையே நடந்த சமாதானப் பேச்சைத் தொடர்ந்து, தொடருக்கு அனுமதி அளிக்க இந்தியக் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

இதற்கான அறிவிப்பு சென்னையில் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெற உள்ள சபைச் செயற்குழுக் கூட்டத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் மட்டுமே இடம் பெறும் எனவும், ஒரு 20/20 போட்டியைச் சேர்க்குமாறு தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை தரப்பில் விடுக்கப்பட்ட வேண்டுகோளை இந்தியக் கிரிக்கெட் சபை நிராகரித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. (த)

இந்திய அணியில் மாற்றம் இல்லை



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மீதமுள்ள ஒருநாள் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியில் மாற்றம் எதுவும் செய்யப்பட வில்லை.

இந்தியா வந்துள்ள ஆஸ்தி ரேலிய அணி ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் மூன்று போட்டிகளின் முடிவில் ஆஸ்திரேலியா 2-1 என முன்னிலை வகிக்கிறது.

மீதமுள்ள நான்கு போட்டிகள் ராஞ்சி, கட்டாக், நாக்பூர் மற் றும் பெங்களூர் மைதானங் களில் நடைபெறவுள்ளன.

இந்தப்போட்டிகளில் பங்கேற் கும் இந்திய அணி வீரர்கள் அறிவிக்கப்பட்டனர். இதில் மொஹாலியில் நடந்த மூன்றா வது போட்டியில் ஒரே பந்துப் பரிமாற்றங்களில் 30 ஓட்டங்கள் வழங்கி, தோல்விக்கு வித்திட்ட வேகப்பந்துவீச் சாளர் இஷாந்த் சர்மாவுக்கு இடம் கிடைக்காது என எதிர் பார்க்கப்பட்டது.

ஆனால் முதல் மூன்று போட் டிக்கு தெரிவு செய்யப்பட்ட அதே வீரர்கள், மீதமுள்ள நான்கு போட்டியிலும் விளையாடுவார் கள் என இந்தியக் கிரிக்கெட் சபையின் தெரிவுக்குழு அறி வித்துள்ளது.

அணி விவரம்: டோனி (அணித் தலைவர்), ஷிகர்தவான், ரோகித் சர்மா, விராத் கோஹ்லி, சுரேஷ் ரெய்னா, யுவராஜ் சிங், ரவிந் திர ஜடேஜா, அஷ்வின், புவ னேஷ்வர் குமார், இஷாந்த் சர்மா, வினய் குமார், அமித் மிஸ்ரா, அம்பதி ராயுடு, முகமது ஷமி, ஜெயதேவ் உனத்கத். (த)

தோல்விக்காக வீரர்களை நீக்கமுடியாது



மாஹாலி ஒருநாள் போட்டியில் இஷாந்த் சர்மா மோசமான முறையில் பந்து வீசி இந்தியா வைத் தோற்கடித்து விட்டதால் ரசிகர்கள் பெரும் கோபத்துட னும், ஆதங்கத்துடனும் உள் ளனர்.

இந்நிலையில் அவருக்கு ஆதர வாக மறைமுகமாக அணித் தலைவர் டோனி கருத்து தெரி வித்துள்ளார்.

ஓரிரு போட்டிகளின் முடிவுகளை வைத்து யாரையும் அணியிலி ருந்து நீக்குவது சரியாக இருக் காது என்று அவர் கருத்து தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகை யில், அடிக்கடி அணியில் மாற் றம் செய்தால் அது பாதிப்பையே தரும். ஓரிரு போட்டிகளில் சரி யாக விளையாடாமல் போவதை வைத்து அவர்களை நீக்குவது என்பது நியாயமாக இருக்காது. தோல்வி என்பது எதிர்பாராத துதான். எனவே அந்தத் தோல் விக்கு சரியாக விளையாடாத வீரர்களை மொத்தமாக குற்றம் சாட்டி வெளியேற்றுவது சரியாக இருக்காது. அது அணிக்கு நல் லதும் அல்ல. அவர்களுக்கு அனு பவம் கிடைக்க உதவ வேண் டும். அப்போதுதான் அவர்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியும். அதற்கு அவர்களும் அணியில் இருப்பது அவசியம். அவர்கள் உண்மையில் சிறந்த வர்கள்தான். அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்றார் டோனி.

இதன் மூலம் ஆஸ்திரேலியா வுக்கெதிரான மீதமுள்ள 4 போட்டிகளில் இஷாந்த் சர்மா நீக்கப்பட வாய்ப்பில்லை என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த)

உபாதையில் டேல் ஸ்ரெய்ன்



ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக் கெட் சுற்றுப்பயணம் மேற்கொண் டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையி லான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியு மான டெஸ்ட் போட்டியில் தென்னா பிரிக்காவின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் டேல் ஸ்ரெய்ன் பங்கு பற்றுவது தொடர்பாகச் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

உலகின் முதல்நிலை பந்துவீச்சாள ரான டேல் ஸ்ரெய்ன், முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்குபற்றியிருந் தார். ஆனால் நேற்று முன்தினம் பயிற்சிகளின் போது அவர் உபாதை காரணமாகப் பயிற்சிகளிலிருந்து வெளியேறியிருந்தார். அதனைத் தொடர்ந்து நேற்றைய தினமும் பயிற்சிகளில் ஈடுபடவில்லை.

இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை ஆரம்பிக்கவுள்ள நிலையில் அப்போட்டிக்கான முழுமையான உடற்தகுதியை டேல் ஸ்ரெய்ன் அடைந்து விடுவாரா என்ற சந் தேகம் காணப்படுகிறது. அவ்வாறு அவரால் உடற்தகுதியை அடைய முடியாது விடின் றோறி கிளெய்ன்வெல்ட்ற் அவருக்குப் பதிலாக அப்போட்டியில் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. உலகின் முதல்நிலை டெஸ்ட் துடுப்பாட்ட வீரரான தென்னாபிரிக் காவின் ஹசிம் அம்லா தனது இரண்டாவது குழந்தையின் பிறப்பினை எதிர்பார்த்து தென்னாபிரிக்காவிற்குச் செல்லவுள்ள நிலையில், முதல்நிலை பந்துவீச்சாளரான டேல் ஸ்ரெய்னையும் இழக்கும் அபாயத்தை உலகின் முதல்நிலை டெஸ்ட் அணியான தென்னாபிரிக்கா எதிர்கொண்டுள்ளது.

ஹசிம் அம்லாவும், டேல் ஸ்ரெய்னும் 2ஆவது டெஸ்ட் போட்டியில் பங்குபற்றுவார்களா, இல்லையா என்ற முடிவு இன்று எடுக்கப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (த)

பாகிஸ்தான் அணி அறிவிப்பு

ஐக்கிய அரபு இராச்சியத்துக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான பாகிஸ் தான் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மிஸ்பா உல் ஹக் தலைமையில் அறிவிக்கப்பட் டுள்ள இந்தக் குழாம் 16 பேர் கொண்ட குழாமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அநேகமாக எதிர்பார்க்கப்பட்ட வீரர்களாக அறி விக்கப்பட்டுள்ள இந்தக் குழாமில், அண்மையில் நிறைவுபெற்ற சிம்பாப்வே அணிக்கெதிரான ஒரு நாள் சர்வதேசப் போட்டிக் குழாமில் இடம் பெற்றிருக்காத உமர் அக்மல், சொஹைப் மசூத், சொஹைல் தன்வீர், வகாப் றியாஸ் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர் அந்தப் போட்டிகளுக்கான குழாமில் இடம்பெற்றிருந்த அன்வர் அலி, அசத் அலி, ஹாரிஸ் சொஹைல் ஆகியோருக்கு இக்கு ழாமில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

தென்னாபிரிக்காவுக்கெதிரான டெஸ்ட் குழாமில் சேர்க்கப்பட்டிருக்காத சிரேஷ்ட வீரரான மொஹமட் ஹபீஸ் இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:

மிஸ்பா உல் ஹக், அஹமட் ஷெஷாத், நசீர் ஜம் ஷெத், மொஹமட் ஹபீஸ், உமர் அமின், உமர் அக்மல், ஷகிட் அப்ரிடி, சுயீட் அஜ்மல், அப்துர் ரெஹ் மான், மொஹமட் இர்பான், ஜுனைட் கான், சொஹைல் தன்வீர், வகாப் றியாஸ், சொஹைப் மசூத், அசத் ஷபீக், சப்ராஸ் அஹமட் (த)

French Classes பிரெஞ் வகுப்புகள்

French மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேபொரு சர்வதேச நிறுவனம் Alliance Française de Jaffna (AF) மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகின்றன. முற்கூட்டியே (தொடர்பே முலமும்) அனுமதிகளைப் பெறுவது சிறந்தது.

மேலதிக விபரங்களுக்கு T.P.021.222.8093 / நேரில்
61, Kachcheri-Nallur Road, Jaffna
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

விற்பனையாளர்கள் தேவை

"ஹாட்வெயர்" கடைகளில் வேலை செய்த அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை.
*கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
*ஆர்வமுடையோர் நேரில் வரவும்.
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (சி / 13152)
212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (4)

லண்டன் நாட்டிற்கு உடனடிப் பயணம்

காரியாலய உதவியாளர்- 03 பேர் (பெண் மட்டும்)
உடனடியாகத் தேவை. அதி உயர் சம்பளம், ஒரு மாதத்தில் பயணம்.
தகைமை: சாதாரணதரத்தில் ஆங்கிலம் உட்பட, உயர் தரத்திலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
குறிப்பு: ஆங்கிலம் சரளமாகப் பேசக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
20-35 வயதிற்கு உட்பட்டிருத்தல் விரும்பத்தக்கது.
மேலதிக தகைமை உடையவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
LANKA VOICE தொடர்பு: 075 065 0084
(29821)(6.3.4)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர், தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

"எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்"

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 26.10.2013 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. மாலை 01.00-03.00
4. மாலை 03.00-05.00(இடமில்லை)

வாரநாள் (செவ்வாய், வியாழன்) பிரிவுகள் ஆரம்பம் 24.10.2013

1. காலை 09.00-11.00
2. காலை 11.00-01.00

குறிப்பு: பயிற்சியில் இணைந்துகொள்ள அடிப்படை ஆங்கில அறிவு அவசியமில்லை

SAAMSON Language School
279, ஆஸ்பத்திரி வீதி, பாழ்நகர். 077 621 4567

மிகப் பிந்திய புதிய அதிரடி

★ ஐரோப்பிய நாடான போலாந்தில் படிக்க உழைக்க வெறும் 7 லட்சம் மட்டும் போதுமானது.

★ கனடாவில் படிக்க 3வருட விசாவுடன் உழைக்க அரிய வாய்ப்பு

★ இத்தாலி சட்டரீதியாக படிக்க உழைக்க 1 வருட விசா

7 நாட்களும் காலை 08.30 - பி.ப. 6.00 வரை

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.